# சமூகக்கல்வி

# ஆண்டு 11

## அபிவிருத்தி: உலகம், இலங்கை

# குறிப்புகள்

## வினா~விடைகள்

நா. மயில்வாகனம
B. A. (Cey), (Modern History), Dip-in-Ed. (Cey)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகக்கல்வி

## குறிப்புகள்

## ஆண்டு
# 11

### பரீட்சைக்கான வினா - விடைகள்

நா. மயில்வாகனம் B. A. (Cey) (History) Dip-in-Ed(Cey)

"குரு" வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்திய ஆறாம் பதிப்பு : டிசெம்பர் 1997
உரிமை : ஆக்கியோனுக்கு

- சமூகக்கல்வி ஆண்டு 11 புதிய பாடநூலினை இலகுவாக விளங்கிக் கொள்ளவும். பரீட்சைக்குத் தயார் செய்யவும் ஏற்றவிதத்தில் குறிப்புகள் தரப்பட்டுள்ளன.
- G. C. E. (O/L) பரீட்சையில் பகுதி I, II இல் உள்ள வினாக்களுக்கு விடைகளை அறியவும் அவற்றை விளக்கி எழுதவும் உதவும் வகையில் வினா - விடைகள் அமைந்துள்ளன.
- மாணவர்கள் விடைகள் எழுதுவதற்கு இலகுவாக விடைகளுக்கான குறிப்புகள் தடித்த எழுத்திலும் விளக்கங்கள் அவற்றினைத் தொடர்ந்தும் தரப்பட்டுள்ளன.
- பயிற்சி வினாக்கள், கடந்தகால O/L பரீட்சை வினாக்களை அமைப்பில் ஒத்தவை. ஒவ்வொரு பகுதியின் முடிவிலும் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.
- எனது வரலாறு, சமூகக்கல்வி நூல்களுக்கு மாணவர்கள் ஆசிரியர்களிடையே கிடைக்கும் வரவேற்பு மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தருகிறது.

ஆக்கியோன்
முன்னைய ஆசிரியர்
சென்ஜோன்ஸ் கல்லூரி
யாழ்ப்பாணம்

குரு கல்விச்சேவை

37/2, செட்டியார் தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்

விலை ரூபா: 55/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் அத்தியாயம்

# வளங்கள்

**1. வளங்கள் என்றால் என்ன?**

(1) மனித தேவைகளைப் பூர்த்தி செய்யப்பயன்படுத்தப்படும் பொருள்கள் வளங்கள் எனப்படும்.

(2) மனிதன் சில வளங்களைத் தான்வாழும் சூழலிலிருந்து முயற்சி மூலம் பெறுகிறான். உ+ம்: இரும்பு. நிலக்கரி. கனிப்பொருளெண்ணை. சில வளங்களை முயற்சியின்றிச் சுலபமாக. இலவசமாகப் பெறுகிறான். உ+ம்: சூரிய ஒளி. காற்று.

**2. வளங்களை இரு பகுதிகளாகப் பிரிக்குக.**

(1) வளங்களைப் பௌதீக வளங்கள். மனித வளங்கள் என இரு முக்கிய பகுதிகளாகப் பிரிக்கலாம்.

(2) பௌதீகவளங்கள் நிலம். நீர். வளி ஆகியவற்றுள் அடங்கும். மனிதனும் மனிதனுக்குள்ள வல்லமைகளும் மனிதவளங்களுள் அடங்கும்.

**3. மனித வளத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.**

(1) சூழலில் காணப்படும் எப்பொருளையும் வளமாக மாற்றி நுகரும் ஆற்றல் மனிதனிடமே காணப்படுகிறது. மனிதனிடம் உள்ள அறிவு. அனுபவம். ஆற்றல் இதற்குத் துணையாகின்றது.

(2) மனிதமுயற்சி மூலம் உற்பத்திக் காரணிகளின் உச்சப்பயன் பெறப்படுகின்றது. மனித உழைப்பில் (தொழில் திறன். உற்பத்தித்திறன்) அமையும் விணையாண்மையின் மூலம் மூலதனம் பெறப்படுகின்றது.

(3) மனித வளத்தின் உற்பத்தித்திறனை விருத்தி செய்யப் பயிற்சி தேவையாகும். கல்வி, நவீன தொழில்நுட்பம், தொழினுணுக்க முறை. சமுதாயப் பழக்க வழக்கங்கள். உளப்பாங்கு மூலம் இப்பயிற்சியை வழங்கலாம்.

(4) எந்தவொரு வளத்துடனும் மனித காரணி சேரும்பொது பொருளாதார வளம் உண்டாகின்றது.

**4. பொருளாதார வளத்தின் முக்கிய அம்சங்களைத் தருக.**

(1) பொருள்களும் சேவைகளும் ஒரு பரந்த அடிப்படையில் பொருளாதார வளங்கள் எனப்படும்.

(2) மனித தேவைகளுக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய அனைத்தும் பொருளாதார வளங்கள் எனப்படும்.

(3.) மனிதனுடைய அறிவு. தேவைகள். ஆற்றல்கள் ஆகியவற்றைப் பொறுத்துப் பௌதிகச் சூழலிலிருந்து பொருளாதார வளங்கள் உருவாகின்றன.

(4) சனத்தொகை அதிகரிப்பு. மனித தேவைகளின் விரிவு. பொருளாதார வளங்களின் பற்றாக்குறைக்குரிய முக்கிய காரணங்களாகும்.

(5) பொருளாதார வளம் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் மாத்திரமன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் பற்றாக்குறையாக இருப்பதைக் காணலாம்.

5. **வளங்களின் நுகர்வு அதிகரித்தமைக்குரிய காரணங்களைத்தருக.**

(1) **உலக சனத்தொகை அதிகரிப்பு:** ஆண்டுதோறும் 1.7 வீதம் சனத்தொகை அதிகரித்தல். சனத்தொகை அதிகரிப்பு வளங்களின் தேவையை அதிகரிப்பதுடன் நெருக்கடியையும் ஏற்படுத்தும்.

(2) **தொழில்நுட்ப விஞ்ஞான வளர்ச்சி:** கனிய வளங்களின் பிரயோகம் இதனால் விரைவாக அதிகரித்துள்ளது. பலபொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. உ+ம்: கைத்தொழில் வளர்ச்சி. விண்வெளி பயணங்கள் போன்றவற்றால் வளங்களின் நுகர்வு அதிகரித்துள்ளது.

(3) **மனித தேவைகள் அதிகரிப்பு உயர்ந்த வாழ்க்கைத்தர எதிர்பார்ப்பு:** விஞ்ஞான வளர்ச்சி. நாகரிக வளர்ச்சியால் தேவைகள் சிக்கார்ந்தவையாக அமைந்துள்ளன. வரையறையற்ற இத்தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடுதலான வளங்கள் பயன்படுத்தப்படுகின்றது.

6. **வளங்களை ஏன் பாதுகாக்க வேண்டும்? காரணங்கள் தருக?**

(1) **வளங்கள் வரையறைக்குட்பட்டனவாகயிருத்தல்:** பாவனை அதிகரிக்க அதன் அளவு குறைவடையும். குறிப்பிட்ட நாடுகளே உற்பத்தி செய்வதாலும் வரையறை ஏற்பட்டுள்ளது.

(2) **சூழலின் சமநிலை பாதிப்படையாமலிருப்பதற்காக:** வளங்களின் அசமநிலை ஏற்கனவே உள்ளது. மனித செயற்பாடுகளின் அதிகரிப்பால் சமநிலை பாதிப்படையலாம்.

(3) **சில வளங்கள் உருவாக நீண்டகாலம் செல்லும்:** தொடர்ச்சியாக இவை உருவாகமாட்டா. உ+ம்:பொசையில் எரிபொருட்கள்.

(4) **அபிவிருத்தி பாதிப்படைதல்:** உ+ம்: காட்டுவளம் அழிக்கப்படுவதால் மண். நீர்வளம். காலநிலை பாதிக்கப்படுகிறது.

(5) **சனத்தொகை வளர்ச்சி:** எதிர்காலச் சந்ததியினரைக் கருத்திற்கொள்ளல். சிக்கனமாக வளங்களைப் பயன்படுத்தாவிடின் இன்று சுலபமாகக் கிடைக்கும் வளங்களுக்கும் எதிர்காலத்தில் தட்டுப்பாடு தோன்றும். வருங்காலச் சந்ததியினர் வளங்களைப் பயன்படுத்தும் உரிமையை இழக்க நேரிடும்.

7. **புதிய சக்தி வளங்கள் ஆறு தருக?**

(1) சூரியசக்தி (2) இயற்கை வாயு (3) அலைச்சக்தி (உயரலை தாழலை)
(4) கருவலு (5) உயிரியல் வாயு (6) நில வெப்பம்

8. **வளங்களைப் பேணுவதற்கான வழிகளைத் தருக?**

(1) **சிக்கனமாகப்பயன்படுத்தல்:** உ+ம்: பயன்படுத்திய பின் தள்ளப்படும் இரும்பை மீண்டும் பயன்படுத்துவதால் இரும்புத்தாது அகழ்தலைக் குறைத்துக் கொள்ளலாம். இன்றும் சில அபிவிருத்தியடைந்த நாடுகள் பாரக்கைத் தொழிலுக்குரிய மூலப் பொருளாகப் பழைய இரும்பினைப் பயன்படுத்துகின்றன. உ+ம்: 1970-1980 காலப்பகுதியில் இரும்பின் உபயோகம் 100% அதிகரித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) **திட்டமிட்டுப் பயன்படுத்தல்:** உருவாக நீண்டகாலம் செல்லும் வளங்களைத் திட்டமிட்டுப் பயன்படுத்தல். உ+ம்: பொசைல் எரிபொருளைக் கொண்டு அத்தியாவசியப் பொருள்களை மாத்திரம் உற்பத்திசெய்தல். ஏனைய கருமங்களுக்கு மாற்றீடான வலுவளத்தைப் பயன்படுத்தல்.

(3) **உச்சப் பயன்பெறுதல்:** நில வளம் வரையறுக்கப் பட்டிருப்பதால் பொருத்தமான தொழில்நுட்பம் சூழலுக்கேற்ப விதைகளைப் பயன்படுத்தல். நீர்வளத்தைக் கொண்டு ஆறுகளைத் திசை திருப்பி நீர்த்தேக்கங்கள் அமைத்து, திட்டமிட்ட நீர்முகாமைத்துவம் மூலம் உச்சப் பயன்களைப் பெறுதல்.

(4) **புதிய கனியவள ஆய்வுகள்:** மாற்றுச்சக்தி மூலகங்களைத் தேடுதல், பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தல், தொழில்நுட்ப முறைகளைப் பிரயோகித்தல், ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

9. **வளங்களின் அசமநிலை என்றால் என்ன? சுருக்கமாக விளக்குக.**

வளங்களின் சமனற்ற பரம்பலை இது குறிக்கும். இயற்கை வளங்கள் எல்லா நாடுகளிலும் ஒரே அளவில் காணப்படுவதில்லை. சிலநாடுகளில் காணப்படும் நிலநெய், காரீயம், இரும்பு போன்ற மூலவளங்கள் ஏனைய நாடுகளில் காணப்படுவதில்லை. மத்தியமகிழக்கில் கனிப்பொருள் எண்ணெய்வளம் அதன் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுகிறது. அமெரிக்காவில் பஞ்சவாவிகள் கைத்தொழில் பிரதேசமாக மாறியமைக்கு அங்குள்ள கனியவளங்கள் காரணமாகும்.

10. **அபிவிருத்தியடைந்த நாடுகளின் வளங்கள் விருத்திக்குத் தடையாக உள்ள காரணிகளைத் தருக.**

(1) தொழில்நுட்ப அறிவுக்குறைபாடுகள்.
(2) மூலதனப் பற்றாக்குறை நிலவுதல்.
(3) முகாமைத்துவம் சம்பந்தமான பிரிச்சனைகள் காணப்படல்.
(4) போர் கருவிகள் உற்பத்திக்காகப் பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்தல்.
(5) பொருளாதார முறைகளை மாற்றியமைப்பதில் உள்ள தடைகள்.

11. **எரிபொருள் நெருக்கடிக்கான காரணங்கள் மூன்று தருக.**

(1) **உலகச்சக்தி நுகர்வில் எரிபொருள் அதிகமாகக் காணப்படல்:** பெற்றோலியம் 45% ஆகவும், நிலக்கரி 25% ஆகவும் உள்ளது. உலகச்சக்தி நுகர்வு ஆண்டு தோறும் 7% வரையில் அதிகரித்துச் செல்கிறது.

(2) **நவீன தொழில்நுட்ப அபிவிருத்தி:** போக்குவரத்துத் துறைகள், கைத்தொழில் உற்பத்திக்கு பெற்றோலியம் முக்கியசக்தித் தோற்றுவாயாக உள்ளது. வெப்பச் சக்தியை உற்பத்திசெய்யும் திறனும், இலகுவாக ஏற்றியிறக்ககூடியதாக இருந்தலும் பெற்றோலியத்தின் தேவை அதிகரிக்கக் காரணமாகிறது.

(3) **பெற்றோலிய வளம் வரையறுக்கப்பட்டிருத்தல்:** சில நாடுகள் மாத்திரம் உற்பத்தி செய்தல், நீண்டகால ஆராய்ச்சியின் பின்னர் எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்படல், ஒபெக் நிறுவனம் பெற்றோலிய உற்பத்தியைக் கட்டுப்படுத்தல், தரைக்கடியில் உள்ள பெற்றோலியத்தின் அளவை உறுதியாக அறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதிருத்தல்.

12. சூரிய சக்தியை நமது நாடு பயன்படுத்துவதில் உள்ள சாதகமான, பாதகமான காரங்களைத் தருக.

(அ) சாதகமான காரணிகள்:

1. நமது நாடு ஆண்டு முழுவதும் சமமான சூரிய கதிர்ப்பைப் பெறுகின்றது.
2. கிடைத்தளத்தில் ஒருநாட்பொழுதில் ஒரு சதுரகிலோ மீற்றருக்கு சுமார் 5 கிலோ உவாற்று மணி சக்தி சூரியனிடமிருந்து பெறலாம்.
3. சூரியசக்தியை நேரடியாக மின்சாரசக்தியாக மாற்றக்கூடிய தொழிநுட்பம் நமதுநாட்டில் பரிசோதனை மட்டத்தையும் தாண்டி வளர்ச்சியடைந்துள்ளது.
4. கனிய எண்ணெய்க்காகச் செலவிடும் அன்னியச் செலாவணியை மீதப்படுத்தலாம்.
5. நீர் மின்சாரத்தினைப் பெறுவதிலுள்ள தடைகளால் ஏற்படும் சிக்கல்களை நீக்கலாம்.
6. சூரிய சக்தி நுகர்ச்சியினால் தீர்ந்துபோகாது.

(ஆ) பாதகமான காரணிகள்:

1. சூரிய ஒளியின் செறிவு வேறுபடுவதால் பிரச்சினைகள் தோன்றலாம்.
2. ஆரம்பத்தில் போதியளவு தொழிநுட்பப் பயன்பாடு அவசியமாக இருத்தல்.

## இரண்டாம் அத்தியாயம்

# பொருளாதார முறைகள்

13. பொருளாதார முறை என்றால் என்ன?

பொருளாதார முறை என்பது ஒரு நாட்டு மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்தற் பொருட்டு அந்நாட்டு வளங்களைப் பயன்படுத்துவதற்கு வகுக்கப்படும் ஓர் ஒழுங்கினைக் குறிக்கும். பொருளாதார பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்குச் சமுதாயம் மேற்கொள்ளும் வழிவகைகளைப் பொறுத்துப் பொருளாதார முறைகள் வேறுபடும்.

14. சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய பொருள்களும் சேவைகளும் எவ்வாறு பெறப்படுகிறது?

மூலதனம், மனிதஉழைப்பு, தொழில்நுட்பம் போன்ற காரணிகளைப் பயன்படுத்திப் பெறப்படுகின்றது. மூலதனம் என்னும் போது பணம், இயந்திர சாதனங்கள், கருவிகள், ஆயுதங்கள், தொழிற்சாலைகள், கட்டிடங்கள் போன்றவையாவும் கருதப்படும்.

15. பொருளாதார முறைகளுக்குரிய முக்கிய அம்சங்கள் யாவை?

பொருளுற்பத்தி, மனிதவுழைப்பு, பண்டமாற்றுமுறை, மூலதனம், இலாபம், வட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு பொருளாதார முறையிலும் இவை ஒவ்வொருவழிகளிலே நிருவகிக்கப்படும்.

16. உலகில் காணப்படும் மூன்றுவகைப் பொருளாதார முறைகளும் யாவை? அவை எவ்வடிப்படையில் வேறுபடுகின்றது?

(1) முதலாளித்துவப் பொருளாதாரமுறை

(2) சமவுடமைப் பொருளாதாரமுறை

(3) கலப்புப் பொருளாதார முறை

உற்பத்திக் காரணிகள் யாரால் நிருவகிக்கப்படுகின்றன? அவை யார்வசம் இருக்கின்றன? என்பவற்றைப் பொறுத்து இம் மூன்று முறைகளும் ஒன்றுக் கொன்று வேறுபடுகின்றன.

17. முதலாளித்துவப் பொருளாதார முறையில் காணப்படும் முக்கிய இயல்புகளைத் தருக.

(1) **முதலீட்டு மூலம் தனியாருக்குச் சொந்தமாயிருத்தல்:** உற்பத்திக் காரணிகளை யுடையவர்கள் தமது பணத்தை முதலீடு செய்து உற்பத்தி வேலைகளைக் கண்காணிப்பர்.

(2) **இலாப நோக்கம் காணப்படல்:** சமுதாயத்திற்கு அத்தியாவசியமான பொருள் களையன்றித் தமக்கு அதிக இலாபத்தைக் கொடுக்கக்கூடிய பொருள்களை உற்பத்தி செய்வர். அத்தியாவசியப் பொருள் உற்பத்தியை விட போர்கருவிகளை உற்பத்தி செய்வதில் ஆர்வம் காட்டுவர்.

(3) **விலையின் முக்கியத்துவம் காணப்படல்:** உற்பத்தி பற்றிய தீர்மானங்கள் கேள்வி நிரம்பல் மூலம் நிர்ணயிக்கப்பட்டு உற்பத்தி வேலைகளைக் கண்காணிக்கும் தனியாரால் மேற்கொள்ளப்படும்.

(4) **நுகர்வோர் சுதந்திரம் தொழில் சுதந்திரம் காணப்படல்:** நுகர்வோர் விரும்பியபடி எப்பொருளையும் பெறும் இறைமை உண்டு. விரும்பிய தொழிலில் ஈடுபட, பயன்படுத்த ஒப்பந்தம் செய்யச் சுதந்திரம் உண்டு.

(5) **போட்டி. போராட்டம் காணப்படல்:** நுகர்வோர் உற்பத்தியாளர் தொழிலாளர் களுக்கிடையில் போட்டி. முதலாளிக்கும் தொழிலாளிக்குமிடையிலும் முதலுக்கும் உழைப்புக்குமிடையிலும் போராட்டம் காணப்படும்.

18. முதலாளித்துவப் பொருளாதார முறையால் ஏற்படும் நன்மைகளைத் தருக?

(1) **உற்பத்தி அதிகரிப்பு காணப்படல்:** புதிய முறைகள். கண்டுபிடிப்புகள் ஏற்படும். உற்பத்திச்சாதனங்கள் திறமையாகப் பயன்படுத்தப்படும்.

(2) **மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து காணப்படல்:** தரத்திலும் அளவிலும் கூடிய பொருட்களை விரும்பிய அளவில் மக்களால் பெறமுடிகிறது.

(3) **திறமை தன்னிச்சைக்கு இடமளிக்கப்பட்டிருத்தல்:** போட்டி நிலவுவதால் திறமைக்கு அதிகளவு வருமானம் கிடைக்கும். உற்பத்தி தன்னிச்சையான விலைமுறையால் தீர்மானிக்கப்படும்.

(4) **கடின உழைப்பு சுதந்திர உணர்வு காணப்படல்:** இலாப நோக்கிற்காக கடின உழைப்பு மேற்கொள்ளப்படுகிறது. நுகர்வோரின் விருப்பத்தின்படி சுதந்திரமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களைப் பெறமுடியும்.

(5) **இலவச, மானிய அடிப்படையில் உதவிகள் வழங்கக் கூடியதாக இருத்தல்:** சமுதாய தேவைகளான உணவுப்பொருட்கள், சுகாதாரவசதிகள், வீடுவாசல்கள், கல்வி வசதிகள் போன்றன இலவசமாக அல்லது மானிய அடிப்படையில் மக்களுக்கு வழங்கப்படும்.

19. **முதலாளித்துவப் பொருளாதார முறையால் ஏற்படும் தீமைகள் யாவை?**

(1) **உற்பத்தி இலாப நோக்கில் காணப்படல்:** தனியுரிமை அடிப்படையில் உயர்ந்தவிலை, அத்தியாவசியப் பொருள்களுக்கான உற்பத்திக் குறைவு காணப்படும்.

(2) **வருமான ஏற்றத்தாழ்வு நிலவுதல்:** தனியார் சொத்துரிமை, உற்பத்தி சொத்துரிமைப் பங்கீட்டில் சமமின்மை நிலவும்.

(3) **சுரண்டல் நிலவுதல்:** உற்பத்தியாளன் தொழிலாளியைச் சுரண்டுதல், விற்பனையாளன் நுகர்வோரைச் சுரண்டுதல், செல்வந்தர் வறியோரைச் சுரண்டுதல் காணப்படும்.

(4) **வேலையின்மை நிலவுதல்:** உற்பத்திக் காரணிகளில் ஒருபகுதி பயன்படுத்தப் படாமையால் இது காணப்படுகின்றது.

(5) **உறுதியற்ற பொருளாதார முறை நிலவுதல்:** திட்டமிடப்படாத பொருளாதார முயற்சிகளால் இது ஏற்படுகின்றது.

20. **சமவுடமைப் பொருளாதாரத்தில் காணப்படும் முக்கிய இயல்புகள் எவை?**

(1) **முதலீட்டு மூலம் கூட்டுறவு உரிமையில் அமைந்திருத்தல்:** உற்பத்திக் காரணிகள் பொது உடமையாகக் கருதப்படும். உ+ம்: அரச பண்ணைகள், கூட்டுப் பண்ணைகள்.

(2) **சமுதாய தேவைகளுக்கேற்ப பொருள்களும் சேவைகளும் உற்பத்தி செய்யப்படல்:** இலாபநோக்கத்தினைவிட மக்கள் நலனே உற்பத்தியின் நோக்காகக் காணப்படும்.

(3) **மத்திய திட்டங்களுக்கமைய உற்பத்தி செய்யப்படல்:** உற்பத்திக்காரணிகள் அரசுக்கு சொந்தமாக இருப்பதனால் திட்டமிடுதல் மூலம் விரைவான பொருளாதார வளர்ச்சி ஏற்படும். மக்கள் முன் வைக்கும் ஆலோசனைகள் கவனத்திற் கொள்ளப்படும்.

(4) **பொருளாதார சமத்துவம் காணப்படல்:** பொதுநல சேவையைப் பயன்படுத்தும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. முழுப் பொருளாதார முறையும் பொதுச்சொத்தாக காணப்படும்.

(5) **உழைப்பினால் மதிப்புப் பெருதல்:** கல்வி, தொழில் வாய்ப்புகளில் திறமைக்கே முதலிடம் வழங்கப்படல்.

(6) பொதுவுடமைப் பொருளாதார முறை நடைமுறையிலுள்ள நாடுகளிலே இப்பொருளாதார முறைகாணப்படும்.

21. **சமவுடமைப் பொருளாதார முறையால் ஏற்படும் நன்மைகளை தருக?**

(1) **வருமானப் பங்கீட்டில் சமத்துவம் நிலவுதல்:** உழைப்பின்றி ஊதியம் பெற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவதில்லை. எல்லோருக்கும் குறைந்தபட்சம் கிடைக்கக் கூடிய பொருட்கள். சேவைகள் உற்பத்திக்கு முக்கியம் அளிக்கப்படும்.

(2) **உற்பத்திகள் சமுதாய தேவைகளுக்கேற்ப அமைதல்:** இலாப நோக்கம். போட்டி நிலவாதபடியால் இது சாத்தியமாகிறது.

(3) **வாழ்க்கைத்தரம் உயர்வடைதல்:** பொதுநலச் சேவை, அத்தியாவசியப் பொருட்கள் உற்பத்தியில் அதிக அக்கறை காண்பிக்கப்படும். உ+ம்: உணவு, உடை, வீடுவாசல், கல்வி, சுகாதார சேவைகள் ஆகியவற்றிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

(4) **உற்பத்தி சாதனங்கள் திறமையாகப் பயன்படல்:** பொதுச் சொத்துக்களாக உள்ளதால் இவை பேணப்படுகிறது.

(5) **வர்க்கப் போராட்டங்கள் நிலவுவதில்லை:** அரசாங்கமே உற்பத்திக் காரணிகளைக் கட்டுப்படுத்துவதனால் முதலாளி தொழிலாளி வர்க்கவேறுபாடு நிலவுவதில்லை.

**22. சமவுடமைப் பொருளாதாரத்தினால் ஏற்படும் தீமைகளைத் தருக?**

(1) **பொருளாதாரச் சுதந்திரம் காணப்படாமை:** தனியார் சொத்துரிமை, வாரிசுரிமை நிலவுவதில்லை.

(2) **சுதந்திர உணர்வுகள் தடைப்படல்:** அரசாங்கம் பொருளாதார நடவடிக்கை களைக் கட்டுப்படுத்துவதால் இந்நிலை ஏற்படுகிறது.

(3) **அரசாங்கத்துறைகள் திறமையாக இயங்க முடியாமை:** திறமைக்கேற்ப ஊதியம் இல்லை. கடின உழைப்பு இல்லை. பொருட்சேதம், சாதனவிரயம் காணப்படுதல்.

(4) **திட்டங்களால் முன்னேற்றம் பாதிக்கப்படல்:** இப்பொருளாதார முறை திட்டமிடுதலில் தங்கியுள்ளது. திட்டமிடுதலில் குறைகள், நிதிநிர்வாகக் குறைபாடுகள் துணைக்காரணிகள் செயற்படாமை ஆகியன முன்னேற்றத்தைப் பாதிக்கலாம்.

**23. கலப்புப் பொருளாதாரத்தில் காணப்படும் முக்கிய இயல்புகள் யாவை?**

(1) **தனியார்துறை, அரசாங்கத்துறை இணைந்து காணப்படல்:** உற்பத்தி பற்றிய தீர்மானங்கள் அரசாங்கத் துறையினாலும், தனியார் துறையினாலும் மேற் கொள்ளப்படும்.

(2) **விலைமுறை, திட்டமிடல்முறை இணைதல்:** உற்பத்திச்சாதன ஒதுக்கலில் இவையிரண்டும் இணைந்து காணப்படும்.

(3) **வருமானப் பங்கீட்டில் சமமின்மை நீக்கப்படல்:** செல்வந்தர்கள் மீது வருமானவரி, சொத்துவரி, நன்கொடைவரி சுமத்தப்படும். இலவசச் சேவைகள், சமூகநலச் சேவைகளால் வறியவர்கள் நலன் உயர்த்தப்படும்.

(4) **தனியார்துறை மீது ஊக்குவிப்பும், கட்டுப்பாடும்:** வரிச்சலுகை, கடன்வசதிகள் ஊக்குவிப்புக்களும், அனுமதிப் பத்திரமுறை, நாணயநிதி நடைமுறை மாற்றங்கள் போன்ற கட்டுப்பாடுகளும் காணப்படும்.

(5) அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இப்பொருளாதார முறையைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**24. கலப்புப் பொருளாதார முறையால் ஏற்படும் நன்மைகள் யாவை?**

(1) **சமுதாய நலன் பாதுகாக்கப்படல்:** அரசாங்கம், சமுதாய நலன் அடிப்படையில், விவசாய, கைத்தொழில் கொள்கைகளைத் தீர்மானிக்கின்றது. விலைக் கட்டுப்பாடு, உத்தரவாத விலைத்திட்ட மூலம் கொள்ளை இலாபம் பெறல் தடுக்கப்படுகின்றது.

(2) **நுகர்வோர் சுதந்திரம் காணப்படல்:** நுகர்வோர் தெரிவிற்கேற்ப உற்பத்தி நடைபெறுகிறது.

(3) **உழைப்பிற்கேற்ப ஊழியம் வழங்கப்படல்:** முயற்சி மூலம் உற்பத்தி பெருக, இலாபமீட்ட வருமானம் அதிகரிக்கும்.

(4) **அரசாங்கத்தின் நிர்வாகச் சுமை குறைதல்:** தனியார்துறை, கூட்டுறவுத்துறை, அரசாங்கத்துறை என பிரிவுகள் காணப்படுதலால் அரசாங்கத்தின் நிருவாகச் சுமை குறைவடையும்.

**25. கலப்புப் பொருளாதார முறையால் ஏற்படும் தீமைகள் யாவை?**

(1) **கறுப்புச்சந்தை, பணவீக்கம் காணப்படல்:** விலைப் பொறிமுறை சுதந்திரமாக இல்லாமையால் தனியார் கறுப்புச்சந்தையை நாடுவர். அரசாங்க கொள்கையால் பணவீக்கம் ஏற்படும்.

(2) **நிர்வாகக் குழப்பம், மோசடிகள் நிலவுதல்:** பல பிரிவுகள் உற்பத்தியில் ஈடுபடுவதால் இந்நிலை ஏற்படுகிறது.

(3) **திறமையாக இயங்க முடியாமை:** இலாபம் கட்டுப்படுத்தப்படுதல், சுதந்திரமின்மையால் தனியார் துறையும், பொறுப்புணர்வின்மையால் அரசாங்கத்துறையும் திறமையாக இயங்குவதில்லை.

**26. மூன்று பொருளாதார முறைகளும் நடைமுறையிலுள்ள நாடுகளுக்கு உதாரணங்கள் தருக.**

(1) **இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்கா, யப்பான்:** முதலாளித்துவப் பொருளாதார முறை.

(2) **மக்கள் சீனக்குடியரசு, கியூபா, போலந்து:** சமவுடமைப் பொருளாதார முறை.

(3) **இலங்கை, இந்தியா, இந்தோனேசியா:** கலப்புப் பொருளாதார முறை.

**முதலாம் உலக நாடுகள்:** பொருளாதார ரீதியில் முதலாளித்துவ நாடுகள் எனப்படும் ஐக்கிய அமெரிக்கா, யப்பான், ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகள் இவற்றுள் அடங்கும்.

**இரண்டாம் உலகநாடுகள்:** பொருளாதார ரீதியில் சமவுடமை நாடுகள் என்றும் சோஷலிச நாடுகள் என்றும் அழைக்கப்படும். சோவியத் ரூஷியா, கியூபா, சீனா போன்ற ஏறத்தாழ பதினேழு நாடுகள் இவற்றுள் அடங்கும்.

**மூன்றாம் உலக நாடுகள்:** பொருளாதார ரீதியில் முதலாளித்துவ, சமவுடமை அமைப்பிணைச் சேராது, இவையிரண்டினதும் சிற்சில அம்சங்களைக் கொண்டுள்ள கலப்புப் பொருளாதாரமுடைய நாடுகள் இதனுள் அடங்கும். அணிசேரா இயக்கத்திலுள்ள அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் இதனைச்சார்ந்தவை. இந்தியா, இலங்கை, எகிப்து, உகண்டா போன்ற நூற்றுக் கணக்கான நாடுகள் இவ்வமைப்பில் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் அத்தியாயம்

# அபிவிருத்தி

**27. அபிவிருத்தி என்றால் என்ன? வரைவிலக்கணம் தருக.**

(1) எந்தவொரு நாடும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள், அங்கிருந்த வறுமை, வேலையின்மை, வருமான ஏற்றத்தாழ்வு ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற்றிருப்பின் அக்கால எல்லைக்குள் அந்நாடு அபிவிருத்தியடைந்து உள்ளதெனக் கூறமுடியும். (-டட்லி சியர்ஸ்)

(2) அபிவிருத்தி என்பது பொருளாதாரம், சனத்தொகை பற்றிய காரணங்களை மட்டுமன்றி சமூகமும் கலாசாரமும் பண்பாடும் பற்றிய காரணிகளையும் இணைத்துக் கொண்ட மாறுதல்களையும் வளர்ச்சிகளையும் கொண்ட ஒரு செயற்பாடு.

(3) "அபிவிருத்தியென்பது பொருளாதாரம், சமூகம், கலாசாரம் போன்ற பல்வேறு கூறுகளின் முன்னேற்றத்தின் மூலம் சமூகத்தவர் எல்லோருக்கும் சிறந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுக்கொடுக்கும் சமூகநல்வாழ்வாகும்" எனப் பொதுவாகக் கூறலாம்.

**28. பொருளாதார சமூக, கலாசார அபிவிருத்தி என்றால் என்ன?**

(1) பொருளாதார அபிவிருத்தி என்றால் குறிக்கப்பட்ட ஒரு காலப்பகுதியினுள் ஒரு சமுதாயத்தில் அல்லது பொருளாதார முறையில் நுகர்வு செய்யப்படும் பொருள்கள், சேவைகள் ஆகியன தரத்திலும் தொகையிலும் உயர்வதைக் குறிக்கும்.

(2) சமூக அபிவிருத்தி என்றால் மக்களுக்குத் தேவையான உணவு, உடை, வீடு, வாசல் போன்ற அடிப்படைத் தேவைகளுடன் சுகாதாரம், கல்வி, தொழில்வாய்ப்பு, சமூகப் பாதுகாப்பு, மனித சுதந்திரம் ஆகிய கூறுகளின் மூலம் அபிவிருத்தி ஏற்படுதலைக் குறிக்கும்.

(3) கலாசார அபிவிருத்தி என்றால் மதம், மொழி, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்படும் வளர்ச்சியைக் குறிக்கும். "அபிவிருத்தி என்பது பொருளாதார சமூக, கலாசாரம் போன்ற பல்வேறு துறைகளின் இணைவான வளர்ச்சி அல்லது விருத்தி" எனலாம்.

**29. டட்லிசியர்ஸ் என்பவர் அபிவிருத்தி பற்றிக் கூறிய கருத்தினைத் தருக?**

ஒரு நாடு அபிவிருத்தியடைந்துள்ளதா என ஆராயும் போது மூன்று முக்கியமான பிரச்சனைகளுக்கு விடை காணப்பட்டுள்ளதா என்பதனை வினவுதல் வேண்டும் என்றார்.

அங்கு வறுமைக்கு என்ன நிகழ்ந்துள்ளது?
வேலையின்மைக்கு என்ன நடந்து வந்துள்ளது?
சமத்துவமின்மைக்கு என்ன நிகழ்ந்துள்ளது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது வினாவிற்கு விடையாகப் "போதியளவு உணவு" என்பதனைக் காட்டலாம் என்றார். இரண்டாவது வினாவிற்கு விடையாக தொழிலின்றி மனிதனின் ஆளுமை விருத்தி பெறமுடியாது என்றார். மூன்றாவதாக அபிவிருத்தியின் மூலக் கூறாகச் சமத்துவம் கொள்ளப்பட வேண்டும் என்றார். கைத்தொழில் நாடுகளுக்கு வெளியே நிலவும் சமத்துவமின்மையை முக்கியமாகச் சமய பண்பாட்டு அடிப்படையில் நிலவுவதாகக் குறிப்பிட்டார்.

**30. ஒரு நாட்டின் அபிவிருத்தியை அளவிடப் பயன்படும் சம்பிரதாய (மரபு வழிவந்த) அளவீட்டு முறைகளையும் சம்பிரதாயமல்லாத (மரபு வழிவராத) அளவீட்டு முறைகளையும் தருக?**

**(1) சம்பிரதாய அளவீட்டு முறைகள்**

1) ஆள்வீத வருமானம்
2) மொத்தத் தேசிய உற்பத்தி

**(2) சம்பிரதாயமல்லாத அளவீட்டு முறைகள்**

1) பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண்
2) சனத்தொகையில் ஒரு மருத்துவருக்கான நோயாளிகளின் எண்ணிக்கை
3) சனத்தொகையில் 1000 பேருக்கான தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி ஆகியவற்றின் எண்ணிக்கை.
4) உயர்கல்வியைத் தொடரும் மாணவர் சதவீதம்.
5) 2500 கலோரிப் பெறுமானச் சக்தியைத் தரக்கூடிய உணவை நுகர்வோர் எண்ணிக்கை.

**31. மொத்தத் தேசிய உற்பத்தி என்றால் என்ன? எவ்வாறு கணிகப்படுகிறது?**

ஒரு நாட்டின் (தேசிய வருமானத்தை) குறிப்பிட்ட காலஎல்லையொன்றில் உற்பத்தி செய்யப்பட்ட எல்லாப் பொருள்களையும் சேவைகளையும் (பணப் பெறுமதி அளவின் அடிப்படையில்) குறிக்கும் பொருள்களினதும் சேவைகளினதும் பெறுமதி பொதுவான ஒரு பண அலகைக் (ஐக்கிய அமெரிக்க டொலர்) கொண்ட மதிப்பிட்டு மொத்தத் தேசிய உற்பத்தி கணிக்கப்படுகிறது.

**32. அபிவிருத்தியை அளவிடுவதற்கு மொத்தத் தேசிய உற்பத்தியைப் பயன்படுத்து வதால் ஏற்படும் நன்மைகளையும், தீமைகளையும் தருக?**

**நன்மைகள்:**

1) ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அளவிட உதவும். உற்பத்திப் பெருக்கத்தை அறிய உதவும்.
2) நாடுகளுக்கிடையே ஏற்படும் வருடாந்த தேசிய வருமான மாற்றத்தை அறிந்துகொள்ளலாம்.
3) பொதுப்பண அலகு பயன்படுத்தப்படுவதால் ஒப்பீட்டுக்கு உதவியாக அமையும்.
4) அபிவிருத்தியை அளவிட முதன் முதலாகக் கையாளப்பட்ட சம்பிரதாய முறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீமைகள்:**

1) நாட்டில் காணப்படும் பொருளாதார வேறுபாடுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் காட்டுவதில்லை.
2) மொ. தே. உற்பத்தியைக் கணிக்கும்போது ஒரு நாட்டின் எல்லாப் பொருள்களும் சேவைகளும் கணிக்கப்படுகின்றனவா என்பது ஐயத்துக்குரியது. உ+ம்: சுயதொழில்கள். வீட்டுப் பெண்கள் சேவைகள். அமையச்சேவைகள். சிறுவர் ஊழிய வருமானம். பதுக்கல்கள்.
3) சகலரினதும் வருமானங்கள் சமமாகக் காட்டப்படுவதால் தவறான அபிப்பிரா யங்கள் ஏற்படலாம்.
4) வாழ்க்கைத் தரத்தை. உண்மையான உற்பத்திகளைக் காட்டுவதில்லை.
5) சமுதாய விருத்தியைக் காட்டுவதில்லை.

**33. ஒரு நாட்டின் ஆள்வீத வருமானம் எவ்வாறு கணிக்கப்படுகின்றது?**

குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்குரிய மொ. தே. உற்பத்தியை அந்நாட்டுச் சனத்தொகையினாற் பிரித்துத் தனிநபர் மொ. தே. உற்பத்தியை அல்லது ஆள்வீத வருமானத்தைப் பெறலாம்.

$$\frac{\text{மொத்தத் தேசிய உற்பத்தி}}{\text{நட்டாண்டுச் சனத்தொகை}} = \text{ஆள்வீத வருமானம்}$$

**34. அபிவிருத்தியை அளவிடுவதற்கு ஆள்வீத வருமானத்தைப் பயன்படுத்தும்போது ஏற்படக்கூடிய நன்மைகளையும் தீமைகளையும் தருக?**

**நன்மைகள்:**

1) உலகளாவிய முறையில் நாடுகளை ஒப்பிடுவதற்கு ஆள்வீத வருமானம் பயன்படும்.
2) நாடுகளின் பொருளாதார மட்டத்தை அறிவதற்கும். பொருளாதார வளர்ச்சியின் வேறுபாட்டை அறியவும் உதவும்.
3) ஒரு நாட்டின் தேசிய வருமான வருடாந்த வேறுபாட்டைக் கணிக்க உதவும்.

**தீமைகள்:**

1) ஆள்வீத வருமானத்தில் எல்லோருடைய வருமானமும் சமமானது எனக் காட்டப்படுவது தவறானதாகும். உதாரணமாக 1988ல் இலங்கையின் ஆள்வீத வருமானம் 420 அமெரிக்க டொலராக இருந்தபோது ஒவ்வொரு இலங்கை வாசியும் 420 அமெரிக்க டொலரைப் பெறவில்லை.
2) வருமானப் பரம்பலின் வேறுபாடுகளை இது காட்டுவதில்லை. மொ. தே. உற்பத்தியை சனத்தொகையாற் பிரிக்கும்போது உற்பத்தி முயற்சியில் ஈடுபடாத குழந்தைகள், நோயாளர். அங்கவீனரும் கணிப்பில் இடம்பெறுவர்.
3) மொ. தே. உற்பத்தி மதிப்பீட்டுத் தவறுவதல்கள் ஆள்வீத வருமான மதிப்பீட்டையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கும்.

**35. பௌதிக வாழ்க்கைப் பண்புச்சுட்டெண் (*PQLI*) எவ்வாறு கணிக்கப்படுகிறது?**

1) ஒரு வயது பூர்த்தியாவதற்கு முன்னர் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை (சிசு மரண வீதம்).
2) பிறக்கும்போது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம்.
3) எழுத்தறிவு ஆகிய சுட்டிகளை ஒன்றுசேர்த்துக் கணிக்கப்படும். 1977ம் ஆண்டு ஐக்கிய நாட்டுத் தாபனத்தின் புதிய ஆய்வுகளின் பேறாகப் பொருத்தமான அளவீட்டுக் காரணியாகக் கொள்ளப்பட்டது.

**36. பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண்ணிலிருந்து பெறக்கூடிய அபிவிருத்தி பற்றிய தகவல்கள் யாவை?**

* சமுதாய முன்னேற்றம் பற்றிப் பல தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

**(அ) சிசுமரண வீதம், பிறக்கும்போது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலத்திலிருந்து பெறக்கூடிய தகவல்கள்.**

1) சுகாதார் வசதிகள் வியாபிப்பு
2) போசணை மட்டம்
3) வருமானம்
4) தாய் சேய் சுகநிலை
5) கல்வி வசதிகள்
6) சுகாதார வசதிகள்
7) பொதுச்சூழல்
8) வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை அறியலாம்

**(ஆ) எழுத்தறிவு மூலம் பெறக்கூடிய தகவல்கள்**

1) அபிவிருத்திக்குத் தேவையான பயிற்சிநிலை
2) பெண்கள் கல்வி நிலை
3) சனத்தொகைப் பெருக்கவீதம்
4) மூலவளப் பயன்பாடு
5) சமூகத் தொடர்புகள்
6) பொதுநலச்சேவை ஆகியவற்றை அறியலாம்.

**37. பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண்ணை அபிவிருத்தியை அளவிடப் பயன்படுத்துவதில் உள்ள குறைபாடுகளைத் தருக.**

(1) சுட்டிகளைத் தயாரிப்பதற்கான தகவல்களைப் பிழையின்றிச் சேகரிப்பதில் உள்ள சிக்கல்கள். உண்மையற்ற தன்மைகள் பிழையான கணிப்பைத் தரலாம்.
(2) சமூக கலாசாரத் துறைகளின் வளர்ச்சியை மாத்திரமே அறியக்கூடியதாக இருத்தல்.
(3) வேறொரு காரணியின் உதவியின்றிப் பயன்படுத்த முடியாதிருத்தல். உ+ம்: பொருளாதாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. **இலங்கையின் பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண் உயர்வாக அமைவதற்கு உதவும் காரணிகளைத் தருக.**

(1) இலங்கையின் பௌதிக வாழ்க்கைப் பண்புச்சுட்டெண் 82ஆக உள்ளது. இலங்கையின் எழுத்தறிவு வீதம் 86% ஆகும். சிசுமரண வீதம் 34/1000 ஆகும். ஆயுள் எதிர்பார்ப்பு 69 ஆண்டுகள் ஆகும். இலங்கையின் எழுத்தறிவு வீதம் அதிகரித்தமைக்கு இலவசக் கல்வி ஆரம்ப வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை வழங்கப்படுகின்றமை. பாடசாலைகள் எண்ணிக்கை அதிகரித்தமை. இலவசப் பாடநூல் விநியோகம் கல்விக்கான நிதி ஒதுக்கீடு அதிகரித்தமை காரணங்களாக அமைந்துள்ளன. ஆசியாவில் யப்பானுக்கு அடுத்ததாக இலங்கையின் எழுத்தறிவு வீதம் திகழ்கின்றது.

(2) இலங்கை அரசு சமூக நலனிலும் கூடிய அக்கறை கொண்டுள்ளது. இலவசக் கல்வியுடன் இலவச சுகாதார சேவையும் வழங்கப்படுகிறது. சுதந்திரமடைய முன்னரே ஆரம்பிக்கப்பட்ட நோய்த்தடுப்பு முறைகள் மேலும் வளர்ச்சியடைந்துள்ளன. உணவு முத்திரை. கிராம எழுச்சித்திட்டம் என்பன மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும் ஆயுட் காலம் அதிகரிக்கவும் சிசுமரண வீதம் குறைவடையவும் காரணங்களாக அமைந்தன.

(3) சுதந்திரத்திற்குப் பின் ஆட்சிசெய்த சகல அரசாங்கங்களும் சமூக நலனில் அக்கறை காட்டியமையும். தேறிய வருமானத்தில் கணிசமான தொகை கல்விக்காகவும் சுகாதார சேவைக்காகவும் செலவிடப்பட்டமையும். நாட்டின் சகல பிரதேசங்களும் இவ்வாய்ப்பினைப் பெறுகின்றமையும். பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண் உயரக் காரணமாகியுள்ளது.

39. **வேறுபாடுகள் (தன்மைகள்)**

| | அபிவிருத்தியடைந்த நாடுகள் | அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் |
|---|---|---|
| (1) | இடைவெப்ப வலயத்தில் அமைந்திருத்தல் | வெப்ப வலயத்தில் அமைந்திருத்தல் |
| (2) | வடக்கு நாடுகள் | தெற்கு நாடுகள் |
| (3) | கைத்தொழில் நாடுகள் | விவசாய நாடுகள் |
| (4) | ஏகாதிபத்திய நாடுகள் | குடியேற்ற நாடுகள் |
| (5) | குறைந்தளவு சனத்தொகை | துரித சனத்தொகை வளர்ச்சி |
| (6) | மூலதன வளம் காணப்படல் | மூலதனப் பற்றாக்குறை நிலவுதல் |
| (7) | கடன் உதவி வழங்குதல் | கடன் பழுவில் நிற்றல் |
| (8) | கைத்தொழில் ஏற்றுமதி | முதனிலைப் பொருள் ஏற்றுமதி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| (9) செல்வநிலை. உயர்ந்த போஷணை | வறுமை. மந்த போஷணை |
| (10) தொழிநுட்ப முன்னேற்றம் | தொழிநுட்ப வளர்ச்சியின்மை |
| (11) பெரும்பாலான மக்கள் நகரங்களில் வாழ்தல் | பெரும்பாலான மக்கள் கிராமங்களில் வாழ்தல் |
| (12) அதிகரித்த வேலைவாய்ப்பு | வேலையிலாப் பிரச்சனை நிலவுதல் |

40.

| | | அபிவிருத்தியடைந்த நாடுகள் | அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் |
|---|---|---|---|
| | | வேறுபாடுகள்: தரவுகள் | |
| (1) | உலக சனத்தொகை | 24% | 76% |
| (2) | மொத்தத் தேசிய உற்பத்தி | 80% | 20% |
| (3) | தலாவருமானம் (அ. டொ.) | 8855 | 772 |
| (4) | பௌதிக வாழ்க்கைத் தரச்சுட்டெண் | 94 | 59 |
| (5) | பிறப்பு வீதம் – 1000 க்கு | 15 | 33 |
| (6) | இறப்பு வீதம் – 1000 க்கு | 10 | 12 |
| (7) | எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் | 72 | 50 |
| (8) | சிசுமரண விதம் | 18 | 86 |
| (9) | எழுத்தறிவு | 99% | 55% |
| (10) | தனிநபர் கல்விச் செலவு | 423 | 27 |
| (11) | நகர சனத்தொகை வீதம் | 71% | 29% |

41. அபிவிருத்தியடைந்த நாடுகளின் இயல்புகள் நான்கு தருக?

(1) **வாழ்க்கைத்தரம் உயர்வாகக் காணப்படல்:** மக்கள் அடிப்படைத் தேவைகள் குறைவின்றிப் பெற்றுத் திருப்திகரமான வாழ்க்கையைப் பெறுவர். சமூகக் காப்புறுதி முறைகள் காணப்படும்.

(2) **விவசாயம் சாராத தொழில்களில் பெரும் பகுதியினர் ஈடுபடுதல்:** நவீன கைத்தொழிலாக்கங்கள், தொழினுணு க்க அறிவில் முன்னேற்றம் காணப்படும். சர்வதேச வர்த்தகத்தில் 80% உற்பத்திப் பொருட்களை இந்நாடுகள் அளிக்கின்றன.

(3) **சனத்தொகை வளர்ச்சி வேகம் குறைவாகக் காணப்படல்:** உ+ம்: பிரித்தானியா 0.0%. ஐக்கிய அமெரிக்கா 1.0%. சோவியத்யூனியன் 0.9%.

(4) **மூலவளம் அதிகளவில் காணப்படுதல்:** உற்பத்தி மட்டங்களில் அதிகளவு முதலீடு இடம்பெறும். பௌதிக வளங்கள் அதிகளவில் இருத்தல் கைத்தொழிலாக்கம் வேலைவாய்ப்புக்களை அதிகரித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் இயல்புகளைத் தந்து சுருக்கமாக விளக்குக.

(1) **குறைந்தளவு தலாவருமானத்தைக் கொண்டிருத்தல்:** உ+ம்: 1983ல் இதியோப்பியா 120: பங்களாதேஷ் 130: நேபாளம் 160: அமெரிக்க டொலர்களையே தலா வருமானமாகக் கொண்டிருந்தன. இந்நாடுகளில் வாழும் மக்களின் பெரும்பான்மையினர் கஷ்டமான வாழ்க்கையையே வாழுகின்றனர். ஆபிரிக்காவிலுள்ள நாடுகள் பலவற்றில் தலாவருமானம் மிகக் குறைவாக உள்ளது. இதியோப்பியாவில் வரட்சி, பஞ்சம், போசாக்கின்மையால் பலர் இறக்கின்றனர்.

(2) **அடிப்படைப் பொருள்களின் ஏற்றுமதிகளில் தங்கியிருத்தல்:** உ+ம்: இலங்கை தேயிலை, இறப்பரையும், கானா கொக்கோவையும், சூடான் பருத்தி, கோப்பியையும், மலேசியா இறப்பர் வெள்ளீயத்தையும் முக்கிய ஏற்றுமதிப் பொருள்களாகக் கொண்டுள்ளன. விலைத் தளம்பலினாலும், உலக சந்தையில் கடும்போட்டியினாலும், மாற்றீட்டு பொருள்களினாலும் வருவாயில் ஒரு சிறிய பகுதியையே இவை பெறுகின்றன.

(3) **விவசாயம் சார்ந்த பொருளாதார முறை காணப்படல்:** வாழ்வாதாரப் பயிர்ச் செய்கைக்குரிய காணிகள் சனத்தொகையின் துரித வளர்ச்சியால் சிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டிருத்தலும், விவசாயிகளின் வறுமையும் அறுவடை தாழ்மட்டத்திலிருக்கக் காரணமாகிறது. திருத்தமான தொழினுட்பமுறை, போதிய பசளைவகை பயன்படுத்தப்படுவதில்லை.

(4) **சனத்தொகை வளர்ச்சி வேகமும் தங்கியிருப்போர் சுமையும் காணப்படல்:** மூன்றாம் உலக நாடுகளின் சனத்தொகை வேகம் 2.1% ஆக உள்ளது. 1988ம் ஆண்டில் பங்களாதேஷ் 2.4%, இதியோப்பியா 3.3%, பிறேசில் 1.8% ஆக வளர்ச்சி வேகம் இருந்தது. தங்கியிருப்போர் தொகை சனத்தொகையில் 40 – 50 வீதமாக உள்ளது.

(5) **மூலதனப் பற்றாக்குறை, தொழினுணு க்கம் பயிற்சி தொழில் சம்பந்தமான பிரச்சனைகளை எதிர்நோக்குதல்:** இதனால் பிறநாட்டுக் கடனுதவி, முதலீடு ஆகியவற்றில் தங்கியருக்க நேரிடுகிறது. உற்பத்திப் பெருக்க வேகம் தாழ்மட்டத்தில் உள்ளது.

(6) **பௌதிக வளங்களும் மனித வளங்களும் உரிய முறையிற் பயன்படுத்தப்படாமை:** பயிற்சி, தொழினுணு க்கம், மூலதனக் குறைபாடுகள், முகாமைத்துவப் பிரச்சனைகளால் இந்நிலை ஏற்படுகிறது.

(7) **கைத்தொழில் துறையில் முன்னேற்றமின்மை:** சனத்தொகையில் சிறு பிரிவினர் மாத்திரம் கைத்தொழில் சார்ந்த துறைகளில் ஈடுபட்டிருத்தல். அண்மைக் காலத்தில் இந்தியா, தாய்வான், தென்கொரியா ஆகிய நாடுகள் கைத்தொழில் துறையில் கூடிய ஆர்வம் காட்டிவருகின்றன.

43. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் அவற்றின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பின்பற்றும் வழிகளைத் தருக?

(1) உயர்ந்த தொழினுணு க்க முறைமூலம் உற்பத்தியைப் பெருக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) சுதந்திரசந்தைக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்.

(3) உற்பத்தியில் தனியார் துறைப் பங்களிப்பைப் பெருக்குதல்.

(4) சனத்தொகை வளர்ச்சி வேகத்தைக் குறைத்தல்.

(5) தாய் சேய் சுகாதாரப் பாதுகாப்பு. போசணை மட்டத்தை உயர்த்துதல்.

(6) எழுத்தறிவின்மையைப் போக்குதல்.

(7) ஏற்றுமதிகளுக்கு நியாயமான விலை கிடைக்கப் பேச்சுவார்த்தை மேற்கொள்ளல்.

**44. வடக்குத் தெற்குச் சல்லாபம்: நோக்கங்களைத் தருக?**

வில்லிபிறாண்ட் என்பவர் உலகப் பொருளாதாரத்தின் சமமின்மையையும் அதன் மூலம் பொருளாதாரத்தில் ஏற்பட்ட தோல்வியையும் ஆராய்ந்து 1979ல் ஓர் அறிக்கை மூலம் வடக்குத் தெற்குச் சல்லாபத்தை ஆரம்பித்தார். அபிவிருத்தி அடைந்த நாடுகள் வடக்கைச் சார்ந்த நாடுகளாகவும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தெற்கைச் சார்ந்த நாடுகளாகவும் கருதப்படுகின்றன.

(1) அபிவிருத்தியடைந்த நாடுகளின் அடிப்படைப் பொருள்களுக்கு உயர்ந்த விலையைப் பெற்றுக் கொடுத்தல்.

(2) உலகில் குறைந்த அபிவிருத்தி மட்டத்தினையுடைய நாடுகளின் அபிவிருத்தி நிலையை உயர்த்துதல்.

3) கைத்தொழில் நாடுகளில் தங்கியிருக்கும் நாடுகளை மீட்டெடுத்தல்.

(4) கைத்தொழில் அபிவிருத்திக்கேற்ற உள்ளார்ந்த வளமுள்ள நாடுகளின் கைத்தொழில் விருத்திக்கு உதவுதல்.

<u>தலா வருமானம் (அமெரிக்க டொலரில்)</u>

| நாடுகள் | 1984 | 1988 | 1992 |
|---|---|---|---|
| இலங்கை | 360 | 420 | 540 |
| இந்தியா | 260 | 340 | 310 |
| வங்களாதேசம் | 130 | 170 | 220 |
| எதியோப்பியா | 110 | 120 | 110 |
| ஐக்கிய அரபு எமிரேட் | 21920 | 15770 | 22020 |
| ஐக்கிய அமெரிக்கா | 15390 | 19840 | 23240 |
| யப்பான் | 10630 | 21020 | 28190 |
| சுவிர்ஸிலாந்து | 16339 | 27500 | 36080 |
| கனடா | 13280 | 16960 | 20710 |
| அவுஸ்திரேலியா | 11170 | 12340 | 17260 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காம் அத்தியாயம்

# அபிவிருத்தி - வரலாற்றுப் பின்னணியும் பிரச்சனைகளும்

45. ஏகாதிபத்தியப் (குடியேற்றவாதம்) பரம்பலுக்குரிய காரணிகள் மூன்று தருக?

(1) **ஐரோப்பிய அறிவியல் மறுமலர்ச்சியும் நாடுகாண் பயணங்களும்:** புதிய விடயங்களைக் கண்டுபிடிக்கும் ஆர்வம் ஏற்பட்டது. கிழக்கு மேற்கு வியாபாரத் தொடர்புகள், புதிய கடல் மார்க்கங்கள், நாடுகள் கண்டு பிடிக்கப்பட்டதனால் வளர்ச்சியடைந்தன.

(2) **வர்த்தக ஏகாதிபத்தியத்தைக் கட்டியெழுப்புதல்:** 16, 17ம் நூற்றாண்டுகளில் வர்த்தகத் தொடர்புகளை உறுதிப்படுத்தப் பேரரசுகள் கட்டியெழுப்பப்பட்டன. இதுவே குடியேற்றப் போட்டியின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. போர்த்துக்கல், ஸ்பெயின், ஒல்லாந்து, பிரான்ஸ், பிரித்தானியா ஆகிய நாடுகள் இப்போட்டியில் முன்னணியில் நின்றன.

(3) **கைத்தொழிற் புரட்சியும் கைத்தொழில் நுட்ப முன்னேற்றமும்:** 18ம் நூற்றாண்டில் முதலில் பிரித்தானியாவிலும் பின்னர் பிரான்ஸ், ஜேர்மனியிலும் ஏற்பட்டது. மூலப் பொருள்களும் முடிவுப் பொருள்களும் சந்தைகளைப் பெறுவதில் நாடுகளுக்கிடையில் போட்டி ஏற்பட்டன.

46. குடியேற்ற வாதத்தால் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள் மூன்று தருக?

(1) **பேரரசு நாடுகளின் நலன்கருதி வர்த்தகப் பயிர்ச்செய்கைகள் குடியேற்ற நாடுகளில் ஆரம்பிக்கப்பட்டன:** உ+ம்: இந்தியாவில் பருத்தி, இலங்கையில் தேயிலை, மலாயாவில் இறப்பர், தாய்வானில் கொக்கோ, மேற்கிந்தியாவில் கரும்பு.

(2) **தன்னிறைவு மானிய முறைக்குப் பதிலாக ஏற்றுமதிப் பொருளாதாரமுறை உருவாகியமை:** மானியமுறைச் சமூகங்களில் குலகோத்திர முறை மாறிப் புதிய தொழில் வாய்ப்புகள் பெருகின. உணவுப் பொருட்கள், அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்யும் வழக்கம் ஏற்பட்டது. பொருளாதார அபிவிருத்தி புதிய திசையில் செல்லத் தொடங்கியது.

(3) **வர்த்தகப் பயிர்ச்செய்கை அபிவிருத்தியடைந்தது. வாழாதாரப் பயிர்ச்செய்கை புறக்கணிகப்பட்டது:** வர்த்தகப் பயிர்ச்செய்கை முன்னேற்றத்திற்கு துறைமுகங்கள், போக்குவரத்து முறைகள், வங்கி, காப்புறுதி அபிவிருத்திகள் உதவின. வாழாதாரப் பயிர்ச்செய்கை மூலதனப் பற்றாக்குறை, பாரம்பரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாய முறைகள். குறைந்த அறுவடை. சந்தை வசதியின்மையால் முன்னேறவில்லை.

**47. குடியேற்ற நாடுகள் எதிர்நோக்கும் அரசியல், கலாசாரப் பிரச்சனைகளைத் தருக?**

**அரசியல் பிரச்சனைகள்**

(1) **உறுதியற்ற அரசியல் நிலை உருவாகியது:** உ+ம்: இந்தியா சுதந்திரம் பெற்றபோது இந்தியா பாகிஸ்தான் எனப் பிரிந்தது. பாகிஸ்தானிலிருந்து பங்காதேஷ் பிரிந்தது. பாகிஸ்தானில் இரணுவச் சதிகள் மூலம் ஆட்சிமாறல் இடம்பெற்றது.

(2) **அன்னியத் தலையீடுகள்:** உ+ம்: வியட்னாம் அங்கோலாவில் அமெரிக்கத் தலையீடு இடம்பெற்றமை. இலத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்காவில் அதிகளவு அந்நியத் தலையீடுகள் இடம்பெற்றுள்ளது.

(3) **அளவுக்கதிகமான அரசியல் கட்சிகள் தோன்றின:** குடியேற்ற ஆட்சியாளர் கடைப்பிடித்த பிரித்தாளும் கொள்கைகளால் இனமத அடிப்படையில் கட்சிகள் பல உருவாகின. உ+ம்: இலங்கையில் முப்பதிற்கும் மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் உள்ளன.

(4) **பொருத்தமற்ற அரசியல் யாப்புகள் உருவாக்கப்பட்டன:** குடியேற்ற ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்ட யாப்புகள் சுதந்திரம் பெற்ற பின்னரும் அந்நாடுகளுக்கு இடையூறாக அமைந்தமை. உ+ம்: இலங்கை அரசியல் யாப்பு (1972ம் ஆண்டு வரை)

**கலாசாரப் பிரச்சனைகள்**

(1) "வெள்ளை மனிதனின் சுமையைத் தாங்குதல்" என்ற கருத்தின் அடிப்படையில் குடியேற்றங்கள் தாபிக்கப்பட்டமை. தேசிய பண்பாட்டு அம்சங்கள் சீர்குலையக் காரணமாகியது.

(2) மேலைத் தேயப் பண்பாட்டை உயர்ந்ததெனக் கருதும் மனப்பாங்கு கொண்டவர்கள் உருவாகியமை.

(3) அன்னிய நடை பாவனைகளைக் கண்மூடித்தனமாகக் கைக்கொண்டமை: அபிவிருத்திக்கு இடையூறாக அமைந்தது.

**48. நவ குடியேற்றவாதம் என்றால் என்ன? அதன் செயற்பாட்டு முறைகளைத் தருக.**

நவகுடியேற்றவாதம் என்பது ஒரு நாட்டின் மீது மற்றொரு நாடு அரசியல் ஆதிக்கத்தைச் செலுத்தாது மறைமுகமாகப் பல்வேறு வழிகளில் ஆதிக்கம் செலுத்துவதினைக் குறிக்கும்.

குடியேற்றவாதத்தில் குடியேற்ற நாடுகளுக்கிடையே "தங்கிநிற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரம்" நவகுடியேற்றவாதத்தின் குவிமையமாக காணப்படுகிறது.

(1) **வர்த்தகம், கைத்தொழிலாக்கங்களின் ஊடுருவல், சுரண்டல்கள்:** செல்வந்த நாடுகள் செயற்கைப் பொருள் உற்பத்தி, இறக்குமதிகள் மீது வரையறை, ஏற்றியிறக்கல் சந்தைப்படுத்தலில் ஆதிக்கம் பெறுவதன் மூலமும், ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களில் நன்மை பெறுவதன் மூலமும் அபிவிருத்தியடையும் நாடுகளை நவகுடியேற்ற வாதப் பிடியுள் சிக்க வைத்துள்ளன.

(2) **வெளிநாட்டு உதவியில் நவகுடியேற்றவாதச் செயற்பாடு:** நிபந்தனைகளுடன் கூடிய உதவிகளை வழங்கி இலாபம் பெறுதல். நிபந்தனைகளை மீறும் நாடுகளுக்கு உதவிகளை நிறுத்துதல்.

(3) **இராணுவ அரசியல் ரீதியான ஊடுருவல்கள்:** கடற்படைத் தளங்களை நிறுவு தல், நவீன போர் ஆயுதங்களை வழங்குதல், எதிரான கொள்கையுடைய நாடுகளின் ஆட்சிகளைக் கவிழ்த்தல்.

**அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வர்த்தக விவசாயமும் வாழ்வாதார விவசாயமும்**

(1) இரண்டு விவசாயத் துறைகளும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட திசைகளில் சென்றன. வர்த்தக விவசாயத்திற்கு முக்கியமளிக்கப்பட்டது. வாழ்வாதார விவசாயம் புறக்கணிக்கப்பட்டது.

(2) வர்த்தக விவசாயத்துறையில் முன்னேற்றமான இயல்புகள் காணப்பட்டன. சிறந்த உற்பத்தி முறைகள், ஏராளமான மூலதன முதலீடு, பெருந்தொகை யினருக்கு வேலைவாய்ப்பு, நிரந்தரமான சம்பளம் வழங்கும் முறை போன்ற முன்னேற்றமான அம்சங்கள் காணப்பட்டன.

(3) வாழ்வாதார விவசாயத்துறையில் முன்னேற்றமான இயல்புகள் காணப்பட்டன. உற்பத்தி மிகையின்மை, முன்னேற்றமற்ற பழைய விவசாய முறைகள், மூலதனப் பற்றாக்குறை, குறைந்த அறுவடை ஆகிய குறைபாடுகள் காணப்பட்டன.

(4) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் ஒரு துரிதப் பொருளாதாரமுறை காணப்படுகிறது. கைத்தொழில் முறையை முன்னேற்றுவதை விடுத்து வர்த்தக விவசாயத்திற்கே முக்கியமளிக்கப்படுகிறது. வர்த்தக விவசாயம் உறுதியற்ற உலகச் சந்தையில் தங்கியிருப்பதனால் பொருளாதாரமும் உறுதியற்றதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி சம்பந்தமான பிரச்சனைகள்

**49. அபிவிருத்தியடைந்த நாடுகளும். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் எதிர்நோக்கும் பிரச்சனைகளைத் தருக.**

*(அ) சனத்தொகைப் பிரச்சனை*
*(ஆ) வேலையில்லாப் பிரச்சனை*
*(இ) சூழல் மாசுபடுதல்*
*(ஈ) போதைப் பொருள் பாவனை*
*(உ) எயிட்ஸ் நோய்*
*(ஊ) ஒழுக்கச் சீர்கேடுகள்*
*(எ) இயற்கை வளங்கள் குறைதல்*
*(ஏ) குறைந்த வருமான வட்டம்*
*(ஐ) பெரும்பாலானோர் விவசாயத்தில் ஈடுபடுதல்*
*(ஒ) வேலை போதாமை. மூளைசாலிகள் வெளியேற்றம்*
*(ஓ) விலைத்தளம்பல்*
*(ஔ) வளங்கள் சிறந்த முறையில் பயன்படுத்தப்படாமை*

*மேற்குறிப்பிட்டவற்றுள் "அ" தொடக்கம் "எ" வரையுள்ள பிரச்சனைகள் அபிவிருத்தியடைந்த நாடுகளில் காணப்படுகின்றன. அபிவருத்தியடைந்து வரும் நாடுகளில் மேற்குறிப்பிட்ட எல்லாப் பிரச்சனைகளும் உள்ளன.*

**50. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் சனத்தொகை அதிகரிப்பதற்கான காரணங்கள் மூன்று தருக.**

*(1)* **இறப்பு வீதத்திலும் பிறப்பு வீதம் அதிகரித்தல்:** *உலக சனத்தொகை ஒவ்வொரு நிமிடமும் 150 பேரால் அதிகரிக்கிறது. இவர்களுள் பெரும்பாலானோர் வறிய நாடுகளிலேயே பிறக்கின்றனர். 1986ம் ஆண்டு உலக சனத்தொகை தரவுகளின்படி பருமட்டமான பிறப்பு வீதம் 3.1% ஆகவும் இறப்பு வீதம் 1.1% ஆகவும் உள்ளது. இயற்கை அதிகரிப்பு 2% ஆக உள்ளது.*

*(2)* **மரண விகிதம் குறைந்தமை:** *வாந்திபேதி. மலேரியா. வயிற்றோட்டம் போன்ற தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கைகள் வெற்றியளித்தமை. வைத்திய சேவைகளின் அபிவிருத்தி. சுகாதார வசதிகள் வளர்ச்சியடைந்தமை மரண விகிதத்தைக் குறைத்துள்ளன.*

*(3)* **குறைந்த வயதில் திருமணம் செய்தல். சமூகநல வசதிகள் வழங்கப்பட்டமை:** *இலவசக் கல்வி. இலவச வைத்திய வசதிகள். இலவச உணவு மானியங்கள் வழங்கப்பட்டமையும் சனத்தொகை அதிகரிக்கக் காரணமாகியது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**51. சனத்தொகை அதிகரிப்பால் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நான்கு தருக.**

(1) **உணவுப் பிரச்சனை ஏற்படல்:** உலக சனத்தொகையில் 1/3 பங்கினர் உணவுப் பற்றாக்குறையூட்டத்தால் தவிக்கின்றனர். ஆசிய ஆபிரிக்க நாடுகளில் வாழ்பவர்கள் 60% குறைந்தபட்சக் கலோரித் தேவையைக் கூடப் பூர்த்திசெய்ய முடிவதில்லை.

(2) **தொழில் வதிவிடப் பிரச்சனை ஏற்படல்:** வேலையின்மையால் மனிதவலு வெளியேற்றம் மூளைசாலிகள் வெளியேற்றம் இடம்பெற்றுள்ளது. சமனற்ற குடிப்பரம்பல், ஓரிடப்படுத்தப்பட்ட குடியடர்த்தி, நகரங்கள் பெருகுதல் போன்ற வதிவிடப் பிரச்சனைகள் தோன்றியுள்ளன.

(3) **அபிவிருத்தி தடைப்படல்:** சேமிப்பு குறைந்து முதலீடு குறைதல், அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை ஏற்படல் போன்றன அபிவிருத்தியைப் பாதிக்கும்.

(4) **சூழல் மாசுறுதல் ஏற்படல்:** நகரமயமாக்கம் இடம்பெறுவதால் காடுகள் அழிக்கப்பட்டு மண்ணரிப்புக்கள் ஏற்படும். இயற்கை வளங்கள் தேய்வடையும். சக்தி மூலங்கள் பற்றாக்குறை ஏற்படும்.

**52. சனத்தொகை வளர்சிவீத அதிகரிப்பு அபிவிருத்தியைப் பாதிக்கும் வகையைத் தருக.**

(1) ஆள்வீத வருமானம் குறைவடைதல் - சேமிப்புக் குறைவடையக் காரணமாகும்.

(2) தொழிலமைப்பு பாதிப்பால் - மொத்தத் தேசிய உற்பத்தி குறைந்து செல்லும்.

(3) சமூகச் செலவீடுகளும் சமூகப் பொது முதலீடுகளும் அதிகரிக்கும்.

(4) உணவு, உடை, மருந்து வகைகள் அதிகளவு இறக்குமதி செய்வது அந்நியச்செலாவணியைப் பாதிக்கும்.

(5) சனத்தொகை அதிகரிப்பு - விவசாய நிலப் பிரச்சனையை ஏற்படுத்தும்.

**53. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் எதிர்நோக்கும் வர்த்தகப் பிரச்சனைகள் நான்கு தருக?**

(1) **ஏற்றுமதிப் பொருள்களுக்கு குறைந்த விலை கிடைத்தல்:** ஏற்றுமதி செய்யும் முதனிலைப் பொருட்களின் விலை தொடர்ந்து குறைந்து செல்லல், இறக்குமதி செய்யும் கைத்தொழில் பொருட்களின் விலை அதிகரித்தல், அன்னியச் செலாவணிப் பிரச்சனை ஏற்படல்.

(2) **மூலதனச் சம்பாத்தியம் பாதிப்படைதல்:** முதனிலைப் பொருட்கள் விற்பனையில் சாதாரண விலை கிடைக்காமை. விலைத்தளம்பலுக்கு உட்படல். சந்தைப்படுத்துவதில் இடர்பாடுகள். அபிவிருத்தியடைந்த நாடுகள் ஏற்றியிறக்கல், வர்த்தக நிறுவன நடவடிக்கைகள் மூலம் இலாபத்தில் பெரும்பகுதியைப் பெறுதல்.

(3) **அபிவிருத்தியடைந்த நாடுகளின் பாதுகாப்புத் திட்டங்கள் தடையாக அமைதல்:**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ+ம்: சுங்க வரிமுறை. வழங்கீட்டுத்திட்டம். ஐரோப்பிய பொதுச்சந்தை நடவடிக்கைகள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பாதகமாக உள்ளன.

(4) உலக வர்த்தகத்தில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் 20% மட்டுமே பெற்றுள்ளன. அபிவிருத்தியடைந்த நாடுகளின் வடக்குத் தெற்குக்கிடையிலான வர்த்தகம் எதிர்காலத்தில் தெற்கு – தெற்குக் கிடையிலான வர்த்தகமாக அதிகரிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

**54. அபிவிருத்தியடைந்த நாடுகளிடையே வர்த்தக அபிவிருத்திக்காக உருவாக்கப்பட்ட உங்ராட்டின் நோக்கங்களையும் செயற்பாடுகளையும் தருக.**

**(அ) 1964ம் ஆண்டில் நிறுவப்பட்ட இவ்வமைப்பில் 162 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. நான்கு வருடத்திற்கு ஒருமுறை பல்வேறு நாடுகளின் தலைநகரில் கூடும்.**

**உங்ராட்டின் நோக்கங்கள்:**

(1) மூன்றாம் உலக நாடுகளின் ஏற்றுமதிக்கு நிலையான விலையைப் பெற்றுக்கொடுத்தல்.

(2) கைத்தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த வளர்ச்சியடைந்த நாடுகளின் தொழிநுட்ப உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல். சுயமான ஆற்றல் வளங்களைப் பயன்படுத்துதல்.

(3) முதனிலைப் பொருட்களின் விலை வீழ்ச்சியால் ஏறப்டும் கடன் தன்மையைக் குறைக்க முயற்சித்தல்.

(4) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் வர்த்தகத்தில் ஏற்படும் தடைகளை அகற்றி அதன் மேம்பாட்டில் கவனம் செலுத்துதல்.

**(ஆ) உங்கிராட்டின் செயற்பாடுகள்:**

(1) பொது நிதியம் ஏற்படுத்தி முதனிலைப் பொருட்களுக்கு தங்கியிருப்பு நிதி வழங்கியமை.

(2) வர்த்தகக் கட்டுப்பாடுகளை நீக்க விதிகள், சட்டங்கள் ஏற்படுத்தியமை.

(3) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கைத்தொழில் பொருட்கள் ஏற்றுமதியை அதிகரிக்கச் செயற்றிட்டம் அமைத்தமை.

(4) தொழிநுட்ப பரிவர்த்தனை பற்றி ஒழுங்குவிதிகள் ஏற்படுத்தியமை.

**55. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கேற்ற தொழிநுட்ப முறையைத் தருக?**

**"பொருத்தமான தொழிநுட்பம்"** இது ஏன் ஏற்றது எனக் கருதப்படுகிறதெனில்

(1) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் கூடியளவு மனித சக்தி உள்ளமையால் மனித உழைப்பு. கூடிய வேலைவாய்ப்பு வழங்க இது ஏற்றது.

(2) இந்நாடுகளில் போதிய மூலதனமின்மையால் உள்நாட்டில் உற்பத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யக்கூடிய முறைகள் கொண்ட பொருத்தமான தொழினுட்பமே ஏற்றது.

(3) பாரம்பரிய தொழில் முறைகளை விருத்திசெய்து பின்பற்றவும் இது ஏற்றது.

(4) பொருத்தமான தொழினுட்ப முறையைப் பின்பற்றி வெற்றி கண்ட நாடாக யப்பான் விளங்குகிறது. யப்பானில் உற்பத்தி செய்யப்படும் பண்ணைக்கான கருவிகள் அந்நாட்டின் விவசாய முறைகள். தரைத்தோற்றம். மண்வளத்திற்கு ஏற்றதாக அமைந்துள்ளது.

### உலகில் சனத்தொகை வளர்ச்சி வேகம் - வீதம் (1994)

#### அபிவிருத்தியடைந்த நாடுகள்

| | | | |
|---|---|---|---|
| யப்பான் | 0.3 | ஐக்கிய அமெரிக்கா | 0.7 |
| சுவீடன் | 0.3 | பிரான்ஸ் | 0.4 |
| டென்மார்க் | 0.1 | அவுஸ்திரேலியா | 0.8 |
| ஐக்கிய இராச்சியம் | 0.2 | சுவிற்சர்லாந்து | 0.3 |

#### அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள்

| | | | |
|---|---|---|---|
| மாலைதீவு | 3.2 | நேபாளம் | 2.4 |
| பங்களாதேஷ் | 2.4 | நைஜீரியா | 3.1 |
| ஈரான் | 3.6 | கம்போடியா | 2.9 |
| பாகிஸ்தான் | 2.6 | இலங்கை | 1.5 |

**"இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வீதம் ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைவிட குறைந்த மட்டத்திலே உள்ளது." காரணங்களைத் தருக.**

(அ) கல்வி விருத்தி

(ஆ) பெண்களுக்கு தொழில் வாய்ப்பு

(இ) பெண்கள் திருமணவயது அதிகரிப்பு

(ஈ) வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு

(உ) குடும்பத் திட்டமிடல் முறைகள்

(ஊ) மனப்பாங்குகளின் மாற்றங்கள்

---

இலங்கையின் சனத்தொகை 1871 - 1971 இடைப்பட்ட 100 வருடங்களில் ஐந்து மடங்கு அதிகரித்துள்ளது. 1871ல் 2.4 மில்லியனாக இருந்த சனத்தொகை 1971ம் ஆண்டில் 12.6 மில்லியனாகவும். 1994ல் 17.8 மில்லியனாகவும் அதிகரித்தது.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாம் அத்தியாயம்

# அபிவிருத்திக்குரிய வழிவகைகள்

**56. சனத்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் வழிகள் மூன்று தருக?**

(1) **தற்காலிகமாகவேனும் சனத்தொகையைக் கட்டுப்படுத்தல்:** சனத்தொகை வளர்ச்சி வேகத்தைக் குறைத்தால் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அவகாசம் கிடைக்கும். உ+ம்: சிங்கப்பூர் இம்முறையில் வெற்றிகண்டுள்ளது.

(2) **சமுதாய மூட நம்பிக்கைகளை ஒழித்தல்:** சமயநம்பிக்கை அடிப்படையில் சம்பிரதாய முறைகளில் பின்பற்றப்படும் வழக்கங்களை நீக்குதல்.

(3) **சமூகநலச் சேவைகள், இலவச விநியோகங்களைக் குறைத்தல்:** அபிவிருத்தியில் ஆர்வம் பெறும் வகையில் மக்கள் மனப்பாங்கினை மாற்றுதல். குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைப் பரப்புதல். சட்டரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். மாணவருக்குச் சனத்தொகைக் கல்வியை வழங்கல். சனத்தொகை அபிவிருத்தி தொடர்பான தகவல்களை வழங்குதல்.

**57. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் காணப்படும் நாசச்சக்கரச் செயற்பாட்டினை விளக்குக?**

(1) குறைந்த வருமானம், நுகர்வுச்செலவு அதிகரிப்பால் சேமிப்பு குறைவடைதல்.

(2) சேமிப்பு விகிதம் குறைவதனால் மூலதனச் சம்பாத்தியம் குறைவடைதல்.

(3) தேசிய மூலதனச் சம்பாத்தியம் குறைவடையக் கைத்தொழில் விவசாயத்தில் முதலீடு குறைவடைதல்.

(4) முதலீடு செய்யப்படும் தொகை குறைவதனால் உற்பத்தி குறைவடைதல்.

(5) உற்பத்தி குறைவடைவதனால் குறைந்த வருமானம் காணப்படல். இவ்வாறு இவை சுற்றோட்டமாக ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளன.

**58. மூலதனப் பற்றாக்குறையை நீக்குதற்குரிய வழிகள் நான்கு தருக.**

மூலதனப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தால், முதலீட்டுக்குப் பணம் கிடைக்கும். உற்பத்தி உயரும். உற்பத்தி உயர வருமானம் உயரும். வருமானம் உயரச் சேமிப்பு உயரும்.

(1) **தேசிய சேமிப்பைப் பெருக்குதல்:** சேவைகள், நலன்புரிச் சேவைகளுக்குச் செலவிடும் பணத்தைக் குறைத்தல்.

(2) **பொருளாதார முறைகளைப் பன்முகப்படுத்தல்:** ஏற்றுமதிகளைப் பன்முகப் படுத்தல். புதிய ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்தல். உ+ம்: சிறு ஏற்றுமதிப் பயிர்ச்செய்கைத் திட்டம், ஆடைத் தொழில், உல்லாசப் பிரயாண அபிவிருத்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) **இறக்குமதிகளுக்கு மாற்றீடான கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்:** உள்நாட்டு தொழிற்றுறையை வளர்த்தல். நுகர்வுப் பாவனையில் மாற்றங்களை ஏற்படுத்தல். வெளிநாட்டுச் சார்பைக் குறைத்தல். இந்தியா. தென்கொரியா. பிரேசில் மாற்றீட்டு கைத்தொழில் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன.

(4) **அந்நிய முதலீடுகளை ஊக்குவித்தல்:** சுதந்திர வர்த்தக வலயங்களை உருவாக்குதல் மூலம் பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களின் முதலீடுகளைப் பெறுதல்.

(5) **அந்நியச் செலவாணியைப் பெருக்குதல்:** உணவு உற்பத்தியை அதிகரித்தல். ஏற்றுமதியைப் பெருக்குதல் மூலம் அந்நியச் செலவாணியை அதிகரிக்கலாம்.

59. **கைத்தொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்குரிய வழிவகைகள் மூன்று தருக.**

(1) **மனித உழைப்பு மூலம் சுதேச வளங்களைப் பயன்படுத்தல்:** பிறநாட்டு இயந்திர சாதனங்கள். எரிபொருள்களுக்கான செலவை இதன் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம்.

(2) **இறக்குமதிப் பொருட்களுக்குப் பதிலான பொருட்களை உற்பத்தி செய்தல்:** ஏற்ற தொழினுணுக்கங்களைக் கைக்கொள்ளுதல். மூலதனச் செலவைக் குறைக்க இது உதவும்.

(3) **அந்நிய முதலீடுகளை வரவழைத்தல். சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தல்:** சுதந்திர வர்த்தக வலயங்களை அமைத்தல். பிரதேச அடிப்படையில் சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தல்.

(4) **பொருத்தமான தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி வேலை வாய்ப்பைப் பெருக்குதல்:** உ+ம்: இந்தியாவில் சீனிக் கைத்தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் எளிய இயந்திரசாதனம் நல்ல உதாரணமாகும்.

60. **அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பிறநாட்டு உதவிகளைப் பெறும்போது கவனிக்கவேண்டிய அம்சங்களைத் தருக.**

**பிறநாட்டு உதவிகள்:**

(1) **நன்கொடைகள்:** பொறியணி. நுகர்வுப்பொருள்கள். நிதி. சேவை

(2) **கடன்கள்:** (அ) **வேலைத்திட்டக் கடன்கள்:** பணம். பொறியணி. சிறப்புச் சேவை.
(ஆ) **பண்ட உதவிக்கடன்:** நுகர்வுப் பொருட்கள் உற்பத்தி அல்லது இறக்குமதிக்கு வழங்கப்படுவது.

(3) தொழிநுட்பம். சிறப்பறிஞர் சேவை. புலமைப் பரிசில்களை வழங்கல்.

அ. **நன்கொடைகள் மீளச்செலுத்த வேண்டியதில்லை என்பதால் வறிய நாடுகளுக்கு அனுகூலமாயிருக்கும்.** *i* நீண்டகால நோக்கில் பயனை ஆராய்ந்து பெற்ற நன்கொடையால் நன்மையுண்டு. *ii* நன்கொடையாகத் தொழிற்சாலையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும்போது அதற்குத் தேவையான மூலப்பொருட்களைப் பெறுதல். உற்பத்தித்திறன். விநியோகம் போன்றன பற்றி நீண்டகால நோக்கில் ஆராய வேண்டும்.

ஆ. **கடன்களின் முக்கியத்துவம் அதன் நிபந்தனைகள். செலுத்திமுடிக்க வேண்டிய காலம். வட்டிவீதத்தில் தங்கியுள்ளது.** *i* வட்டியில்லாக் கடன். குறைந்த வட்டிக்கடன். நெடுந்தவணைக் கடன் ஆகியனவற்றால் கடன் வாங்கிய நாடு நன்மைபெற வாய்ப்பு ஏற்படும். *ii* வட்டிப்பணம் கடன்பெற்ற நாட்டிற்கு சுமையாக அமைந்துவிடும். கடனுக்கு செலுத்தப்படும் வட்டியானது அபிவிருத்தியின் ஒரு கூறேயாகும்.

இ. **தொழிநுட்பம்:** *i* பெறப்படும் நாட்டிற்கு பொருத்தமான தொழிநுட்பமாக அமையவேண்டும். *ii* சுதேச தொழிநுட்பங்களைக் கண்டறிந்து மேம்படுத்த வேண்டும்.

ஈ. பிறநாட்டு உதவியாகக் கிடைக்கும் வளங்களை நுகர்வுக்குப் பயன்படுத்தாது கைத்தொழில் விவசாயத் துறை அபிவிருத்திக்கே பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் மூலதனச் சம்பாத்தியம் பெருகும். விவசாயத் துறையில் அறுவடையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

61. **அபிவிருத்திக்குரிய வழியாகக் கல்விமுறை எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதனைச் சுருக்கித் தருக.**

(1) **கல்விமுறை சமூக. பொருளாதார அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.**

(2) **கல்வி மூலம் மனித சாதனத்தைப் பயிற்றுவித்தல் வேண்டும்.** உற்பத்தியைப் பெருக்கத்தக்கதாக முகாமைத்துவம். தொழில் பயிற்சிக் கல்வி அமைய வேண்டும்.

(3) **விரைவான கைத்தொழிலாக்கத்திற்கு கல்வி அவசியம்:** தொழிநுட்ப அறிவுள்ள தேர்ச்சியுள்ள தொழிலாளர்கள் உருவாக்கப்படல் வேண்டும். முதலீட்டு நிதிப் பற்றாக்குறையைவிடத் தொழிற்பயிற்சி பெற்றவர்கள் பற்றாக்குறையே அபிவிருத்தியைப் பாதிக்கும்.

(4) **நாட்டின் அபிவிருத்திக்கு விவேகம். படைப்பாற்றல். நல்ல மனப்பாங்குகள் கட்டியெழுப்பப்பட வேண்டும்.** அப்போது தான் மனிதவளம் முதலீடாக மாறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாம் அத்தியாயம்

# சர்வதேச தாபனங்கள்

**62. சர்வதேச தாபனங்கள் உருவாக்கப்பட்டமைக்குரிய காரணங்கள் இரண்டு தருக.**

(1) இரண்டாவது உலகப்போரினால் நிர்மூலமாக்கப்பட்ட பொருளாதார வளங்களைப் புனரமைப்புச் செய்தல்.

(2) காலத்துக்குக் காலம் இக்கட்டான நிலையை அடைந்த பொருளாதாரப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல்.

**63. சர்வதேச நாணய நிதியம் (I. M. F.) நோக்கங்கள் அமைப்பு முறையைத் தருக.**

(1) **1945ம் ஆண்டு டிசம்பர் 27ல் அமைக்கப்பட்டது.** 1944ம் ஆண்டு நிதியின் வளங்களில் 80 சதவீத அளவுக்குச் செலுத்திய 44 நாடுகளின் பிரதிநிதிகள் பிரிட்டன் வூட்ஸ் உடன்படிக்கையை உறுதிப்படுத்தியதும் இது தோன்றியது.

(2) **நோக்கங்கள்:** *i* உறுப்பு நாடுகளின் அன்னியச் செலவாணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல். *ii* சர்வதேச ஒத்துழைப்பை வளர்த்தல். *iii* சர்வதேச வர்த்தகத்தை விரிவுபடுத்தல். *iv* சர்வதேச வர்த்தகத்தில் சமநிலையான வளர்ச்சியை ஏற்படுத்தி உறுப்பு நாடுகளின் வேலைவாய்ப்புகள், தனிநபர் வருமானம் ஆகியவற்றை உயர்த்தல். *v* உற்பத்தி வளங்களை அபிவிருத்தி செய்தல். *vi* உறுப்பு நாடுகள் மத்தியில் செலவாணி உறுதிப்பாட்டை ஏற்படுத்தல். *vii* போட்டி நாணய மாற்றுத் தேய்மானங்களைத் தவிர்த்தல்.

(3) **அமைப்பு:** 150 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. நிதியின் அதிகாரங்களைக் கொண்டுள்ள ஆளுநர் சபையில், ஆளுநர் ஒருவரும் உறுப்பு நாடு ஒவ்வொன்றினாலும் நியமிக்கப்பட்ட மாற்று ஆளுநர் ஒருவரும் இருக்கிறார்கள். நிருவாகப் பணிப்பாளர் நிதியின் தொழிற்பாடுகளுக்குப் பொறுப்பாக உள்ளார்.

(4) உறுப்பு நாடுகளிடமிருந்து குறிப்பிட்ட விகிதப்படி சேர்க்கப்பட்ட பணம், உறுப்பு நாடுகளின் கொடுப்பனவு நிலுவைப் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதற்குக் குறுகியகாலக் கடன்களாக வழங்கப்படுகிறது.

**64. சர்வதேச புனரமைப்பு அபிவிருத்தி வங்கியின் (IBRD) (உலக வங்கி) நோக்கங்களைத் தருக?**

(1) **1945ம் ஆண்டு டிசம்பர் 27ம் திகதி அமைக்கப்பட்டது.** ஆரம்பத்தில் இத்தாபனம் இரண்டாம் உலகப்போரின் பின்னர் ஐரோப்பாவில் ஏற்பட்ட புனரமைப்பு நடவடிக்கைகளிலேயே கவனஞ் செலுத்தியது. இப்பொழுது மூலதனமில்லாத உறுப்பு நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு கைகொடுத்து உதவுவதை நோக்காகக் கொண்டுள்ளது. 150 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன.

(2) **நோக்கங்கள்:** *i* மூலதனமில்லாத உறுப்பு நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கும் ஆள்புலங்களின் சீரமைப்புக்கும் உதவுதல். *ii* அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல். *iii* தனியார் நிறுவனங்களின் முதலீட்டிற்கு ஊக்கமளித்தல், துணையாக உதவி செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv சர்வதேச வர்த்தகத்தின் சீரான வளர்ச்சியைப் பேணுதல். v உறுப்பு நாடுகளின் முதலீட்டிற்கு ஊக்கமளித்து கொடுப்பனவு மீதிச் சமநிலையைப் பாதுகாத்தல்.

(3) **அமைப்பு:** ஆளுநர் சபையில் ஆளுநர் ஒருவரும் நிருவாகப் பணிப்பாளர் 20 பேரும் உள்ளனர். சாதாரணமாக ஆண்டுக்கொருமுறை கூடும்.

(4) **இலங்கை பெற்ற உதவி:** 1986 யூன் வரை இலங்கையின் ஏறத்தாழ 12 திட்டங்களுக்கு உலக வங்கியின் மூலம் கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. இதில் மகாவலி அபிவிருத்தித்திட்டம். நீர்மின்சக்தி. ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தி. சிறு தேயிலைத் தோட்டப் புனரமைப்பு ஆகியவற்றிற்கு அதிகளவு கடன் வழங்கியுள்ளது. இக்கடன்களின் மொத்தத் தொகை 210 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

**65. சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் (IDA) நோக்கங்களைத் தருக.**

(1) **1960 செப்டெம்பர் 24ம் திகதி உருவாக்கப்பட்டது:** இது சர்வதேச புனரமைப்பு அபிவிருத்தி வங்கி மூலம் உருவாக்கப்பட்ட தாபனமாகும்.

(2) **நோக்கங்கள்:** i கடன் வழங்கும் முகவராண்மையாக உள்ளது. 50 வருட நீண்டகாலக் கடன்களை மரபு முறையான கடன்களுக்காகிய நிபந்தனை களைவிடச் சுலபமான நிபந்தனையில் வழங்குகிறது. ii உலகின் வளர்ச்சி குன்றிய பகுதிகளிலுள்ள உறுப்பு நாடுகளின் உற்பத்தியைப் பெருக்கி. விவசாய. கிராமிய அபிவிருத்தி. சக்தி நடவடிக்கைகளுக்கு அதிகளவு கடன்களை வழங்கியுள்ளது. iii வறிய நாடுகளுக்குக் கடன் வழங்கல்: 80 வீதத்திற்கு அதிகமான தொகை 410 அமெரிக்க டொலருக்குக் குறைந்த தனிநபர் மொத்தத் தேசிய உற்பத்தியையுடைய நாடுகளுக்கு வழங்கப்பட்டது.

(3) **அமைப்பு:** வங்கியின் ஆளுநர் சபையினரும் நிருவாகப் பணிப்பாளர்களும் சங்கத்திலும் அதே பதவிகளை வகிக்கிறார்கள்.

(4) **இலங்கை பெற்ற உதவி:** 1988ல் இலங்கையின் நான்கு திட்டங்களுக் கடன் வழங்கியுள்ளது.

**66. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) நோக்கங்களைத் தருக?**

(1) **1966ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.** இவ் வங்கி அமைப்பதற்கான அடிப்படை 1963ம் ஆண்டில் மணிலாவில் கூடிய ஆசிய தூர கிழக்கு ஆணைக்குழுவின் அமைச்சர்களால் வகுக்கப்பட்டது.

(2) **நோக்கங்கள்:** i ஆசிய பசுபிக் வலயத்தின் அபிவிருத்திக்கு வேண்டிய நிதியைக் கொடுத்தல். ii பொருளாதார கொள்கைகளை இணைப்பாக்கம் செய்யும் போது உறுப்பு நாடுகளுக்கு உதவி வழங்கல். iii பிரதேச ரீதியாகக் காணப்படும் வளங்களிலிருந்து உச்சப் பயனைப் பெறச்செய்தல். iv அபிவிருத்திக்காக மூலதனத்தையும் தொழில்நுட்ப உதவிகளையும் பெற்றுக்கொடுத்தல்.

(3) **அமைப்பு:** ஆசிய பசுபிக் பிராந்தியத்தைச் சேர்ந்த 31 நாடுகளையும் இப்பிராந்தியத்திற்கு வெளியேயுள்ள மேற்கு ஐரோப்பிய அமெரிக்கா போன்ற 14 நாடுகளையும் உறுப்பு நாடுகளாகக் கொண்டமைந்துள்ளது.

(4) **இலங்கை பெற்ற உதவி:** 1987ல் திட்டக்கடனாக 789 மில்லியன் ரூபாவை இலங்கைக்கு வழங்கியது. 1981ல் இலங்கையின் நான்கு திட்டங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் அனுமதிக்கப்பட்டது. அவையாவன i இரண்டாவது கைத்தொழில் அபிவிருத்தித் திட்டம். ii கல்வித்துறை சார்ந்த இரண்டாவது தொழில்முறைப் பயிற்சித் திட்டம். iii நகர அபிவிருத்தி சார்ந்த மாநகரத்திட்டமும் முகாமைத்துவத்திட்டமும். iv நீர்ப்பாசனம். சுகாதார முறைகளைப் புனரமைக்கும் திட்டம்.

67. கொழும்புத் திட்டத்தின் (*Colombo Plan*) நோக்கங்கள். அமைப்பைத் தருக?

(1) **1950ல் உருவாக்கப்பட்டது:** 1951 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. தெற்கு. தென்கிழக்கு ஆசிய நாடுகளினது சமூக பொருளாதார முன்னேற்றத் திற்கான ஒத்துழைப்புத் திட்டமாக வரையப்பட்டது.

(2) **நோக்கங்கள்:** i தெற்கு. தென்கிழக்காசிய நாடுகளின் பொருளாதாரத்தையும் வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்துதல். ii உறுப்பு நாடுகளின் அபிவிருத்தி வேலைகளைத் திட்டமிடல். iii தொழிநுட்ப உதவியின் கீழ் நிபுணர்களின் சேவையைப் பெற்றுக் கொடுத்தல். iv பயிற்சி பெறுவதற்குரிய புலமைப் பரிசில் களை வழங்கல். v விவசாயம். கடற்றொழில். கைத்தொழில் திட்டங்களை வரைதல். vi தொழிநுட்ப உதவி. பண்ட உதவி வழங்கல் முதலிய பல நோக்கங்களைக் கொண்டு விளங்குகிறது. vii தேசியத் திட்டங்களுக்கு மாத்திரம் மூலதன உதவி வழங்குகிறது.

(3) **அமைப்பு:** 26 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இதில் 20 நாடுகள் அபிவிருத் தியடைந்து வரும் நாடுகள். ஏனையவை அபிவிருத்தியடைந்த நாடுகளாகும். பொதுநலவாய மண்டலத்தைச் சேர்ந்த ஐந்து நாடுகள் உருவாக்கிய இத்திட்டத்தில் பின்னர் பொதுநலவாய அமைப்பைச் சாராத நாடுகளும் சேர்ந்துள்ளன.

68. ஆசியான் (*ASEAN*) தாபனத்தின் நோக்கத்தை தருக.

(1) **1967ம் ஆண்டு அமைக்கப்பட்டது:** தென்கிழக்காசிய வலயத்தின் பொருளாதார முன்னேற்றத்தை துரிதப்படுத்துவதையும் அதன் உறுதிப்பாட்டை மேம்படுத்துவதையும் குறிக்கோளாக கொண்டுள்ளது.

(2) **நோக்கங்கள்:** i. ஆரம்பத்தில் பாதுகாப்பையும் அரசியலையும் மாத்திரம் அடிப்படையாகக் கொண்டிருந்தது. மக்கள் சீனக் குடியரசின் ஆக்கிரமிப்பு முயற்சிகளுக் கெதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்துவதாகும். ii. அங்கத்துவ நாடுகளுக்கிடையே சமாதானத்தைப் பேணவும் பிராந்திய ஒருமைப்பாடு அரசியல் உறுதிப்பாட்டை பாதுகாக்கவும் கூட்டாக இயங்குதல். iii. சமூக பொருளாதார கலாசார உறவுகளைப் பேணல். அபிவிருத்தியை ஏற்படுத்த ஒத்துழைத்தல். iv. வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல். கூட்டுக்கைத் தொழில்களை ஆரம்பித்தல். v. வர்த்தக நடவடிக்கைகளில் வலய நாடுகளுக்கு முன்னுரிமை வழங்கல் ஆகியவற்றை நோக்கங்களாக குறிப்பிடலாம்.

(3) **அமைப்பு:** இந்தோனேசியா. பிலிப்பைன்ஸ். சிங்கப்பூர். தாய்லாந்து ஆகிய நாடுகள் முதலில் அங்கத்துவம் வகித்தன. 1984ல் புறூணையும் 1987ல் பபுவாநியுகினியும் அங்கத்துவம் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) **இலங்கையும் ஆசியானும்:** i. இந்து சமுத்திரத்தை சமாதானப் பிராந்தியமாகப் பிரகடனம் செய்தல். ii. ஏற்றுமதி பொருள்களுக்குச் சிறந்த விலையை பெற்றுக்கொள்ளல் போன்றவற்றிக்கு ஆதரவு தேட இலங்கையும் இத்தாபனத்தில் சேரும் நோக்கத்தினைக் கொண்டுள்ளது.

## 69. உலக சுகாதார தாபனம் (WHO)

(1) 1948ல் உருவாகியது: 26 ஐ.நா. உறுப்பினர் அமைப்புவிதிகளை உறுதி செய்தபின் உருவாக்கப்பட்டது. சமூக அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு சர்வதேச சுகாதார நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் மத்திய நிலையமாக விளங்குகிறது.

(2) **நோக்கங்கள்:** i. இத்தாபன யாப்பிலே இதன் குறிக்கோள் உள்ளது. "சகல மக்களுக்கும் மிக உயர்ந்த சுகாதார வசதிகளைச் செய்து கொடுத்தல்". ii. நோய்களைக் கட்டுப்படுத்தல். வேரோடு அழித்தல். ஆய்வுகள் மேற்கொள்ளல். iii. சூழல் நலம். குடும்ப நலம்பேண உதவுதல். iv. உலகம் முழுவதும் பரவலான சுகாதாரச் சேவைகளை வழங்குதல். v. அகால மரணங்களை தவிர்த்தல். புற்றுநோய். இருதய நோய். உளநோய் போன்றனபற்றி நிதானத்துடன் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல். vi. வைத்திய நிபுணர்களுக்கும் சுகாதார தொழிற்துறை பிரிவினர்களுக்குமிடையில் ஒத்துழைப்பை வளர்த்தல். vii. "2000 ஆண்டு சகலருக்கும் சௌக்கியம்" என்ற தொனிப்பொருளில் 1984ம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட உலகளாவிய திட்டத்தைச் செயற்படுத்தல். viii. அயன மண்டலத்தில் பரவும் நோய்களான மலேரியா. டெங்குகாய்ச்சல். கழிச்சல் முதலியன பற்றியும். மேற்கு நாடுகளில் தற்போது பரவிவரும் எயிட்ஸ் நோய் பற்றியும் ஆராய்ச்சிகளிலீடுபட்டு வருகிறது.

(3) **அமைப்பு:** 156 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. உலக சுகாதார தாபனத்தின் ஆளுநர் சபை ஒரு வருடத்திற்கு ஒருமுறை கூடி அமைப்பு முறை. கொள்கை. செயற்திட்டம். நிதித்திட்டமிடல் போன்றவற்றை தீர்மானிக்கும். நிர்வாக சபை 30 அங்கத்தவர்களைக் கொண்டது. ஆண்டில் குறைந்தது இரண்டு தடவை கூடும். இதன் தலைமையகம் சுவிற்ஸலாந்தின் ஜெனீவா நகரில் அமைந்துள்ளது.

## 70. உணவு விவசாய தாபனம் (FAO)

(1) **1945 அக்டோபர் 16ம் திகதி உருவாக்கப்பட்டது:** உலக மக்கள் யாவரும் தேவைகள் பூர்த்தியாக்கப்பெற்றுத் தமது வாழ்க்கையை நடாத்த வேண்டும் என அத்திலாந்திக் சாசனத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களிலிருந்து உருவானதே உலக விவசாய தாபனமாகும்.

(2) **நோக்கங்கள்:** i. அங்கத்துவ நாடுகளின் போசணை மட்டத்தினையும் வாழ்க்கைத் தரத்தினையும் உயர்த்தல். ii. விவசாயம். காட்டுவளம். மீன்பிடி ஆகியவற்றின் உற்பத்தி விநியோகத்தை விருத்தி செய்தல். iii. கிராம மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல் ஆகிய நோக்கங்களைக் கொண்டுள்ளது. iv. உலக உணவு நிலையை முன்கூட்டியே ஆராய்ந்து உணவுப் பற்றாக்குறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவும் நாடுகளுக்கு உதவுகிறது. v அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் உணவு விவசாய அபிவிருத்திக்கு வேண்டிய தகவல்களையும் விசேட அறிவினையும் வழங்குகின்றது. மண்டலத்திட்டங்கள் மூலம் இத்தாபனம் அபிவிருத்திக்கு உதவுகிறது. vi. "எல்லோருக்கும் உணவு கிடைக்கட்டும்" என்பதே இத்தாபனத்தின் பிரமாணமாகும். vii. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வாழும் இலட்சக்கணக்கான மக்களின் பசியையும் வறுமையையும் போக்குவதற்கு பெரும்பாலும் பாடுபடுகிறது. பட்டினிக்கும் வறுமைக்கும் உள்ள தொடர்பை இத்தாபனம் ஏற்றுக்கொள்கிறது. viii. உலகில் வாழுகின்ற எல்லா மக்களும் எல்லா வேளைகளிலும் அவரவருக்குத் தேவையான உணவைப் பெற்றுக் கொள்வதற்குப் பௌதீகரீதியாகவும். பொருளாதார ரீதியாகவும் இயல்பு இருக்க வேண்டுமென்பதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

(3) **அமைப்பு:** 1986ம் ஆண்டு 156 நாடுகள் அங்கத்துவம் வகித்தன. அங்கத்துவ நாடுகளில் பிரதிநிகளைக் கொண்ட மாநாடு ஒன்றுவிட்ட ஓர் ஆண்டு கூடி நிறுவனத்தின் கொள்கையைத் தீர்மானிப்பதுடன் வரவு செலவுதிட்டம். உலக நிகழ்ச்சித் திட்டம் ஆகியவற்றையும் அங்கீகரிக்கிறது.

(4) **இலங்கைக்கு உதவி:** 1964 தொடக்கம் இன்றுவரை உணவு விவசாய நிறுவனம். நீர்பாசனக் குளங்களின் புனரமைப்பு. உலர்வலய விவசாய அபிவிருத்தி. கிராம அபிவிருத்தி. குடியேற்ற வாசிகளுக்கான உணவு வழங்கல். கால்நடை அபிவிருத்தி. ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தி போன்றவைகளுக்கு உதவிகளை வழங்கியுள்ளது.

## எட்டாம் அத்தியாயம்

# அபிவிருத்தியடைந்துவரும் இலங்கை

71. **புராதன இலங்கையின் தன்னிறைவுப் பொருளாதார முறையின் முக்கிய அம்சங்களைத் தருக.**

(1) **தன்னிறைவுடைய கிராமங்கள் காணப்பட்டமை:** முக்கிய கூறுகளான குளங்கள். வயல்கள். வீடுகள். புன்னிலம். காடு. சந்தை ஆகிய அம்சங்கள் கிராமத்தில் ஒருங்கே காணப்பட்டன.

(2) **வரையறுக்கப்பட்ட தேவைகள் நிலவியமை:** எளிமையான வாழ்க்கை நிலவியமை சாதியடிப்படையில் தொழில்செய்யும் முறை நிலவியமை.

(3) **போக்குவரத்து வளர்ச்சியின்மை:** கிராமங்களுக்கிடையில் தொடர்புகள் குறைவாகக் காணப்பட்டது. கிராமம் தன்னிறைவுடைய பொருளாதார அலகாக வளர்ச்சியடைதல்.

(4) **பண்டமாற்று முறை நிலவியமை:** மிகை உற்பத்தி இல்லை. பணப்புழக்கம் குறைவு. பண்டமாற்று முறையில் வர்த்தகம் நடைபெற்றது. இலங்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமான மண், உகந்த காலநிலை, சமவெளிகள் இடவசதிகள் காணப்பட்டமை. அரசு ஆதரவு கிடைத்தமை. நெல்லை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பு ஆகியன நாடு தன்னிறைவு அடைய உதவியது.

**72. இலங்கையின் தன்னிறைவுப் பொருளாதாரம் ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரமாக மாறியமைக்குரிய காரணங்கள் தருக?**

(1) **பிரித்தானியர் வாழாதாரப் பயிர்ச்செய்கையைப் புறக்கணித்தமை:** விவசாயிகள் காணிகளை இழந்தனர்: நீர்ப்பாசனம் பராமரிக்கப்படவில்லை, நெல் உற்பத்தி தடைப்பட்டது.

(2) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்குச் சாதகமான நிலமைகள் காணப்பட்டமை. அரசாங்க ஆதரவு கிடைத்தமை. துறைமுக அபிவிருத்தி, போக்குவரத்து வளர்ச்சி, தொடர்புசாதன விருத்தி பெருந்தோட்ட பயிர்ச்செய்கை வளர்ச்சிக்கு உதவியது.

(3) **தேசிய கைத்தொழில்கள் வீழ்ச்சியடைந்தமை:** உணவுப் பொருட்கள் இறக்குமதிசெய்ய ஆரம்பிக்கப்பட்டமை: பிரித்தானியர் தமது கைத்தொழில் தேவைகளைப் பூர்த்திசெய்வதையே நோக்காகக் கொண்டிருந்தனர். இந்தியா, பர்மாவிலிருந்து அரிசி, பால், மீன் இறக்குமதி செய்யப்பட்டமை.

(4) **சமூக அமைப்பில் மாற்றம் ஏற்பட்டமை:** புதியவகுப்பினர் (மத்திய வகுப்பினர்) உதயம், பணப்புழக்கம், சாதியமைப்புகள் நலிவுறல், போக்குவரத்து வளர்ச்சி ஆகிய காரணிகளால் பொருளாதார மாற்றம் ஏற்பட்டது.

**73. ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தை விளக்குக?**

(1) கூடுதலான அந்நிய செலாவணியைப் பெற்றுத் தருகிறது. ஏறத்தாள 37 சதவீதம் வர்த்தகப்பயிர்கள் ஏற்றுமதியிலிருந்து பெறப்படுகிறது. 1990 இல் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் தேயிலையிலிருந்து 24.9 வீதமும், இறப்பரிலிருந்து 4 வீதமும், தெங்குப் பொருட்களிலிருந்து 8 வீதமும் பெறப்பட்டது.

(2) **உலக ஏற்றுமதியில் முக்கிய இடம் பெறுகிறது:** உலகத் தேயிலைத் தேவையில் 17 சதவீதமும் இறப்பரில் 4 சதவீதமும் இலங்கையால் வழங்கப்படுகிறது. உலகத் தெங்குப் பொருள் உற்பத்தியில் இலங்கை நான்காவது இடத்தைப் பெறுகிறது.

(3) **உலகச் சந்தையில் நமது ஏற்றுமதிப் பொருள்கள் விலைத் தளம்பலுக்கு உட்படுகிறது:** இறக்குமதி செய்யப்படுகின்ற உணவுப் பொருள்கள், மருந்து வகைகள், எண்ணெய் ஆகியனவற்றின் விலைகள் உயர்ந்து செல்கின்றன.

**74. இலங்கையின் அபிவிருத்திக்குத் தடையாகவுள்ள காரணிகள் யாவை?**

(1) துரிதமாகப் பெருகிவரும் சனத்தொகை.

(2) ஏற்றுமதிப் பொருள்களுக்கு நியாயமானவிலை கிடைக்காமை.

(3) மூலதனப் பற்றாக்குறை.

(4) கனிப் பொருளெண்ணை போன்ற சக்திவளங்கள் இல்லாமை.

(5) விஞ்ஞான தொழினுணுக்க முன்னேற்றக் குறைபாடுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**75. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை மூலம் உண்டான நன்மைகளைத் தருக?**

(1) **தேசிய வருமானம் அதிகரித்தது:** பயிர்ச்செய்கைப் பொருள்களை ஏற்றுமதி செய்து அரசாங்கம் பெருந்தொகையான வருமானத்தைப் பெற்றது.

(2) **போக்குவரத்து வளர்ச்சி, சமூகநல சேவைகள் வளர்ச்சி ஏற்பட்டது:** பெருந்தெருக்கள், புகையிரத பாதைகள் அமைக்கப்பட்டன. பிரதான துறைமுகம் அபிவிருத்தி செய்யப்ப... தந்திச் சேவைகள், வங்கி முறைகள், கல்வி முறைகள் வளர்ச்சியடைந்தன.

(3) **புதிய தொழில்கள் தோன்றின:** எழுதுவினைஞர், ஒப்பந்தக்காரர், சுகாதார சேவையாளர், களஞ்சியக் கட்டுப்பாட்டாளர் போன்ற பதவிகள் உண்டாயின.

**76. பெருந்தோட்ட பயிர்ச்செய்கை மூலம் உண்டான தீமைகளைத் தருக.**

(1) **தன்னிறைவுப் பொருளாதாரம் சீர்குலைந்தது:** நெற்செய்கை தடைப்பட்டமை, ஆதரவின்மையால் விவசாய பொருளாதாரம் சீர்குலைந்தது. அரிசி, சீனி, மிளகாய் போன்ற உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் கொள்கையால் தன்னிறைவுத் தன்மை மாறியது.

(2) **தேசிய கைத்தொழில்கள் சீர்குலைந்தன:** இறக்குமதிப் பொருட்களை நுகரும் பழக்கம் பரவியது. இரும்பு, உருக்கிரும்பு, புடவைக் கைத்தொழில்கள் வீழ்ச்சியடைந்தன.

(3) **மலைநாட்டில் நிலப்பிரச்சனை உருவாகியது:** பிறநாட்டவர் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காகக் காணிகளைப் பெற்றதனால் இப்பிரச்சனை உருவாகியது. மலைநாட்டுக் காடுகள் அழிக்கப்பட்டதனால் மண்வளம், நீர்வளம் பாதிக்கப்பட்டது.

(4) **இந்தியத் தமிழர் பிரச்சனை உண்டானது:** இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் இவர்களுக்கு பிரஜாஉரிமை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் பிரச்சனைக்கு முக்கிய காரணமானது.

**77. இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி தொடர்பான பிரச்சனைகள் நான்கு தருக.**

* இலங்கை மேற்கத்திய இறப்பு வீதத்தையும், ஆசியாவின் பிறப்பு வீதத்தையும் கொண்டுள்ளது. 1981ல் சனத்தொகை வளர்ச்சி 1.7 வீதமாகும். 41 ஆண்டுகளில் சனத்தொகை இருமடங்காகலாம்.

(1) **தங்கியிருப்போரின் வீதம் அதிகரித்துள்ளமை:** 1981ல் தங்கியிருப்போர் 66% ஆகவும், 14 வயதுக்குட்பட்டவர்கள் 35.3% ஆகவும் இருந்தனர். தங்கியிருப்போரில் இளையோர் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால் நலன்புரிச் சேவைகள் செலவு அதிகரிக்கும். இதனால் முதலீடு குறையும், அபிவிருத்தி பாதிப்படையும்.

(2) **உணவுப் பிரச்சனை நிலவுதல்:** உணவில் 45% இறக்குமதி செய்யப்படுகிறது. சராசரி மனிதனுக்குக் கிடைக்கவேண்டிய உணவு 2300 – 2500 கலோரியாகும். 1985ம் ஆண்டு கணிப்பின்படி 2050 கலோரிப் பெறுமான உணவே கிடைத்தது. உணவுப் பொருட்கள் இறக்குமதியால் அந்நிய செலாவணிப் பிரச்சனையும் உருவாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) **நிலப்பிரச்சனை வதிவிடப் பிரச்சனை காணப்படல்:** அதிகரிக்கும் சனத்தொகை தலைக்குரிய நிலத்தினை குறைக்கும். இலங்கையில் 1901ல் ஒருவருக்கு 4.5 ஏக்கர் நிலம் காணப்பட்டது. 1981ல் 0.9 ஏக்கராக குறைந்துள்ளது. சனத்தொகை வளர்ச்சி வீதத்தின்படி 2001ம் ஆண்டில் வருடாந்த வீடுகளின் தேவை ஒரு இலட்சமாக அமையலாம் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

(4) **வேலையில்லாப் பிரச்சனை நிலவுதல்:** இலங்கையில் ஆண்டு தோறும் வேலையில்லாதோர் தொகை 125000 முதல் 150000 வரை அதிகரித்துச் செல்கிறது. வேலையற்றவர்களில் அரைப்பங்கினர் க. பொ. த. (சா. த.). க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்தியடைந்தவர்கள். நாட்டின் அபிவிருத்தியில் படித்தவர்களை ஈடுபடுத்தாவிடின் கல்விக்கான முதலீடு நட்டமாக அமைகிறது.

**78. இலங்கை சனத்தொகையில் வயதமைப்பு நாட்டின் அபிவிருத்தியில் எவ்வித பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது?**

(1) 1981ம் ஆண்டுச் சனத்தொகை வயதமைப்பின்படி தங்கியிருப்போர் 66 சதவீதமாகும்.

(2) 14 வயதுக்கு குறைவானவர்கள் 35.3 சதவீதமாக உள்ளமையால் உணவு. சுகாதார வசதிகள், கல்வி வசதிகள். தொழில் வாய்ப்பு ஆகியவற்றிற்கு கூடுதலான பணத்தைச் செலவிட நேரிடுகிறது.

(3) இலங்கையின் வருமானம் தாழ்ந்த மட்டத்திலிருப்பதனால் தங்கியிருப்போர் சுமையினால் சேமிப்பு குறைவடையும். இதனால் மூலதனச் சம்பாத்தியம் பாதிப்படையும்.

**79. வர்த்தக விவசாய அபிவிருத்திகளில் காணப்பட்ட முக்கிய அம்சங்களைத் தருக?**

**வர்த்தக விவசாய அபிவிருத்திக்கு இருவழிகள் காணப்பட்டன:**

i. பயிர்ச்செய்கை நிலத்தைப் பெருக்குதல். ii விளைச்சலைப் பெருக்குதல். முதலாவது வழி முடியாத காரியமாகையால் இரண்டாவது வழியில் கவனம் செலுத்தப்பட்டது.

**அ. விளைச்சலைப் பெருக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:**

(1) **மீள்நடுகைத் திட்டம் செயற்படுத்தப்பட்டமை:** மீள்நடுகைக்கான அரசாங்க மானியம் அதிகரிக்கப்பட்டது. 1977ல் வழங்கப்பட்ட தேயிலை மீள்நடுகை மானியம் 1985ல் அதிகரிக்கப்பட்டது.

(2) **அதிக விளைச்சலைத் தரும் நாற்றுக்களை நடும் திட்டம் பின்பற்றப்பட்டமை:** 1981ல் ஏக்கருக்கு 3000/= ரூபாவும் புதிய நடுகைக்காக 3500/= ரூபாவும் வழங்கப்பட்டது.

(3) **பசளை மானியம் வழங்கப்பட்டமை:** 1960ல் தெங்குப் பயிருக்கு வழங்கப்பட்ட பசளை மானியம் 1976லும் 1981லும் உயர்த்தப்பட்டது.

**ஆ. உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் வழங்கப்பட்ட உதவிகள்:** சிறு தோட்டச் சொந்தக்காரர்களுக்கு இவ்வுதவிகள் வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. விவசாய ஆலோசகர் சபை ஆரம்பிக்கப்பட்டமை: ii. தேயிலைச் சிறு உடமைகள் உற்பத்தி மேலாண்மைச் சபை நிறுவப்பட்டது. iii. நிதி உதவித்திட்டம் உருவாக்கப்பட்டது.

**இ. உற்பத்தித் திறனைப் பெருக்கும் நோக்குடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:**

(1) **தொழிற்சாலைகள் நவீனமயப்படுத்தப்பட்டமை:** i. ஹினி மதுமை. அக்குரஸ்ஸ ஆகிய இடங்களில் நவீன அமைவுள்ள தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டமை. ii. குற்றி இறப்பர் தொழிற்சாலைகள் மாவனல்லை. களுத்துறை. இரத்தினபுரியில் அமைக்கப்பட்டன.

(2) **தொழிலாளர்கள் சேமநலன்கள் ஏற்படுத்தப்பட்டமை:** வேதன அதிகரிப்பு. வீட்டு வசதிகள். சமூகநல சேவைகள் அதிகரிக்கப்பட்டன.

**ஈ. விலைத் தளம்பலை நீக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை:** i. 1980 மே மாதம் பாண்டுங்கில் நடைபெற்ற தேயிலை விற்பனை பற்றிய மகாநாட்டு நடவடிக்கைகள். ii. 1977ல் உங்ராட் மூலம் இறப்பர் விலையை ஐந்து வருடங்களுக்கு உடன்பாடு ஏற்பட்டமை. iii. மலேசியா. இலங்கை ஆகியன இயற்கை இறப்பர் விலைகளை நிலையாக வைத்திருக்க ஒப்பந்தம் செய்தமை.

**உ. காணிச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டமை: தோட்டங்கள் அரசுடமையாக்கப்படல்:** 1972ல் காணிச்சீர்திருத்தச் சட்டத்தின்படி தனியார் கம்பனிகளின் கையிலிருந்த 56% தேயிலைத் தோட்டங்களில் 24.3% காணி ஆணைக்குழு வசமானது.

**80. நுகர்வுப் பயிர்ச்செய்கை அபிவிருத்தி நடவடிக்கைகளைச் சுருக்கமாகத் தருக?**

**நுகர்வுப் பயிர்ச்செய்கை அபிவிருத்தி நடவடிக்கைகள்.**

(அ) நெற்செய்கைப் பரப்பளவைப் பெருக்குதல். (ஆ) ஏக்கருக்கான அறுவடையின் அளவைப் பெருக்குதல் என அமைந்தன.

**நுகர்வுப் பயிர்ச்செய்கை: பரப்பளவைக் கூட்ட எடுத்த நடவடிக்கைகள்:**

(1) 1935ம் ஆண்டு காணி அபிவிருத்திச் சட்டம் மூலம் காணிப்பற்றாக்குறை நிலவிய ஈரவலய விவசாயிகளுக்கு உலர்வலயத்தில் காணிகளைப் பெற்றுக் கொடுக்கும் முறை ஆரம்பிக்கப்பட்டது.

(2) **கல்லோயா அபிவிருத்தித் திட்டம்:** 26,000 ஏக்கர் நிலம் நெல் விவசாயத் திட்டமாக அமைந்தது.

(3) உடவளைவத் திட்டம் 27,500 ஏக்கர் நிலம் அபிவிருத்தி செய்யப்பட்டது.

(4) 1936 – 1966 வரை ஆறு இலட்சம் ஏக்கர் உலர்வலயக் காணிகள் 85,000 விவசாயக் குடும்பங்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது.

(5) துரித மகாவலித் திட்ட மூலம் புதிய 3,20,000 ஹெக்ரேயர் நிலம் உட்பட 350,000 ஹெக்ரேயர் நிலம் அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**நுகர்வுப் பயிர்ச்செய்கை விளைச்சலைப் பெருக்க எடுத்த நடவடிக்கைகள்:**

(1) **உத்தரவாத விலைத்திட்டத்தினைச் செயற்படுத்தல்:** நெல்லுக்குரிய உத்தரவாத விலைத்திட்டம் 1948ல் ஆரம்பிக்கப்பட்டது. உத்தரவாத விலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தினால் நெல்லுற்பத்தியை ஊக்குவிக்க பல தடவைகள் அதிகரிக்கப்பட்டன. 1948ல் 1 புசல் 8 ரூபா, 1952ல் 12 ரூபா, 1978ல் 40 ரூபா, 1986ல் 62 ரூபா 50 சதமாக அதிகரித்தது.

(2) **விவசாயிகள் காப்புறுதித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டமை:** 1958ல் நெற்பயிர்ச்செய்கை காப்புறுதித் திட்டமும், 1987ல் விவசாயக் காப்புறுதித் திட்டமும் அறிமுகம் செய்யப்பட்டது. ...சாயிகளின் வருமானத்தின் நம்பிக்கையற்ற தன்மை இதனால் நீக்கப்பட்டது.

(3) **விவசாயிகளுக்கு கடன் வசதிகள் அளிக்கப்பட்டமை:** 1961ல் மக்கள் வங்கி திறக்கப்பட்டமை கிராமப்புறத்தவர்கள் கடன் வசதிபெற உதவியது. 1992ல் இலங்கை வங்கி ஆரம்பித்த விவசாய சேவை நிலையமும் விவசாயிகளுக்கு உதவியது.

(4) **1978ல் விவசாய அபிவிருத்திச் சபை நிறுவப்பட்டமை:** விவசாய நடவடிக்கைகள் பற்றிய இறுதி முடிவை எடுக்கும் பொறுப்பினைக் கொண்டமைந்தது.

(5) **புதிய உற்பத்தி முறைகள் புகுத்தப்பட்டமை:** இரசாயன பசளைவகை கிருமி கொல்லி மருந்து வகைப்பயன்பாடு விருத்தி செய்யப்பட்டது. புதிய நெல்லினங்களான B.G.11, L.D.66, B.G.344, I.R.8, அறிமுகம் செய்யப்பட்டமை. 1972ல் விவசாய ஆராய்ச்சிப் பயிற்சித்தாபனம் நிறுவப்பட்டமையும் விளைச்சலைப் பெருக்க உதவியது.

## துரித மகாவலித் திட்டம் 1978 – 1984

**81. துரித மகாவலித் திட்டம் என ஏன் அழைக்கப்பட்டது?**

1970ஆம் ஆண்டில் மகாவலித்திட்டம் 30 வருடகால நீண்டகாலத்திட்டமாக உருவாக்கப்பட்டது. நீண்டகாலப் பெருந்திட்டம் நிகழ்காலப் போக்கிற்கு உகந்ததல்ல எனக் கருதப்பட்டது. 1977ல் இலங்கை எதிர்நோக்கிய முக்கிய பிரச்சினை, நீர்மின்சக்திப்பிரச்சினை, தொழிற்பிரச்சினை ஆகியவற்றிற்குக் குறுகியகாலத் தீர்வைக்காண்பதற்காகப் புதிய திட்டம் உருவாக்கப்பட்டது. முப்பது வருட நீண்டகாலத் திட்டம் ஆறு ஆண்டுகள் வரையுள்ள துரித திட்டமாக மாற்றியமைக்கப்பட்டமையால் துரித மகாவலித் திட்டம் என அழைக்கப்பட்டது.

**82. துரித மகாவலித் திட்டத்தின் முக்கியத்துவத்தைத் தருக?**

(1) தென்கிழக்காசியாவில் முக்கிய பலநோக்குத் திட்டங்களில் ஒன்றாக விளங்குதல்.

(2) பருமனிலும் சேவையிலும் மற்றைய திட்டங்களைவிடப்பாரியது.

(3) மொத்த அரச செலவினங்களின் 44% (1979ல்) செலவிடப் பட்டுள்ளமை.

(4) பழமையானது, வரலாற்றுப் பாரம்பரியத்தை உடையது.

(5) பொருளாதார அபிவிருத்திக்கு ஏற்றதாக இதன் போக்கு அமைந்திருத்தல். ஈரவலயத்தில் ஊற்றெடுத்து உலர்வலயத்திற்கூடாகக் கிழக்கு நோக்கிச் செல்லல். நீர்மின் நிலையங்கள் அமைக்க திசைதிருப்ப ஏற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) **இரு பருவக்காற்றுக்களாலும் நீரைப் பெறுதல்:** வருடந்தோறும் இந்நதி கடலுக்குள் கொண்டு செல்லும் நீரின் அளவு 64 இலட்சம் ஏக்கர் அடி நீராகும்.

(7) **சமய நிகழ்வுகள் இடம்பெறல்:** கண்ட பெரஹரா நீர்வெட்டு நிகழ்ச்சி சிங்கள மக்கள் ஜீவனகங்கா என அழைத்தல்.

(8) **அபிவிருத்திக்கு ஏற்ற [illegible] அமைந்திருத்தல்:** கிளை நதிகளையுடைய தாயிருத்தல். ஏனைய நதிகளுடன் ஒப்பிட்டால் 20% நீரைக் கடலுடன் சேர்க்கின்றது.

**83. துரித மகாவலித் திட்டத்தின் நோக்கங்கள் யாவை?**

(1) உணவில் தன்னிறைவு பெறல்.

(2) வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்த்தல்.

(3) மகாவலிக் கீழ் பள்ளத்தாக்குப் பிரதேசத்தில் குடியேற்றங்கள் மூலம் சமூக கலாசார அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

(4) மகாவலிப் பிரதேச பொருளாதார அபிவிருத்திக்கு உள்நாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல்.

(5) சூழல் பாதுகாப்புத் திட்டத்தை மேற்கொள்ளுதல். புகலரண்களை உருவாக்குதல்.

**84. துரிதமகாவலி அபிவிருத்தி: செய்திட்டங்கள்**

| நீர்த்தேக்கம் | அணையின் உயரம்(மீ) | அணையின் நீளம் (மீ) | கொள்வனவு க.மி.மில்லியன் | மின் ஆற்றல் மெ.வா |
|---|---|---|---|---|
| விக்டோரியா | 122 | 520 | 688 | 210 3×70 |
| கொத்மலை | 87 | 600 | 177 | 201 3×67 |
| இரந்தனிகல | 94 | 485 | 165 | 122 2×61 |
| மாதுறு ஓயா | 25 | 1219 | 473 | – |

**85. துரிதமகாவலித் திட்டத்தினால் பெறப்படும் நன்மைகளைத் தருக.**

(1) **உணவில் தன்னிறைவு அடைதல்:** அ) இலங்கை மொத்த இறக்குமதிச் செலவில் உணவிற்கு 1978ல் 28% செலவிடப்பட்டது. இது 1985ல் 10% ஆகக் குறைந்தது. ஆ) துரித மகாவலித்திட்டப் பயிர்ச்சிசெய்கையால் உணவின் இறக்குமதி அளவும், பெறுமதியும் குறைந்துள்ளது. 1990ல் மகாவலி அதிகாரப் பிரதேசத்தில் 93, 124 ஹெக்ரயரில் நெல் செய்கை பண்ணப்பட்டது.

(2) **நீர்மின்வலு அளித்தல்:** அ) 1980ல் உற்பத்தி செய்யப்பட்ட வலுச்சக்தியில் மகாவலித்திட்ட நீர்மின் உற்பத்தி 40% ஆகும். ஆ) துரித மகாவலி செயற்றிட்டத்தின் மூலம் 1986/87ல் அதிகரிக்கப்பட்ட 70 மெ.வா நீர்மின்வலு உற்பத்தியால் 3250 கோடி ரூபா அந்நியச் செலாவணி பெறப்பட்டுள்ளது.

(3) **சூழல் பாதுகாப்புத் திட்டம் செயற்படல்:** அ) வனவிலங்குப் பாதுகாப்புக்கென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று புதிய புகலரண்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மாதுறு ஓயா. சோமாவதி. வஸ்கொமுவா புகலரண்கள் ஆ) சூழல் அபிவிருத்திக்கு 30.000 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. மகாவலி நீர்த்தேக்கங்களைச் சுற்றி. மலைச்சரிவுகளின் மீளக்காடாக்கம் நடைபெறுகிறது.

(4) **வேலையில்லாப் பிரச்சினை வதிவிடப் பிரச்சினைகளைத் தீர்த்தல்:** அ) துரித மகாவலி செயற்திட்ட காலத்தில் 16 இலட்சடம பேருக்கும். விவசாய உற்பத்திகள் நடைபெறும் போது 14 இலட்சம் பேருக்கும் வேலைவாய்ப்பளிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆ) பத்து இலட்சத்துக்கும் அதிகமான மக்களைக் கொண்ட 1.40.000 குடும்பங்கள் புதிதாகக் குடியேற வாய்ப்பை அளிக்கும்.

86. மகாவலி பலநோக்கு அபிவிருத்தித் திட்டம்

**முக்கிய குறிப்புகள்**

* மகாவலித்திட்டத்தின் முதற்கட்டம் 1970ல் பொல்கொல்லையில் நீர் திசை திருப்பப்பட்டதுடன் ஆரம்பமாகியது.
* பொல்கொல்லைக்கும் சுதுகங்கைக்குமிடையே குடைவழி அமைக்கப்பட்டு மகாவலி நீர் சுதுகங்கைக்கு அனுப்பப்படுகிறது.
* சுதுகங்கை வழியாக அம்பன் கங்கைக்குச் செலுத்தப்படும் மகாவலி நீர் போவத்தனை நீர்த்தேக்கத்தில் சேகரிக்கப்படும்.
* போவத்தனையிலிருந்து லெனதொர என்னும் குடைவழி ஊடாக கலாவாவிக்கு நீர் அனுப்பப்படுகிறது. அனுராதபுரம். நுவரகலாவியவிலுள்ள புராதன குளங்களுக்கு நீர் செல்கிறது.
* கொத்மலை ஓயாவுக்குக் குறுக்கே கடதொற என்னும் இடத்தில் அணைகட்டப்பட்டு கொத்மலை நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டுள்ளது.
* கடல்மட்டத்திலிருந்து அதிஉயரத்தில் உள்ளதும். தரைநீர்மின் பிறப்பாக்கியைக் கொண்டிருப்பதும் கொத்மலைத் திட்டமாகும்.
* மாகவலித் திட்டத்தில் கூடிய மின் உற்பத்தியைக் கொண்ட திட்டம் விக்டோரியாத் திட்டமாகும்.
* இரந்தெனிகலை நீர்த்தேக்கமே மகாவலித் திட்டத்தில் அமைக்கப்பட்ட நீர்த்தேக்கங்களில் பாரியதாகும்.
* மாதுறு ஊயாவின் நீரை அணைகட்டி அமைக்கப்பட்ட மாதுறு ஓயா நீர்த்தேக்கம் மகாவலித் திட்டத்தில் முதலில் அமைக்கப்பட்டதாகும்.

## பலநோக்கு அபிவிருத்தித் திட்டங்கள்

87. பலநோக்கு அபிவிருத்தித் திட்டங்களின் நோக்கங்கள் யாவை?

1. நீர்ப்பாசன விருத்தி.
2. நீர்மின்வலு உற்பத்தி.
3. வெள்ளப்பெருக்கைத் தடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. உலர்வலயக் குடியேற்றம்.
5. தொழில் வாய்ப்புகளை வழங்குதல்.
6. உபஉணவுச் செய்கை விஸ்தரிப்பு.
7. அந்நியச் செலாவணி சம்பாத்தியம்.
8. உல்லாசப் பிரயாணத் [illegible] விருத்தி.
9. சிறுகைத்தொழில் ஆரம்பித்தல்.

**88. பலநோக்கு அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதாரணங்கள் தந்து சுருக்கமாக விளக்குக?**

**மகாவலி, கல்ஓயா, உடவளவை, லுணுகம்வெகர, இங்கினிமிட்டிய, நில்வளகங்கை.**

(1) **கல்ஓயா ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டம்:** 1949ல் ஆரம்பிக்கப்பட்டது. 78 சதுர கிலோ மீற்றர் விசாலமுடைய சேனநாயக்க சமுத்திரம் என்னும் நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய 50,000 ஹெக்ரேயர் நிலத்திற்கு நீர் வழங்கப்படுகிறது. 10,800 குடியேற்றவாசிகள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். நெல்லுக்கும், கரும்புக்கும் நீர்ப்பாசன முறை மேற்கொள்ளப்பட்டது. 10 மெ.வா. மின்சக்தி உற்பத்தி செய்யப்பட்டது. சீனித்தொழிற்சாலை, செங்கல், ஓட்டுத்தொழிற்சாலை, மதுசார் உற்பத்தித் தொழிற்சாலை, மரவேலைத் தொகுதித் தொழிற்சாலை ஆகியன அமைக்கப்பட்டன.

(2) **உடவளவை நீர்த்தேக்கத் திட்டம்:** தென்கிழக்குப் பிரதேச வரட்சியைப் போக்க நீர் பற்றாக்குறையை நீக்க உதவுகின்றது. ஏறக்குறைய 3440 ஹெக்ரர் நிலத்தில் நீர்த்தேக்கம் பரந்துள்ளது. 24,300 ஹெக்ரேயர் பரப்பு விவசாயத்திற்கு நீர்வழங்க உதவுகிறது. விலங்கு வளர்ப்பு, உபஉணவு செய்கை நடைபெறுகிறது.

(3) **லுணுகம்வெகர நீர்த்தேக்கத் திட்டம்:** அம்பாந்தோட்டைப் பிரதேச அபிவிருத்திக்கு உதவும். 12,960 ஹெக்ரேயர் நிலத்தில் பயிற்ச்செய்கை பண்ண வாய்ப்பு கிடைக்கும். றுகுணுரட்டையின் புராதன சீரும் சிறப்பும் மீண்டும் உண்டாகும்.

(4) **இங்கினிமிட்டிய நீர்த்தேக்கத் திட்டம்:** புத்தளம் மாவட்டத்தின் மீஓயாவுக்குக் குறுக்கே அமைக்கப்பட்டுள்ளது.

(5) **நில்வள கங்கைத் திட்டம்:** கிரலகலைப் பிரதேசத்தின் ஏறக்குறைய 2000 ஹெக்ரேயர் நிலத்தை வெள்ளப்பெருக்கிலிருந்து பாதுகாப்பதை நோக்காகக் கொண்டது.

**89. இலங்கையில் கடற்தொழிலுக்குச் சாதகமான காரணிகள் இரண்டு தருக?**

(1) **இலங்கையைச் சுற்றி நீளமான கடற்கரையோரம், குடாக்கள், களப்புகள் காணப்படுதல்:** 1360 கி.மீ. நீளமான கடற்கரையோரம் மீன்பிடிக் களங்கள் தங்குவதற்கு வாய்ப்பாகக் குடாக்களும், மீன்பிடித்தலுக்கு உகந்ததாக1420 சது. கிலோ பரப்புள்ள உள்நாட்டு நீர் நிலைகளும் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) **விலாசமான கண்டமேடைகள் அமைந்திருத்தல்:** 21.756 சதுர கி. மீ. விசாலமான கண்டமேடை அமைந்துள்ளது. வோட்ஜ். பீதுறு கடலடித்தள மேடைகள் மீன் பிடித்தலுக்கு உகந்ததாக இருத்தல்.

90. **கடற்றொழில் அபிவிருத்திக்கு எடுக்கப்பட்ட ... ங்கைகள் நான்கு தருக?**

(1) **கடற்றொழில் துறைமுகத் தொகுதிகள் அமைக்கப்பட்டமை:** கடல்வளம் நிறைந்த பகுதிகளில் உற்பத்தியைப் பெருக்க உதவின. இவற்றிற்கு அருகே ஐஸ்கூடங்கள், கப்பற் பழுதுபார்க்கும் நிலையங்கள் அமைக்கப்பட்டன.

(2) **தனியார் துறையை ஊக்குவித்தமை:** 1977ம் ஆண்டு முதல் கடற்தொழில் பொருட்களை இறக்குமதி செய்யும் உரிமை தனியார் துறைக்கும் அளிக்கப்பட்டது.

(3) **மீனவர் கடன் வசதிகள் அளிக்கப்பட்டமை:** மீனவர்கள் கலன்கள். வலைகளைக் கொள்வனவு செய்யக் கடற்றொழில் வங்கிகள் அமைக்கப்பட்டன.

(4) **கடற்றொழில் பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டமை: வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புகளைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை:** நீர்கொழும்பில் சீடா தாபனத்தின் உதவியுடன் கடற்றொழில் பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டது.

91. **1971க்கு முன்னர் கைத்தொழில் விருத்தியடையாமைக்குரிய காரணங்கள் மூன்று தருக?**

(1) **தேசிய சந்தைக்குத் தேவையான பொருட்கள் உற்பத்தி செய்யப்படவில்லை:** பாரிய தொழிற்சாலைகள் அமைக்க உதவக்கூடிய மூலப்பொருட்கள், வலுச் சக்திகள் இல்லாமை. துணைப்பொருட்களே (காரியம், இல்மனைட்) அதிகம் காணப்பட்டமை.

(2) **முதலீடுகள் போதாமல் இருந்தமை:** சில கைத்தொழில் முன்னேறவில்லை. சில கூட்டுத்தாபனங்கள் திறைசேரிக்குப் பாரமாக மாறியமை. அந்நியச் செலவாணித் தட்டுப்பாடு பல கைத்தொழில்களை முடமாக்கியது.

(3) **இறக்குமதிப் பொருட்களுக்கு மாற்றீடான பொருட்களை உற்பத்தி செய்யும் முறை வெற்றியளிக்காமை:** இலங்கையில் தொழில்நுட்ப பயிற்சி. அநுபவம் பெற்றவர்கள் குறைவாகக் காணப்பட்டனர்.

92. **1970களின் இறுதியில் ஏற்பட்ட கைத்தொழில் கொள்கை மாற்றங்களை தருக?**

(1) **அரச கூட்டுத்தாபனங்கள் புனரமைக்கப்பட்டன:** அரசாங்க கைத்தொழில் தாபனம் தாபிக்கப்பட்டது. வினைத்திறனும், வருவாய் தரும் வகையிலும் இயங்க ஆரம்பித்தன.

(2) **பாரிய கைத்தொழில்களைத் தனியார்துறையினரும் நடாத்த அனுமதிக்கப்பட்டது:** உ+ம்: மிட்சுபி சீமேந்து. பிரிமாஆலை.

(3) **முதலீட்டு அபிவிருத்தி வலயங்கள் உருவாக்கப்பட்டன:** கட்டுநாயக்கா, பியகம, வெலிசரவில் இவை அமைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) **தேசிய கைத்தொழில்கள் ஊக்குவிக்கப்பட்டன:** பாரம்பரியமற்ற ஏற்றுமதிக் கைத்தொழில் பொருட்களுக்கு 5 வருட வரிச் சலுகைக்குப் பதிலாக 10 வருட வரிச் சலுகை அளிக்கப்பட்டது.

**93. ஒன்றிணைந்த மாவட்ட அ[illegible]த் திட்டத்தின் நோக்கங்களைத் தருக?**

(1) தேசிய மட்டத்திலான பிரதான திட்டங்கள் மூலம் நேரடியாக நன்மை பெறாத பகுதிகளை அபிவிருத்தி செய்தல்.

(2) **மாவட்ட மட்டத்தில் பொருளாதார சமூக அபிவிருத்திகளைத் துரிதப்படுத்தல்:** மாவட்ட ரீதியில் திட்டமிடல், பாதீடு மதிப்பீடுசெய்தல்.

(3) **மாவட்ட ரீதியில் பின்தங்கிய கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தைத் துரிதப்படுத்தல்:** அபிவிருத்தியில் மக்களை ஆர்வமுறச் செய்தல். அவர்கள் பங்களிப்புகளுக்கு இடமளித்தல்.

(4) **அரசதுறை நடவடிக்கைகளில் காணப்பட்ட செயற்திறமின்மையைப் போக்குதல்:** பிரதேசத் தன்மை கொண்ட யதார்த்த பூர்வதிட்டங்களைச் செயற்படுத்தல்.

**94. ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தித்திட்டம் செயற்படுத்தப்படும் மாவட்டங்களுக்கு உதாரணம் தருக?**

| மாவட்டம் | ஆரம்பித்த ஆண்டு | நிதிஉதவும் நிறுவனம் / நாடு |
|---|---|---|
| 1. குருணாகல் | 1979 | உலக வங்கி |
| 2. மாத்தறை | 1979 | சீடா (சுவீடன்) |
| 3. அம்பாந்தோட்டை | 1979 | நோராட் (நோர்வே) |
| 4. நுவரேலியா | 1980 | நெதர்லாந்து |
| 5. களுத்துறை | 1987 | பின்லாந்து |
| 6. பதுளை | 1982 | வேளாண்மை அபிவிருத் திக்கான பன்னாட்டு நிறுவனம் |

**95. புகையிரதப் போக்குவரத்து முறையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளைத் தருக?**

(1) **தொழினுணுக்கப் பிரிவில் முன்னேற்றம்:** நிலக்கரிக்குப் பதிலாக திரவ எரிபொருள் பயன்படுத்தப்படுதல். நிறச் சமிக்ஞை பயன்படுத்தப்படல்.

(2) **சேவை வசதிகள் அபிவிருத்தி:** புகையிரத பஸ் ஒன்றிணைந்த சேவை, உல்லாசப் பிரயாணிகளுக்குச் சொகுசு ஆசன வசதி, பார்வைபீட வசதி, நகரங்களுக்கிடையிலான துரித புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டமை.

(3) **ஏற்றியிறக்கல் வேலை அபிவிருத்தி:** சிப்பங்கட்டும் முறை முன்னேற்றம், கென்ரேனர் பெட்டிகளை எடுத்துச் செல்லும் முறை வளர்ச்சியடைதல்.

**96. பெருந்தெருக்கள் அபிவிருத்தியில் காணப்படும் முக்கிய அம்சங்களைத் தருக.**

(1) **பஸ் போக்குவரத்துச் சேவை தேசியமயமாக்கப்பட்டமை:** 1958ல் தனியார் பஸ் சேவையிலிருந்த குறைபாடுகளை நீக்க அரசாங்கம் இந்நடவடிக்கையை மேற்கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) **1979ல் தனியார் பிரயாணச் சேவை நடாத்த அனுமதிக்கப்பட்டமை:** அதிகரித்த போக்குவரத்தை சமாளிக்கவும். வேலையில்லாப் பிரச்சனைக்கு ஓர் தீர்வாகவும் இது அமைந்தது.

(3) **பெருந்தெருக்கள் அதிகாரசபை அமைக்கப்பட்டமை:** பெருந்தெருக்களை அகலமாக்கல். புதிய வீதிகளை அமை... ...றுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

(4) **1985ல் ஐந்தாண்டுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டமை:** போக்குவரத்தைப் புனரமைக்க ஆரம்பிக்கப்பட்டது.

97. **கொழும்புத்துறைமுக அபிவிருத்தி தொடர்பான மூன்று அம்சங்கள் தருக.**

(1) **கொழும்புத் துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டமை** (1958). இதன் நிருவாகம் துறைமுகக் கப்பற் - கூட்டுத்தாபனத்திடம் விடப்பட்டது.

(2) **இலங்கை துறைமுக அதிகாரசபை நிறுவப்பட்டமை** (1979). இதுவரை துறைமுகநிருவாகத்திற்கு பொறுப்பாகவிருந்த மூன்று தாபனங்களிடம் ஒருங்கிணைப்பு இருக்கவில்லை. இக்குறைபாட்டை நீக்க துறைமுக அதிகாரசபை அமைக்கப்பட்டது.

(3) **மீளக்கப்பலேற்றும் வேலைகளில் முன்னேற்றம் ஏற்பட்டமை:** சிப்பங்கட்டுவது சம்பந்தமாக ஏற்பட்ட மாற்றம். கென்ரேனர் காவுகை முறை தேவையைப் பூர்த்தி செய்ய வசதி கொண்ட கென்ரேனர் தளம் அமைக்கப்பட்டது.

98. **தேசிய கப்பற் சேவையின் பொருளாதார நன்மைகளைத் தருக.**

(1) தொழில் வாய்ப்புக்கள் ஏற்பட்டமை - புதிய முதலீட்டுமுறை என்பதால் சாத்தியமாயிற்று.

(2) தேசிய சேவைகளுக்குரிய கப்பற்கட்டணம் குறைந்தமை - தொழிலாளர் சம்பளக் குறைவால் சாத்தியமாதல்.

(3) வர்த்தக நடவடிக்கைகள் விருத்தியடைந்தமை - புதிய தொடர்புகளால் ஏற்படல்.

(4) கொடுப்பனவு மீதிகளில் முன்னேற்றம் ஏற்பட்டமை - கப்பற் கட்டணம் உள்ளூர் பணத்தில் செலுத்தியமையால் சாத்தியமாதல்.

(5) கப்பற்கம்பனி நடவடிக்கைகளில் செல்வாக்கு ஏற்பட்டமை - அங்கத்துவம் பெற்றதால் வாய்ப்பு ஏற்படல்.

99. **சக்தி நுகர்வின் அவசியத்தைத் தருக?**

(1) பொருளாதார அபிவிருத்திக்குச் சக்தி நுகர்வு அவசியமானது.

(2) கைத்தொழில்கள். போக்குவரத்துச் சேவைகள். வீட்டுப் பாவனைகள். வீதி வெளிச்சம் போன்றவற்றிற்குச் சக்தி அவசியமானது.

(3) இங்கையின் மொத்தச் சக்தி நுகர்வு (1985ல்) 6 மில்லியன் தொன் கனிப்பொருளில் உற்பத்தி செய்யப்படும் சக்திக்குச் சமமாகயிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100. இலங்கையின் சக்தித் தோற்றுவாய்களைத் தருக?

(1) 70% வர்த்தகம் சாராத கைத்தொழில்கள் மூலம் பெறப்படல் (1985ல்) உ+ம்: விறகு. விவசாயக் கழிவுப் பொருட்கள்

(2) 30% வர்த்தகச் சக்தித் தோற்றுவாய்கள் (1985ல்) உ+ம்: பெற்றோலியம். நீர்மின் வலு. வாயு வலு.

101. இலங்கையில் மின்வலு எவ்வாறு பெறப்படுகிறது?

(1) நீர்மின்வலு மூலமும் வெப்ப மின் வலு மூலமும் பெறப்படுகிறது.

(2) **நீர்மின் வலு நிலையங்கள்:** இலக்சபான. இங்கினியாகலை. உடவளவை. விமலசுரேந்திர. பொல்பிட்டிய, உக்குவல: புதிய இலக்சபான (துரிதமாகவலித் திட்டத்தின் கீழ் விக்டோரியா. கொத்மலை. றந்தெனிகலை மின்வலு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன)

(3) **வெப்பமின் வலு நிலையங்கள்:** களனிதிஸ்ஸ: சபுகஸ்கந்தை (டீசல் நிலையம்)

102. இலங்கையின் நீர்மின் உற்பத்திக்குச் சாதகமாவுள்ள காரணிகளைத் தருக?

(1) மலைநாட்டின் வருடம் முழுவதும் பரவிக் காணப்படும் அதிக மழைவீழ்ச்சி.

(2) மத்திய மலைப்பிரதேசத்தில் காணப்படும் குறைப்பாறை. குத்துப்பாறை கொண்ட 55 நீர் வீழ்ச்சிகள்.

(3) சுலபமான அணை கட்டக்கூடிய புவிச்சரித அடித்தளப் பாறைத் தட்டு மலைநாட்டில் காணப்படல்.

(4) நீர்மின்னை விநியோகம் செய்ய ஏற்றதாக மத்திய மலைப்பிரதேசத்தில் இருந்து 250 மைல்களுக்குள் ஏனைய பிரதேசங்கள் இருத்தல்.

103. நீர்மின் வலு பாவனையால் ஏற்பட்டுள்ள நன்மைகள் இரண்டு தருக?

(1) **அந்நிய செலவாணிச் சேமிப்பு ஏற்பட்டமை:** பெற்றோலியத்தில் தங்கியிருக்கும் நிலைமை குறைந்துள்ளது: வர்த்தகச் சக்தி உற்பத்தி செய்வதில் பெற்றோலியம் 1984ல் 60% ஆகயிருந்தது. 1985ல் இது 55% ஆகக் குறைந்தது.

(2) **மிகையான நீர் மின்னை விநியோகித்துப் பயனடையலாம்:** மலை நாட்டில் உள்ள 55 நீர் வீழ்ச்சிகள் மூலம் 10 இலட்சம் கிலோ வொட் மின்சக்தி உற்பத்தி செய்யலாம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மிகையான நீர் மின்னை தென்னிந்தியாவில் சில பகுதிகளுக்கு விநியோகித்து நன்மையடையலாம்.

104. கனிப்பொருளெண்ணை நெருக்கடியைத் தீர்க்க இலங்கையில் எடுக்கக் கூடிய நடவடிக்கைகளைத் தருக?

(1) **நீர்மின் வலுப்பாவனையை அதிகரித்தல்:** பெற்றோலியத்தில் தங்கியிருக்கும் நிலை குறையும்.

(2) **விறகுப் பாவனையைப் பாதுகாத்தல். உச்சப் பயன்பெறல்:** விறகு குறைவாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தப்படும் மட்பாண்டங்களை விநியோகம் செய்தல்.

(3) காடு வளர்ப்புத் திட்டங்களை உலக தாபனங்களின் உதவியுடன் மேற்கொள்ளல்.

(4) குறைந்தளவு மண்ணெண்ணையுடன் எரியும் குப்பிவிளக்குகளை அறிமுகம் செய்தல்.

(5) **விரயமாகாத மாற்றீட்டுச் சக்தி தோற்றுவாய்களைப் பயன்படுத்தல்:** உ+ம்: உயிரியல் வாயு. காற்றுச்சக்தி. சூரிய சக்தி.

**105. இலங்கையில் வீடமைப்பு பிரச்சினைக்குரிய காரணங்களைத் தருக.**

(1) **சனத்தொகையில் வளர்ச்சிவேகத்திற்கமைய வீடமைப்புத் திட்டங்கள் அமையவில்லை:** உ+ம்: 1963–71 காலப்பகுதியில் சனத்தொகை அதிகரிப்பு 19.9% ஆனால் இதே காலப்பகுதியில் வீடுகள் அதிகரிப்பு 12.7% ஆக மாத்திரமே இருந்தது.

(2) **நகரப்புறங்களைச் சேர்ந்த மத்திய வகுப்பினர்க்கே வீட்டுப்பிரச்சினை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டமை:** உ+ம்: நகரப்புற மாடிவீடுகள்.

(3) **வீடமைப்பு கடன் வசதிகளை ஒருசிலரே பெற்று நன்மையடைந்தமை:** சனஅடர்த்தி வேறுபாடு உ+ம்: 1981ல் கொழும்பில் 2603 பேர். வவுனியாவில் 30 பேர். கிராமங்களிலிருந்து நகரங்ளுக்கு இடம் பெயர்ந்தமை. இடப் பெயர்வுவீதம் 3.6% ஆகவுள்ளது.

**106. வீடமைப்பு பிரச்சினையைத் தீர்ப்பதில் பங்காற்றும் நிறுவனங்களைத் தருக?**

(1) **தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (1979):** தொடர்மாடி வீடுகள், வீடுகள் நிர்மாணித்தல், வீடமைப்புத்திட்டங்கள் தயாரித்தல், வீடமைக்க நிலங்கள் பெற்றுக்கொடுத்தல் போன்ற கடமைகளை மேற்கொண்டுள்ளது. 1983க்கு முன் ஒரு இலட்சம் வீடுகள் அமைக்கும் திட்டம் இதனால் பொறுப்பேற்கப்பட்டது.

(2) **தேசிய வீடமைப்பு திணைக்களம் (1954):** 1979க்கு பின்னர் வீடமைப்புக்கடன் நிகழ்ச்சித்திட்டம். தொடர்மாடி வீடமைப்புப் பராமரிப்பு. வாடகைச் சட்டம். வீடமைப்பு ஒழுங்குகளைப் பேணல் போன்ற கடமைகளை மேற்கொள்கிறது.

(3) **அரச முதலீட்டு வங்கி**

(4) **நகர அபிவிருத்தி அதிகாரசபை (1978)**

(5) **வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம்.** வீடமைப்பில் ஈடுபட்டுள்ள தனியார்துறை நிறுவனங்கள்: அ) அரிமாச்சங்கம் ஆ) சர்வோதயத் திட்டம் இ) கீல்ஸ் டெவலப்மன்ட் ஈ) லீபோட்டர்.

**107. வீடமைப்பு பிரச்சனையைத் தீர்க்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளைத் தருக.**

(1) **இலட்சம் வீடுகளை அமைக்கும் நடவடிக்கை:** 1978/83 காலப்பகுதியில் ஒரு இலட்சம் குடிமனைகளை அமைத்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) **பத்து இலட்சம் வீடமைக்கும் நடவடிக்கை:** 1984 முதல் 1989 வரையிலான காலப்பகுதியில் பத்து இலட்சம் குடிமனைக் கூறுகளை அமைக்க திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டம் எழிற்கிராமங்கள். நகர புணரமைப்பு திட்டங்களை உள்ளடக்கியது.

(3) **15 இலட்சம் வீடுகளை அமைக்கும் நடவடிக்கை:** 1990 வீடமைப்பு அபிவிருத்தி திட்டத்தில் இது அடி... ...டளாவிய முறையில் 11 உபதிட்டங்கள் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

(4) **தேர்தல் தொகுதிவாரி வீடமைப்புத்திட்டம்:** எல்லாத் தொகுதிக்கும் 155 வீடுகள் என்ற அடிப்படையில் 168 தேர்தல் தொகுதிக்கும் 26,040 வீடுகளை கட்டிமுடித்தலாகும்.

**108. ஒரு நாட்டின் அபிவிருத்திக்குச் செய்தித் தொடர்பு முறையின் அவசியத்தைத் தருக.**

(1) **விவசாயத்தினைச் சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு செய்திதொடர் அவசியம்:** காலநிலைபற்றிய முன்னறிவித்தல்கள், நவீன விவசாயத் தகவல்களைப் பெற செய்தித் தொடர்பு அவசியமானது.

(2) **மீனவர்கள் பாதுகாப்பிற்கு அவசியமானது:** காலநிலைப்பற்றிய செய்திகளை மீனவர்கள் செய்தித்தொடர்புகள் மூலம் பெறுவதால் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்படுகிறது.

(3) **வர்த்தக முயற்சியாளர்களுக்கும் திட்டமிடுவோருக்கும் அவசியமானது:** வர்த்தகப் பொருள்களை உரிய நேரத்தில் சந்தைக்கு அனுப்புவதற்கும் நவீன கண்டுபிடிப்புக்கள் பற்றிய தகவல்களை பெறுவதற்கும் செய்தித் தொடர்புமுறை அவசியமானது.

**109. இலங்கையில் காணப்படும் செய்தித் தொடர்புச் சேவைகளைத் தருக.**

தபாற் சேவை. புதினப்பத்திரிகை. திரைப்படம், தந்தி. தொலைபேசி. ரூபவாஹிணி. ரெலெக்ஸ். செய்மதி.

**110. செய்தித்தொடர்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய அபிவிருத்திகளைத் தருக.**

(1) தபாற் சேவையில் முகவர் தபால் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டமை

(2) லங்காபுவத் என்னும் புதிய செய்தித் தாபனம் ஆரம்பிக்கப்பட்டமை. றொயிட்டர். பீ.ரீ.ஐ செய்தித்தாபனங்கள் ஏற்கனவே உள்ளன.

(3) **வானொலியில் பிரதேச நிலையங்கள் ஆரம்பித்தமை:** உ+ம்; இராசரட்டை சேவை. செங்கடகலைச் சேவை. மகாவலி மக்கள் சேவை.

(4) ரூபவாகினி கூட்டுத்தாபனம் 1978ல் ஆரம்பம். சுயாதீன தொலைக்காட்சிச் சேவை ஆரம்பிக்கப்பட்டமை.

(5) ரெலெக்ஸ். செய்திச் சேவை வளர்ச்சி. செய்திச் செய்மதி மூலம் விபரங்கள் பெறல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்

111. இலங்கையின் முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் (சுதந்திர வர்த்தக வலயம்) உருவாக்கப்பட்டதன் நோக்கங்களைத் தருக?

(1) அந்நிய முதலீடுகளை ஊக்குவித்தலும் மேம்படுத்தலும்.

(2) எமது பொருளாதாரத்தை விரிவுப[illegible] த்தளத்தைப் பலப்படுத்துதல்.

(3) **வேலையில்லாப் பிரச்சனையைத் தீர்க்க உதவுதல்:** தொழிநுட்ப அறிவுத் தேர்ச்சியைப் பெறுதல்.

(4) செலாவணி வருமான மூலகங்களைப் பன்முகப்படுத்தலும். ஏற்றுமதி உழைப்பைத் தூண்டுதலும்.

(5) இலங்கையின் கைத்தொழில். வர்த்தக. நிறுவனங்களை ஊக்குவித்தலும். நிறுவுதலைத் தூண்டுதலும். அவற்றை அபிவிருத்தியடையச் செய்தலும்.

112. முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தினால் ஏற்பட்டுள்ள நன்மைகளைத் தருக?

(1) **வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தியமை:** மொத்தத் தொழில்வாய்ப்பு 61,500 பேருக்கு கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. 1985ல் 32,329 பேருக்கு தொழில் வாய்ப்புக் கிடைத்துள்ளது. இதில் 26.541 பேர் ஆடைத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்தனர். 90% பெண்களாகவுள்ளனர்.

(2) **அந்நியச் செலாவணி உழைப்பைப் பெற முடிதல்:** 1980ல் இவ்வலய ஏற்றுமதிகள் மூலம் கிடைத்த அந்நியச் செலாவணி உழைப்பு ரூபா 505.3 மில்லியனாகவிருந்தது. இதில் தயாரிக்கப்பட்ட உடையின் ஏற்றுமதிப் பங்கு ரூபா 470.1 மில்லியனாகவிருந்தது. இது 1948ல் முறையே ரூபா 3537.4 மில்லியனாகவும் ரூபா 2881.1 மில்லியனாகவும் உயர்ந்தது.

(3) **புடவை ஆடை ஏற்றுமதி அதிகரித்துள்ளமை:** கடந்த ஒரு தசாப்த காலத்தில் இவ் ஏற்றுமதி அதிகரித்துச் செல்வதை நோக்கலாம். இலங்கையின் ஏற்றுமதியில் மூன்றாம் இடத்தைப் பெறுகிறது.

(4) **நிலம், ஊழியம், மூலதனம் போன்ற உற்பத்திச் சாதனங்கள் சிறப்புப் பாவனைக்கு உட்படுத்தப்படல்:** உ+ம் நில உரிமையாளர்கள் நிலக்குத்தகை, வாடகை, நீர், மின்சாரம், போக்குவரத்து, வாகனக் கட்டணங்கள் என அதிக நன்மைகள் பெறுவர்.

உள்ளூர் மூலவளங்களை வினைத்திறன் பயன்பாட்டில் புகுத்தல்: உ+ம் சிலிக்கா மணலை கண்ணாடி உற்பத்திக்குப் பயன்படுத்த ஆலோசனை. நவீன கைத்தொழில் முறைகள் பற்றிய அறிவும் அனுபவமும் இலங்கைக் கைத்தொழிலாளர்களுக்கு கிடைத்தல்.

113. முதலீட்டு அபிவிருத்தி வலயத்தினால் உண்டான தீமைகளைத் தருக?

(1) **உள்நாட்டுக் கைத்தொழில் துறைகள் பாதிப்படைந்தமை:** மின்தறி, கைத்தறித் தொழில்கள் பாதிப்படைந்தன. உள்ளூர் புடவை நெசவு, ஆடை தயாரிப்புத் தொழில்கள் பாதிப்படைதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) **முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தின் "பூரண நம்பிக்கைக்குரிய செலாவணிப் பாதுகாவலன்" எனக் கூற முடியாதுள்ளமை:** சென்மதி நிலுவை சாதகமாக்கப்படவில்லை. இலங்கையின் எதிர்பார்ப்பைத் திருப்தி செய்யவில்லை.

(3) **கலாசாரம் பாதிக்கப்படலாம்:** 18 வயதுக்கு இடைப்பட்ட பெண்களுக்கே கூடுதலான வீத ே ...ப்புக்கள் அளிக்கப்படுகின்றன. இது சமூகப் பிரச்சினைகளை உண்டாக்கலாம். வாழ்க்கைத் தரத்தில் எதிர்விளைவுகளை ஏற்படுத்தலாம்.

(4) **சூழல் மாசடைதல்:** சூழல் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் இங்கு நடைமுறையில் இல்லை.

(5) **தொழிநுட்பவியல் இடமாற்றம் காணப்பட்டமை:** உற்பத்திகள் பகுதி உற்பத்திகளாகவே உள்ளதால் இந்நிலை காணப்படுகின்றது.

## நகர அபிவிருத்தி

**114. நகர அபிவிருத்தி அதிகார சபையின் நோக்கங்களைத் தருக?**

(1) 1978ல் நிறுவப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபை தலைப்பட்டினங்களைத் திட்டமிட்டு அபிவிருத்தி செய்தலை நோக்கமாகக் கொண்டது.

(2) நகரத்திற்குரிய நிலங்களிலிருந்து பொருளாதார நன்மைகள், வருமானம் பெறும் வகையில் உதவிசெய்தல்.

(3) மத்திய கொழும்பின் நெரிசற் பகுதிகளை அபிவிருத்தி செய்தல்.

(4) சேரிகள், குடிசைகள் பிரச்சினைகளைத் தீர்த்தல்.

(5) சதுப்பு நிலங்களை மீட்டெடுத்தல்

**115. நகர அபிவிருத்தியில் மேற்கொள்ளப்பட்டுள்ள செயற் திட்டங்களைத் தருக?**

(1) **ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே அபிவிருத்தி:** 25,000 ஏக்கர் நிலத்தில் மேற்கொள்ளப்படுகிறது. 13 ஏக்கர் சேற்று நிலம் பெருந்திடலாக நிரப்பப்பட்டு புதிய பாராளுமன்றம் அமைக்கப்பட்டது. இலங்கையின் தலைநகராகவும், நிருவாக மையமாகவும் அமையும் விதத்தில் அபிவிருத்தி மேற்கொள்ளப்படுகிறது.

(2) **கொழும்பு நகர அபிவிருத்தி:** கோட்டை, புறக்கோட்டையைச் சூழவுள்ள 1209 ஏக்கர் பரப்பில் இடம்பெறுகிறது.

(3) கண்டி, அநுராதபுரம், நுவரேலியா, பதுளை, குருநாகல் நகரங்கள் அபிவிருத்தி செய்யும் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி அபிவிருத்திகள்

**116. 1931 முதல் 1980 வரை கல்வித்துறையிலேற்பட்ட முன்னேற்றங்களைத் தருக?**

(1) 1931ல் சர்வசன வாக்குரிமையின் பயனாகக் குடியேற்றவாதக் கல்வி முறையில் மாற்றங்கள் தோன்றியமை.

(2) இலவசக் கல்விச்சட்டம் 1945 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டமை. பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை ... க் கல்வி வழங்கப்பட்டது.

(3) 1968ல் வித்தியோதய. வித்தியலங்கார பிரிவினாக்கள் பல்கலைக்கழகங்களாகத் தரமுயர்த்தப்பட்டமை.

(4) **பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டமை:** (1959) சிலபாடசாலைகள் தனியார் பாடசாலைகளாகத் தொடர்ந்தும் செயற்படல்.

(5) **1960ல் தொழிநுட்பக் கல்வித்தாபனங்கள் முக்கியமடைந்தமை:** எண்ணிக்கை அதிகரித்தமை.

**117. 1980க்குப்பின் கல்வித் துறையிலேற்பட்ட அபிவிருத்திகளைத் தருக.**

(1) 1980ல் கல்விச் சேவைகள் அமைச்சு தாபிக்கப்பட்டமை.

(2) மகாபொல பரிசுகள் உயர்கல்விக்கு வழங்கப்படல்.

(3) 1980ல் இலவச பாடநூல் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டமை.

(4) 1981ல் உயர்கல்வி அமைச்சு தாபிக்கப்பட்டமை. தொழில்நுட்ப கல்லூரிகள் இணைக்கப்படல்.

(5) திறந்த பல்கலைக்கழகக் கல்வி ஆரம்பிக்கப்பட்டமை.

**118. சுகாதார சேவைகள் அபிவிருத்திகளின் முக்கிய அம்சங்களைத் தருக.**

(1) மொத்த தேசிய உற்பத்தியில் கூடுதலான வீதம் சுகாதார சேவைகளுக்குச் செலவிடப்படல். உ+ம்: 1985ல் 1.4 வீதம் செலவிடப்பட்டது.

(2) சிசுமரண வீதம். பிறப்பின்போது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம், இறப்புவீதம் ஆகியவற்றில் முன்னேற்றம் காணப்படல். உதாரணத்திற்கு 1965, 1980 ஆம் ஆண்டுகளை ஒப்பிடுதல்.

| | 1965 | 1980 |
|---|---|---|
| சிசுமரண வீதம் (1000 பிறப்புக்கு) | 53.2 | 34.4 |
| ஆயுட்கால எதிர்பார்ப்பு வயது | 64.2 | 68.1 (1970) |
| இறப்பு வீதம் (1000 க்கு) | 08.2 | 06.2 |

(3) **ஆயுள்வேதக் கல்வி ஊக்குவிக்கப்படல்:** உ+ம்: கம்பஹா ஆயுள்வேதக் கல்லூரி தரமுயர்த்தப்பட்டது. இராசகிரிய ஆயுள்வேதக் கல்லூரி பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது. 1980ல் சுதேச வைத்திய அமைச்சு உருவாக்கப்பட்டமை. ஆள்வுவேத வைத்தியசாலைகள் அதிகரிக்கப்பட்டமை. மருந்துச்செடி வளர்த்தல் ஊக்கமளிக்கப்பட்டமை.

(4) **நோய்த்தடுப்பு கொள்கை தீவிரமாக்கப்படல்:** பிறந்தவுடன் குழந்தைகளுக்கு பி.பி.ஜி. ஊசிமருந்து, ஈர்ப்புவலித் தடுப்பு ஊசிமருந்து ஏற்றும்முறை ஆரம்பிக்கப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

119. இலங்கையின் சனத்தொகை வளர்ச்சியு ... நிலப்பிரச்சனை எவ்வாறு இணைந்துள்ளது என்பதை 3 காரணிகள் மூ... விளக்குக.

(1) **தலைக்குரிய நிலத்தின் அளவுகுறைவடையும்:** இலங்கையின் சனத்தொகை 17 மில்லியனுக்கு மேலானது. இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் (16.21 மில். ஏக்கரில்) 56 சதவீதம் மனிதனால் பயன்படுத்தப்படுகிறது. சனத்தொகை வளர்ச்சி தலைக்குரிய ... அளவு ...38 ஹெக்ரயராகக் குறையக் காரணமாகியுள்ளது.

(2) **உணவு உற்பத்திக்குரிய நிலப்பரப்பு குறைவடையும்:** பயிர்ச்செய்கைக்கு 6.48 மில்லியன் ஏக்கர் பயன்படுத்தப்படுகிறது. சனத்தொகை அதிகரிக்க உணவுப்பொருட்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய நேரிடும்

(3) **சனத்தொகை வளர்ச்சியடைய நிலம் துண்டாடப்படும்:** சனத்தொகை காணிகளும் விவசாயக் காணிகளும் பரம்பரை முறையான காணியுரிமையால் துண்டாடப்படுகிறது.

120. **இலங்கையில் நிலப்பிரச்சனையை தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் 3 தருக.**

(1) **பயிர் செய்யப்படாத நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளல்:** உலர்வலய காணி நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டம் ஆரம்பிக்கப்பட்டமை: துரித மகாவலித்திட்டம், சுவர்ணபூமி இயக்கம் பயிர்ச்செய்கைக்குரிய நிலத்தை அதிகரிக்கும் நோக்குடையவை.

(2) **பயிர்ச்செய்கை பண்ணப்படும் நிலங்களில் உச்சப்பயனைப் பெறல்:** செறிவுப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளல் சுழற்சிமுறைப் பயிர்ச்செய்கை, உரவகைகளைப் பயன்படுத்தல். கூடிய அறுவடை தரக்கூடிய பயிர் வகைகளைப் பயிரிடல் ஆகியன உச்சப்பயனைப்பெற உதவுகிறது.

(3) **நிலத்தின் உற்பத்தித் திறனை பேணல்:** மண்வளம், நீர்வளத்தை பேண நடவடிக்கை எடுத்தல். 20 சதவீதமாக உள்ள காடுகளுக்குரிய நிலப்பரப்பை 25 சதவீதமாக உயர்த்துதல்.

121. **இலங்கையில் உணவுப் பிரச்சனையை தீர்ப்பதற்குரிய வழிகள் 3 தருக.**

(1) **தேசிய உணவுப்பொருள் உற்பத்தியை பெருக்குதல்:** நிறையுணவுக்குரிய வளங்களை விருத்தி செய்தல்.

(2) **போசணையுள்ள உணவைப் பெறக்கூடிய வருமானத்தை ஒவ்வொரு குடும்பத்திற்கும் உறுதிப்படுத்தல்:** குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உதவுதல். உ+ம்: ஜனசவிய. உணவு முத்திரைகள் பெறும் குடும்பங்கள்.

(3) **வீட்டுத் தோட்டங்களை அமைத்தல்:** மரநடுகை இயக்கங்களை மேற்கொள்ளல். உடநலத்திற்கேற்ற உணவுவகைகளைப் பயிரிடல். உணவுப்பொருள்களை ஒழுங்கானமுறையில் பங்கீடு செய்தல்.

## இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி; சில குறிப்புகள்

* **இலங்கையின் சனத்தொகை** 1993ல் 17.5 மில்லியன். 2001ல் 20 மில்லியன். 2021ல் 24 மில்லியனாகவும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* 1871–1981 ஆண்டுகளுககிடைப்பட்ட 110 வருடங்களில் இலங்கையின் நகர சனத்தொகை 11 வீதத்திலிருந்து 22 வீதத்திற்கு அதிகரித்துள்ளது.
* 1947ல் இறப்பு 1000க்கு 30 என இருந்தது. 1947ல் 17 ஆக இருந்து இப்பொது 6ஆகக் குறைந்துள்ளது.
* **பிறப்பில் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம்** 1946ல் பெண்களுக்கு 46 வருடங்களாகவும் ஆண்களுக்[illegible] இருந்தது. 1971ல் பெண்களுக்கு 68.8 ஆகவும் ஆண்களுக்கு 64 ஆகவும் இருந்தது. 1991ல் ஆண்களுக்கு 71 ஆகவும் பெண்களுக்கு 74 ஆகவும் கூடியுள்ளது.
* **வளர்முக நாடுகளின் இலங்கை இரண்டாவது குடியடர்த்தி** கூடிய நாடாகும். இலங்கையின் சராசரி குடியடர்த்தி 260 பேர் சது.கி.மீ ஆக உள்ளது. ஆகக் கூடியகுடியடர்த்தி கூடிய நாடாக பங்களாதேஷ் உள்ளது. யப்பான், தென்கொரியா. சிங்கப்பூர். ஹொங்கொங் அடுத்துக் குடியடர்த்தி கூடிய நாடுகளாகும்.
* சனத்தொகை அதிகரிப்பும் காடழிப்பு அதிகரிக்கக் காரணமாகின்றது. இலங்கையில் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் 70% காடாகயிருந்தது. 1956ல் 44% ஆகவும் 1989ல் 24% ஆகவும் குறைந்து சென்றுள்ளது.

ஒன்பதாம் அத்தியாயம்

# மனித உரிமைகளைப் பாதுகாத்தல்

**122. மனித உரிமைப் பிரகடனத்திலுள்ள வாசகங்களில் விபரங்களைத் தருக?**

மனித உரிமைப்பிரகடனம் 1948ம் ஆண்டு டிசம்பர் 18ம் திகதி ஐக்கியநாடுகள் சபையிலுள்ள 48 நாடுகளின் அங்கீகாரத்துடன் நிறைவேற்றப்பட்டது. டிசம்பர் 10 மனித உரிமைகள் தினமாகும். இப்பிரகடனத்தில் 30 வாசகங்கள் உள்ளன.

| வாசகங்கள் | விபரங்கள் |
|---|---|
| 01 முதல் 03 வரை | முன்னுரை, தத்துவங்கள் |
| 03 முதல் 20 வரை | தனிமனித உரிமைகள் |
| 21 – | அரசியல் உரிமைகள் சுதந்திரம் |
| 22 முதல் 27 வரை | பொருளாதார சமூக கலாசார உரிமைகள் |
| 28 – | சமூக சர்வதேச நாட்டு அமைப்பு |
| 29 முதல் 30 வரை | உரிமைகள் சுதந்திரங்கள் அனுபவிக்கும் முறை |

**123. மனித உரிமைப் பிர்கடனத்திலுள்ள சிவில் அரசியல் உரிமைகளைத் தருக.**

(1) எவரையும் அடிமைப்படுத்தப்படலாகாது.
(2) ஒருவரையும் சித்திரவதை செய்யலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) தகுந்த விசாரணையின்றி ஒருவரையும் கைதுசெய்ய, சிறையிலிட, நாடுகடத்த முடியாது.

(4) குடும்ப சொந்தவிடயங்களில் எதேச்சயாகத் தலையிடலாகாது.

(5) நாட்டின் எல்லைக்குள்ளும், நாட்டுக்கு நாடு போய்வரவும் குடியுரிமை மாற்றவும் உரிமையுண்டு.

(6) சிந்தனை, பேச்சு, எழு[illegible]தந்திரம், கூட்டம்கூடும் சுதந்திரம் உண்டு.

**124. மனித உரிமைப் பிரகடனத்திலுள்ள பொருளாதார சமூக கலாசார உரிமைகளைத் தருக.**

(1) விரும்பிய தொழில் செய்யும் உரிமை.

(2) தொழிற்சங்கங்களில் சேரும் உரிமை.

(3) சமவேலைக்குச் சமசம்பளம் பெறும் உரிமை.

(4) சொத்துரிமை

(5) விரும்பிய கல்வி பெறும் உரிமை. ஆரம்ப கல்வியை இலவசமாக பெறல்.

(6) மதச் சுதந்திரம்.

**125. உரிமைகளையும் சுதந்திரங்களையும் அனுபவிக்கும் முறைகள் இரண்டு தருக.**

(1) மற்றவர்களுடைய சுதந்திரத்தையும், உரிமைகளையும் பாதுகாப்பதற்கான சட்டவிதி முறைகளைக் கடைப்பிடித்தல்.

(2) சனநாயக சமுதாயத்தில் நல்லொழுக்கம், சமாதானம், சமூக நலன் பெறுவதற்குச் சட்டவிதிகளுக்குட்பட்டு நடத்தல்.

**126. 1978ம் ஆண்டு இலங்கை அரசியல் யாப்பில் அடிப்படை உரிமைகள் சம்பந்தமான அம்சங்களைத் தருக.**

(1) இவ்வரசியல் யாப்பில் மூன்றாம் அத்தியாயம் அடிப்படை உரிமைகள் பற்றியது. இதில் 10 முதல் 17 வரையிலான உறுப்புரைகள் மனித உரிமைப் பிரகடனம், அவற்றைப் பாதுகாத்தல் தொடர்பான சட்டமுறை உத்தரவாதத்தை உள்ளடக்கியது.

(2) இவ்வரசியல் திட்டத்தின் அ) 10ம் 11ம் ஷரத்துக்கள் சிந்தனைச் சுதந்திரம், மனசாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம் என்பவற்றை உறுதி செய்கிறது.

(3) 12 வது ஷரத்து சித்திரவதைக்கு உள்ளாகாமல் இருப்பதற்குச் சுதந்திரம் அளிக்கிறது.

(4) 12 வது ஷரத்தின் 1ம், 2ம் பிரிவுகள் சட்டத்தின் முன்னிலையில் சமத்துவ உரிமை, இனம், மொழி, சாதி, பால் என்பவற்றில் பாகுபாடின்மையைக் கூறுகின்றது.

(5) 14 வது ஷரத்து பேச்சுச் சுதந்திரம், அமைதியான முறையிற் கூட்டம் கூடுவதற்கான சுதந்திரம், சங்கங்கள் தொழிற்சங்கங்கள் அமைப்பதற்கான சுதந்திரம், இலங்கை முழுவதும் தடையின்றி நடமாட வசிப்பிடத்தை தெரிவதற்கான சுதந்திரத்தை அளிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

127. 1978ம் ஆண்டு இலங்கை அரசியல் யாப்பில் மனித உரிமைகள் தொடர்பான பாதுகாப்புக்கள் யாவை?

(1) 17வது ஷரத்தில் அடிப்படை உரிமை மீறப்பட்டால் உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம் எனக்கூறப்பட்டுள்ளது.

(2) ஒம்புட்ஸ்மன் எனப்படும் பாரா[illegible] ஆணையாளர் நியமிக்கப்பட்டு அரசாங்கத்தின் பொது நிருவாக கருமங்களில் மனித உரிமைகள் மீறப்பட்டால் அறிக்கை சமர்ப்பிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(3) நீதித்துறையின் சுதந்திரம். பெண்கள். குழந்தைகள். வலது குறைந்தோர் பாதுகாப்புக்கள். அவசரகால அதிகாரங்களை பயன்படுத்துவற்கு ஏற்படுத்தப் பட்டுள்ளன. கட்டுப்பாட்டு நியதிகள் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் உத்தரவாதங்களாகும். அடிப்படை உரிமைகளை அரசாங்கம் கட்டுப்படுத்தும் அதிகாரங்கள் 15வது ஷரத்தின் 3ம். 4ம். 8ம் பிரிவுகளில் கூறப்பட்டுள்ளது.

---

## மாதிரி வினா விடைகள்

### பகுதி – 1

(G. C. E. O/L பரீட்சை வினாக்களை ஒத்த வினாக்கள் தரப்பட்டுள்ளன)

### A. வளங்கள் / பொருளாதாரமுறை

1. வளங்களைப் பேணும் வழியல்லாதது எது?
   1) திட்டமிட்டுப் பயன்படுத்தல்
   2) சிக்கனமாகப் பயன்படுத்தல்
   3) புதிய கனிய வளங்களைக் கண்டுபிடித்தல்
   4) தொழிநுட்ப வளர்ச்சியை விரைவுபடுத்தல்

2. வளங்களின் பிரயோகம் அதிகரித்தமைக்குரிய காரணமாக அமைவது எது?
   1) நாடுகாண் பயணங்கள்
   2) குடியேற்றங்கள்
   3) உலகமகாயுத்தங்கள்
   4) கைத்தொழிற்புரட்சி

3. சூழலை மாசுபடுத்தாத வளங்கள் எவை?
   1) சூரிய சக்தி. நீர் மின்வலு
   2) இயற்கை வாயு. நிலக்கரி
   3) கனிய எண்ணெய். அணுச் சக்தி
   4) நிலக்கரி. சூரிய சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வளங்களைக் கவனத்துடன் பயன்படுத்துவது தொடர்பாகச் சமூகரீதியில் முக்கியம் பெறுவது
   1) வாகனங்களுக்குக் கனிய எண்ணெய் வழங்குதலைக் கட்டுப்படுத்துதல்.
   2) கழிவுக் காகிதங்களை மீண்டும் காகித உற்பத்திக்குப் பயன்படுத்தல்.
   3) சுரங்கங்களை வெட்டும் [illegible] அருகருகே வெட்டுதல்.
   4) காடுகளை அழித்துத் தொடர் மாடிவீடுகளை கட்டுதல்.

5. இலவசமாகவும் முயற்சியின்றியும் பெற்றுக் கொள்ளும் வளங்கள் எவை?
   1) வளி, பெற்றோலியம், நிலக்கரி, அணுச்சக்தி
   2) வெப்பம், வளி, நீர், காற்று
   3) இயற்கைவாயு, நீர், நிலக்கரி, வளி
   4) அணு, வளி, பெற்றோலியம், வெப்பம்

6. பின்வருவனவற்றுள் மீளப் பயன்படுத்தக் கூடிய வளம் எது?
   1) அணுச்சக்தி  2) நிலக்கரி  3) இரும்புத்தாது  4) பெற்றோலியம்

7. கனிய எண்ணெய்க்குப்பதிலாக வருங்காலத்தில் மாற்றுச்சக்தி மூலகங்கள் பயன்படுத்தப்பட முயற்சிகள் நடைபெறுகின்றன. அந்தச் சக்தி மூலகங்களைக் கொண்ட தொகுதி எது?
   1) உயிரியல் வாயு, நிலவெப்பம், நிலக்கரி
   2) நீர்மின், சூரியசக்தி, கருவலு
   3) கடலலை, நிலக்கரி, நிலவெப்பம்
   4) சூரிய சக்தி, உயிரியியல் வாயு, நிலவெப்பம்

8. வளங்கள், அபிவிருத்தி என்பனவற்றுடன் தொடர்புடைய பிழையான கூற்றைத் தெரிவு செய்க?
   1) வட அமெரிக்காவில் பஞ்சவாபிகள் பிரதேசம் விவசாய அபிவிருத்தியடைந்த பிரதேசமாக உள்ளது.
   2) மத்தியகிழக்கு நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு கனிய எண்ணெய்வளம் உதவுகிறது.
   3) இந்தியாவில் கங்கைநதிப் பள்ளத்தாக்கு விவசாயத்தில் அபிவிருத்தியடைந்த பிரதேசமாக உள்ளது.
   4) யப்பான் மனிதவள அபிவிருத்தி மூலம் சிறந்த கைத்தொழில் நாடாகத் திகழ்கிறது.

9. மனிதன் சூழலிலுள்ள பொருட்களை எந்தத் தொழிற்பாட்டின் உதவியுடன் வளமாக மாற்றும் திறனைப் பெறுகிறான்?
   1) தனது அறிவையும் அனுபவத்தையும் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) தனது சுற்றாடலையும் எதிர்காலச்சந்ததியினரையும் நினைத்து
3) அயல் நாடுகளின் உற்பத்தி வேகத்துடன் போட்டியிட நினைத்து
4) தனது செல்வத்தையும், ஆளணியையும் கொண்டு

**கவனிக்குக:** O/L பரீட்சைக்கு வளங்களைப்பற்றிய வினாக்கள், பெரும்பாலும் வளங்களின் பற்றாக்குறை, புதிய வளங்கள, வளங்களைப் பேணுவதற்கான வழிகள் பற்றியே அமைந்திருப்பதைக் காண்க.

10. பின்வரும் காரணிகளில் எவை முதலாளித்துவப் பொருளாதாரத்தில் பிரதான அம்சங்களாக அமையும்.
   1) மத்திய திட்டங்களுக்கு அமைய உற்பத்தி செய்யப்படுதல்.
   2) சமுதாய நோக்கங்களுக்கமைய உறபத்தி செய்யப்படுதல்.
   3) உற்பத்திக் காரணிகள் தனியார்துறைக்குச் சொந்தமாயிருத்தல்.
   4) அதிக இலாபத்தைத் தரக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்தல்.

11. சமதர்மப் பொருளாதார முறையின் இலட்சணம் எது?
   1) முதலீட்டு மூலம் கூட்டுறவு முறையில் அமைந்திருத்தல்.
   2) இலாப நோக்கம், விலையின் முக்கியத்துவம் காணப்படல்.
   3) தனியார்துறை, அரசாங்கத்துறை இணைந்து காணப்படல்.
   4) போட்டி, போராட்டம், உற்பத்தியில் காணப்படல்

12. கலப்புப் பொருளாதாரத்தின் முக்கிய இலட்சணம் எது?
   1) தனியார் முதலீடுகள் முக்கியம் பெறல்.
   2) தனியார்துறை அரசாங்கத்துறை இணைந்து காணப்படல்.
   3) திட்டமிட்டவகையில் பொருளாதார உற்பத்தி மேற்கொள்ளல்.
   4) உற்பத்திக் காரணிகள் பொது உரிமையாகக் கருதப்படல்.

13. சமதர்மப் பொருளாதார முறையைக் கொண்டமைந்த குழு எது?
   1) ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ்
   2) இலங்கை, மக்கள் சீனக்குடியரசு, யப்பான், ரூமேனியா
   3) கியுபா, மக்கள் சீனக்குடியரசு, பிறேசில், இஸ்ரேல்
   4) கியுபா, போலந்து, மக்கள் சீனக்குடியரசு, ரூமேனியா

**கவனிக்குக:** உலகப் படத்தில் ஒவ்வொரு பொருளாதார முறைக்கும் உட்பட்ட நாடுகளை இனம்காணப் பயிலவும். நேரடியாகப் பொருளாதார முறையைக் குறிப்பிடலாம். பிரதேசங்களைக் குறிப்பிட்டு அவற்றின் பொருளாதாரமுறையில் காணப்படும் நன்மைகள், தீமைகள் யாவை? என வினாக்கள் அமையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## B. அபிவிருத்தி/ வரலாற்றுப் பின்னணி / பிரச்சனைகள் / தீர்வுக்கான வழிகள்

14. பின்வருவனவற்றுள் மரபு வழி அளவீட்டு முறை எது?
   1) பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண்
   2) உயர் கல்வியைப் பெறும் [illegible] வீதம்
   3) மொத்தத் தேசிய உற்பத்தி
   4) சனத்தொகையில் ஒரு மருத்துவருக்கான நோயாளர்களின் எண்ணிக்கை.

15. பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண்ணைக் கணிப்பதற்குப் பயன்படாதது எது?
   1) சிசுமரண வீதம்
   2) பிறக்கும் போது எதிர் பார்க்கப்படும் ஆயுட்காலம்
   3) எழுத்தறிவு
   4) தனிநபர் மொத்தத் தேசிய உற்பத்தி

16. அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்குப் பொருந்தும் இயல்புகளைக் கொண்ட விடை எது?
   A. விவசாயம் சாராத் தொழிலில் அதிக வீதத்தினர் ஈடுபடல்.
   B. முதனிலைப் பொருட்கள் ஏற்றுமதியில் தங்கியிருத்தல்.
   C. நகர்ப்புறங்களில் வாழும் சனத்தொகையினர் வீதம் அதிகமாக இருத்தல்.
   D. சனத்தொகை வளர்ச்சி வேகம் காணப்படல்.

   1) AC   2) BC   3) BD   4) CD

17. அபிவிருத்தியடைந்த நாடுகள் பற்றியும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பற்றியும் அமைந்த பின்வரும் வாக்கியங்களுள் சரியானது எது?
   1) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தென்னரைக் கோளத்தில் உள்ளன.
   2) அபிவிருத்தியடைந்த நாடுகள் அடிப்படைப் பொருள்கள் ஏற்றுமதியில் தங்கியுள்ளது.
   3) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மூலதன வளம் அதிகளவில் காணப்படும்.
   4) அபிவிருத்தியடைந்த நாடுகளில் பெரும்பாலானவை வெப்பவலயத்தில் உள்ளன.

18. அபிவிருத்தியடைந்த நாடுகளை மட்டும் கொண்டமைந்த தொகுதி எது?
   1) கனடா. நோர்வே. மெக்ஸிக்கொ. யப்பான்
   2) பிரான்ஸ், நீயுஸிலாந்து, ஜேர்மனி, சுவீடன்
   3) சோவியத் ஒன்றியம். இத்தாலி. சவூதி அரேபியா. ஐக்கியஇராச்சியம்
   4) இந்தோனேசியா. பிரான்ஸ். ஐக்கிய அமெரிக்கா. நோர்வே

19. பின்வருவனவற்றுள் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும். அபிவிருத்தியடைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் நாடுகளுக்கும் பிரச்சனையாக உள்ளவற்றைக் கொண்டமைந்த விடை எது?

A. சூழல் மாசடைதல்
B. மூலதன வளமின்மை
C. சனத்தொகை வளர்ச்சி வேகம்
D. தொழில்நுட்ப வளர்ச்சியின்மை
E. பயங்கரவாதம்
F. நகரமயமாக்கம்

1) CE 2) AD 3) BF 4) AE

20. 15ம் 16ம் நூற்றாண்டுகளில் ஏகாதிபத்தியப் பரம்பலுக்கு முக்கிய காரணியாக அமையாதது எது?

1) ஐரோப்பிய அறிவியல் மறுமலர்ச்சியும் நாடுகாண் பயணங்களும்.
2) கைத்தொழிற்புரட்சியும் சந்தைகளைத் தேடுதலும்.
3) வர்த்தக ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்தலும் சமயம் பரப்புதலும்.
4) வேதம், தங்கம் புகழ் பெற்றிடுதலும் அரச ஆதரவுகளும்.

21. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வர்த்தக அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டது எது?

1) ஆசியான்
2) சார்க்
3) உங்ராட்
4) ஒபெக்

22. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் சனத்தொகை அதிகரிப்பு பிரச்சினையாக உள்ளது. இதன் மூலம் அவ்நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கொண்டமைந்த விடை எது?

A. நுகர்வுச் செலவு குறைதல், விரக்திநிலை ஏற்படல்.
B. உணவுப் பற்றாக்குறை, வேலை வாய்ப்பின்மை ஏற்படல்.
C. கற்றறிவின்மை, பாதுகாப்பின்மை நீங்குதல்.
D. சக்தி மூலங்கள் பற்றாக்குறை, வளங்கள் அழிதல்.

1) AB 2) BD 3) CD 4) BC

23. இலங்கையில் தங்கியிருப்போர் தொகை 60% ஆகும். இது பற்றிப் பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?

1) இலங்கை மக்களின் தாராள மனப்பான்மையைக் காட்டுகிறது.
2) இலங்கை மக்களில் 40% கடுமையான உழைப்பாளிகள்.
3) மூலதனப் பற்றாக்குறை ஏற்பட்ட ஏதுவாகிறது.
4) எதிர்காலம் சுபீட்சமாக அமையும் என்பது தெளிவாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. உலகில் பின்வரும் வலயங்களுள் குடி அடர்த்தி குறைந்த வலயம் எது?
1) வடகிழக்கு ஐக்கிய அமெரிக்கா
2) தென்னாசியாவும் அண்மிய நாடுகளும்
3) வடமேல் ஐரோப்பா
4) இலத்தீன் அமெரிக்கா

25. உலகின் குடி அடர்த்தி கூடிய 10 நாடுகளில் இலங்கை ஒன்பதாவது இடத்தை வகிக்கிறது. தனிப்பட்டவருக்குக் கிடைக்கும் நிலம் குறைந்துசெல்லும் போது எடுக்க வேண்டிய நடவடிக்கை எது?
1) சேனை முறைப்பயிர்ச் செய்கையை மேற்கொள்ளல்.
2) பாரிய இயந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்தியை அதிகரித்தல்.
3) புதிய நிலங்களைப் பயிர்ச் செய்கைக்குக் கொண்டுவருதல்.
4) அறுவடையை அதிகரித்தல். சுழல்முறைப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளல்.

**கவனிக்குக:** அபிவிருத்தி பற்றிய பல்தேர்வு வினாக்கள் O/L வினாத்தாளில் இடம் பெறும். அபிவிருத்தி அளவீடுகள், இயல்புகள். பிரச்சனைகளுக்கான தீர்வுகள் போன்றன பற்றிவினாக்கள் அமையலாம். வினைக்களை அவதானித்து விடையைக் கண்டுபிடியுங்கள். "அல்லாதது" "அமையாதது" போன்ற பதங்கள் கையாளப்படலாம். எதிர் மறையாக வினாக்கள் அமையலாம்.

பின்வரும் அட்டவணையின் துணையுடன் 26 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக?

| நாடு | பிறப்பு வீதம் | மரண வீதம் | சிசுமரண வீதம் | பிறப்பில் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் | தனியாள் வருமானம் அமெ. டாலர் | சனத்தொகை வளர்ச்சி வேகம் |
|---|---|---|---|---|---|---|
| A | 31 | 11 | 83 | 57 | 220 | 24% |
| B | 0.7 | 06 | 04 | 76 | 9630 | 0.3% |
| C | 33 | 14 | 73 | 54 | 22020 | 2.7% |
| D | 20 | 06 | 23 | 72 | 540 | 1.5% |
| E | 0.5 | 03 | 02 | 77 | 7840 | 0.2% |
| F | 37 | 13 | 96 | 55 | 170 | 24% |

26. இயற்கை அதிகரிப்புவீதம் கூடுதலாக உள்ள நாடுகள்
1) AC 2) CE 3) BD 4) DE

27. பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண் உயர்வாக உள்ள நாடுகள்
1) AC 2) CF 3) BD 4) AF



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. அட்டவணையிற் தரப்பட்ட நாடுகளுள் அபிவிருத்தியடையாத நாடுகளுக்கு உதாரணங்களாக அமைந்தவை.
1) BE 2) CE 3) BC 4) AF

29. இலங்கையை ஒத்த தரவுகளையுடைய நாடு
1) A 2) D 3) E 4) F

30. பங்காளாதேஷ், நேபாளம் ஆகியசார்க் நாடுகளின் தரவுகளை ஒத்தவை எது?
1) AC 2) DF 3) AF 4) BE

31. பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண்ணைக் கணிப்பதற்கு ஐக்கிய நாடுகள் அமையம் பயன்படுத்தும் காரணியாக அமையாதது எது?
1) சிசுமரண வீதம்
2) பிறப்பில் எதிர்பார்க்கப்டும் ஆயுட்காலம்
3) எழுத்தறிவு
4) சனத்தொகை வளர்ச்சி வேகம்

32. தரப்பட்ட தரவுகளின் படி பெரும்பாலன மக்களின் வாழ்க்கை தாழ்மட்டத்தில் உள்ளநாடு எது?
1) A 2) C 3) D 4) F

33. "ஆள்வீத வருமானம் உயர் மட்டத்திலிருந்தும் மக்களின் வாழ்க்கைப் பண்பை வழங்குவதற்கு அவசியமான சேவைகள் திருப்பதிகரமாகப் பரவிக் காணப்படவில்லை" என்ற கூற்றுக்குப் பொருத்தமான நாடு எது?
1) C 2) D 3) F 4) A

34. மேலே உள்ள அட்டவணையின் தரவுகளின்படி சரியான கூற்று எது?
1) பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண்ணைக் கணிப்பதற்குப் போதுமானது.
2) மொத்தத் தேசிய உற்பத்தியைக் கணிக்கப் போதுமானது.
3) இயற்கை அதிகரிப்பு வீதத்தைக் கணிக்கப் போதுமானது.
4) ஆள்வீத வருமானத்தைக் கணிக்கப் போதுமானது.

35. அபிவிருத்தியடைந்து வரும் நாடாகயிருந்தும் உயர்ந்த வாழ்க்கைத்தரத்தையும் சமூகநலசேவைகளின் வியாபிப்பையும் கொண்டுள்ள நாடு
1) D 2) C 3) A 4) F

<u>**கவனிக்குக:**</u> இத்தகைய வினாக்கள் பகுதி Iல் இறுதியாக அமையும். தரவுகளை நன்கு அவதானிக்க வேண்டும். இலங்கையை யொத்த தரவுகளைக் (D) கண்டறிய வேண்டும். தரவுகளிலிருந்து பெறக்கூடிய தகவல்களை அறியப்பயிலவும். அபிவிருத்தி, சமூகநலவியாபிப்பு, வாழ்க்கைத்தரம் போன்றவற்றை அறியவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில சுலபமான சூத்திரங்கள்:

$$\text{பிறப்பு வீதம்} = \frac{\text{குறிப்பிட்ட வருடத்தின் பிறப்பு எண்ணிக்கை}}{\text{குறிப்பிட்ட நடு ஆண்டுச் சனத்தொகை}} \times 1000$$

$$\text{இறப்பு வீதம்} = \frac{\text{குறிப்பிட்ட வருடத்தின் மரண எண்ணிக்கை}}{\text{குறிப்பிட்ட நடு ஆண்டுச் சனத்தொகை}} \times 1000$$

$$\text{இயற்கை அதிகரிப்பு வீதம்} = \frac{\text{பிறப்பு வீதம் – இறப்பு வீதம்}}{10}$$

$$\text{சனத்தொகை வளர்ச்சி வீதம்} = \frac{\text{மொத்த பிறப்பு வீதம் – மொத்த இறப்பு வீதம்}}{\text{நடு ஆண்டு சனத்தொகை}} \times 100$$

$$\text{சனத்தொகை இரட்டிப்பு அடையும் காலம்} = \frac{70}{\text{சனத்தொகை வளர்ச்சி வீதம்}}$$

பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண் கணிக்கும் முறை:

ஆயுள் எதிர் பார்ப்பு : 90
சிசு மரண வீதம் : 44
எழுத்தறிவு வீதம் : 56

$$\frac{90-38}{0.39} + \frac{229-44}{2.22} + 56 = 82$$

கீழே *A, B, C, D, E* ஒவ்வொன்றிலும் ஒரு சோடிக் காரணிகள் தரப்பட்டுள்ளன. இக்காரணித் தொகுதிகளைப் பயன்படுத்தி 36 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

*A* *i.* பூச்சி கொல்லிகள்
   *ii.* அறுவடை
*B* *i.* சனத்தொகை
   *ii.* ஆள்வீத நிலப்பரப்பு
*C* *i.* போசாக்கு
   *ii.* சிசுமரண வீதம்
*D* *i.* ஏற்றுமதி வருமானம்
   *ii.* வறுமை
*E* *i.* மூலதனம்
   *ii.* வேலைவாய்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. முதலாவது காரணியின் அதிகரிப்பு இண்டாவது காரணி அதிகரிக்க வழிவகுக்கின்றது என்பதைக் காட்டும் விடை எது?

1) AD 2) BE 3) CD 4) AE

37. முதலாவது காரணி அதிகரிக்கும் போது இரண்டாவது காரணி குறைவடையும் தொகுதி யாது?

1) BCD 2) CDE 3) ACD 4) BCD

38. முதலாவது காரணி குறைவடையும் போது இரண்டாவது காரணி குறைவடைவதுடன் சமூகத்தில் விரக்தியை ஏற்படுத்தும் காரணித் தொகுதி யாது?

1) B 2) C 3) D 4) E

39. முதலாவது காரணியிலேற்படும் அதிகரிப்பு இரண்டாவது காரணியின் வீழ்ச்சிக்கு வழிவகுப்பதுடன் சாதகமான விளைவாகவும் அமையும் காரணித் தொகுதி யாது?

1) BC 2) CD 3) DE 4) AC

40. முதலாவது காரணியின் அதிகரிப்பு இரண்டாவது காரணி அதிகரிக்க வழிவகுப்பதுடன் பொருளாதார வளர்ச்சிக்கும் சாதகமாய் அமையும் காரணித் தொகுதி யாது?

1) A 2) C 3) E 4) D

**கவனிக்குக:** அபிவிருத்தி தொடர்பான காரணிகளின் செல்வாக்கு. விளைவுகள். தாக்கம் என்பன இங்கு பரீட்சிக்கப்படுகின்றது. ஒவ்வொரு சோடிக் காரணிகளையும் தனித்தனியே தொடர்புபடுத்தி விடையளிக்குக.

## C. அபிவிருத்தியடைந்து வரும் இலங்கை / அபிவிருத்தியின் புதிய போக்கு

41. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையால் ஏற்பட்ட பாதகமான விளைவு எது?
   1) உணவுப்பொருள்கள் இறக்குமதி செய்து விற்கப்பட்டன.
   2) பிரதான துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன.
   3) பெருந்தெருக்கள். புகையிரதப்பாதைகள் அமைக்கப்பட்டன.
   4) வங்கிச் சேவை, கல்விமுறை அபிவிருத்தியடைந்தன.

42. இலங்கை மக்களுக்கு உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை உறுதி செய்வதற்குரிய வழி.
   1) உணவுப் பொருள்களைத் தாராளமாக இறக்குமதி செய்தல்.
   2) பொருளாதார அபிவிருத்திக்குரிய காரணிகளைப் பூர்த்தி செய்தல்.
   3) தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்தல்.
   4) கல்விக்கான செலவினை ஆண்டுதோறும் அதிகரித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. பிரித்தானியரது ஆட்சியில் சமூக சுதந்திரம் ஏற்பட வித்தாக அமைந்தது எது?

1) அரசியலமைப்புச் சீர்திருத்தம் ஏற்பட்டமை.
2) போக்குவரத்து வளர்ச்சி ஏற்பட்டமை.
3) இராசகாரிய முறை ஒழிக்கப்பட்டமை.
4) பெருந்தோட்ட பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டமை.

44) 1977ம் ஆண்டிற்குப்பின் பிரதான வர்த்தகப் பயிர்கள் மூலம் கிடைக்கும் வருமான வீதம் குறைந்தமைக்குரிய காரணம் எது?

1) புதிய சிறு ஏற்றுமதிப் பயிர்கள். தைக்கப்பட்ட ஆடைகள். இரத்தினக்கற்கள் போன்றன ஏற்றுமதிச் சந்தையை அடைந்தமை.
2) பிரதான வர்த்தகப்பயிர்கள் புதிய நாடுகளின் ஏற்றுமதிகளுடன் போட்டியிட முடியாமை.
3) வேலை நிறுத்தங்கள். அரசியல் குழப்பங்களால் அறுவடையில் கவனம் செலுத்தாமை.
4) பிறநாடுகள் மாற்றுப் பொருள்களைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளமை.

45. இலங்கையில் கைத்தொழில் துறையில் ஏற்றுமதியையும். வேலை வாய்ப்பையும் நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திமுறை எது?

1) கூட்டுத்தாபனங்கள் ஆரம்பிக்கப்பட்டமை.
2) முதலீட்டு அபிவிருத்தி வலயங்கள் உருவாக்கப்பட்டமை.
3) தனியார் துறையினரை ஊக்குவித்தமை.
4) குடிசைக் கைத்தொழில்களை ஊக்குவித்தமை.

46. இலங்கையில் தேசிய கப்பற் சேவை ஆரம்பிக்கபட்டதனால் ஏற்பட்ட பொருளாதார நன்மை எது?

1) கப்பற் சேவையின் நுட்பங்களை அறிய முடிகின்றது.
2) வர்த்தக நடவடிக்கைகளை விருத்தி செய்ய முடிகின்றது.
3) இலகுவாக வெளிநாடுகளுக்குப் பயணம் செய்ய முடிகின்றது.
4) துறைமுக தொழிலாளர் சம்பளம் அதிகரிக்கின்றது.

47. மேற்கத்திய இறப்பு வீதத்தையும் ஆசியாவின் பிறப்பு வீதத்தையும் ஒத்த சனத்தொகை வளர்ச்சியினைக் கொண்டுள்ள நாடு எது?

1) யப்பான் 2) தாய்லாந்து 3) இந்தியா 4) இலங்கை

48. பின்வரும் தொகுதிகளுள் அபிவிருத்தி அடைந்த நாடுகளாகவும் பொதுநலவாயம், ஐ.நா. சபையில் அங்கத்துவமுள்ள நாடுகளாகவும் உள்ள தொகுதி எது?

1) யப்பான். இந்தியா. அவுஸ்திரேலியா 2) சீனா. இலங்கை. நியுஸிலாந்து
3) அவுஸ்திரேலியா. கனடா. நியுஸிலாந்து 4) கனடா. யப்பான். அவுஸ்திரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. தெற்குத் தென்கிழக்காசிய நாடுகளின் பொருளாதார சமூக முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டது எது?
1) சார்க் 2) ஆசியான் 3) கொழும்புத் திட்டம் 4) ஆசிய அபிவிருத்தி வங்கி

50. பின்வரும் சர்வதேச தாபனங்களில் செயலிழந்துள்ளது எது?
1) நேட்டோ 2) வார்ஸோ 3) [illegible] 4) ஒபெக்

51) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுள் வறியநிலையிலுள்ள நாடுகளுக்கு உலகவங்கியின் நிபந்தனைகளைவிடத் தளர்ந்த நிபந்தனைகளின்படி கடன்களை வழங்கும் தாபனம்

1) ஆசிய அபிவிருத்தி வங்கி
2) சர்வதேச நாணய நிதியம்
3) சர்வதேச நிதியச் சங்கம்
4) சர்வதேச அபிவிருத்திச் சங்கம்

52. அங்கத்துவ நாடுகளின் வாழ்க்கைத் தரத்தையும் போசணை மட்டத்தையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாபனம்.

1) யுனெஸ்கோ
2) யுனிசெப்
3) உணவு விவசாய அமையம்
4) உலக சுகாதார அமையம்

## D. மனித உரிமைகளை பாதுகாத்தல்

53. சட்டத்திற்கு மாறாக தடுத்துவைத்திருக்கும் ஒருவரை நீதிமன்றத்திற்குக் கொண்டுவரும்படி கோருவதற்குப் பயன்படுத்தக்கூடியது.

1) ஜனாதிபதியின் பணிப்பு
2) ஆட்கொணர்வுக் கட்டளை
3) சட்டமாதிபரின் பணிப்பு
4) கையெழுத்து வேட்டை

54. பின்வரும் உரிமைகளுள் பிள்ளைகளின் உரிமையெனக் கருதப்படுபனவற்றைத் தெரிவு செய்க.

1) உழைப்புக் கேற்ற ஊதியம் பெறும் உரிமை
2) வாக்குரிமை மூலம் தெரிவு செய்யும் உரிமை
3) பேராபத்தில் உதவி பெற முன்னுரிமை
4) விரும்பிய தொழில் செய்யும் உரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55. நாடொன்றில் மனிதன் உரிமை பாதுகாக்கப்படுகின்றது என்பதை பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் கூறமுடியும்.

1) மனித உரிமை மீறல்களை ஆணைக்குழுக்கள் மூலம் ஆராய்தல்.
2) அரசியல் யாப்பில் மனித உரிமைகள் பாதுகாக்கும் உரிமைகள் இடம்பெறல்.
3) நாட்டின் மக்கள் யா[illegible]வன்பும் பரஸ்பரபுரிந்துணர்வும் நிலைபெறல்.
4) பல்கலைக்கழகக் [illegible]ர மனித உரிமைகள் பாடவிதானத்தில் இடம்பெறல்.

56. மனித உரிமைகள் பெறுவதற்குக் காரணமான வரலாற்று நிகழ்வுகள் புரட்சிகளைக் கொண்ட சரியான தொகுதி எது?

1) மக்னாகாட்டா. பிரெஞ்சுப்புரட்சி
2) அமெரிக்கச் சுதந்திரப் போர். கிரிமியயுத்தம்
3) ரூஷியப்புரட்சி. 2ம் உலக யுத்தம்
4) மதச்சீர்திருத்தம். ஹெபியஸ் கோபஸ் சட்டம்

57. இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டால் உயர் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கும் உரிமையை அளித்த அரசியல் யாப்பு எவ்வாண்டிற்குரியது?

1) 1931    2)1947    3) 1972    4) 1978

58. ஒருவருடைய உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் இனம். மொழி. சாதி, நிற பேதம் நோக்காது உடன் உதவ வேண்டும். ஏனெனில்

1) அது ஒரு மனிதப் பண்பு
2) இறைவனின் அருளைப் பெறமுடியாதது
3) மற்றவர் உயிருக்கும் ஆபத்து நேரிடும்
4) மனித உரிமைக்கு மாறானது

59. இலங்கையில் மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனத்தில் இப்போது அதிக கவனம் செலுத்தப்படுவதற்குரிய காரணம்.

1) பயங்கரவாதப் பிரச்சினை
2) இனப்பிரச்சினை
3) வீடமைப்புப் பிரச்சினை
4) வேலையில்லாப் பிரச்சினை

60. இலங்கையில் பொது நிருவாக கருமங்களில் மனித உரிமைகள் மீறப்பட்டால் அறிக்கை சமர்ப்பிக்கும் அதிகாரம் பெற்றவர்

1) சட்டமா அதிபர்
2) ஓம்புட்ச்மன்
3) சபாநாயகர்
4) பொலிஸ்மாஅதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி I விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *1) 4* | *11) 1* | *21) 3* | *31) 4* | *41) 1* | *51) 4* |
| *2) 4* | *12) 2* | *22) 2* | *32) 4* | *42) 2* | *52) 3* |
| *3) 1* | *13) 4* | *23) 3* | *33) 1* | *43) 3* | *53) 2* |
| *4) 2* | *14) 3* | *24) 4* | *34) 3* | *44) 1* | *54) 3* |
| *5) 2* | *15) 4* | *25) 4* | *35) 1* | *45) 2* | *55) 3* |
| *6) 3* | *16) 1* | *26) 4* | *36) 4* | *46) 2* | *56) 1* |
| *7) 4* | *17) 1* | *27) 2* | *37) 1* | *47) 4* | *57) 4* |
| *8) 1* | *18) 2* | *28) 1* | *38) 4* | *48) 3* | *58) 1* |
| *9) 1* | *19) 4* | *29) 2* | *39) 2* | *49) 3* | *59) 2* |
| *10) 3* | *20) 2* | *30) 3* | *40) 3* | *50) 2* | *60) 2* |

# பகுதி II சமூகக்கல்வி

**அறிவுறுத்தல்கள்**

*G. C. E. (O/L) பரீட்சையில் பகுதி II இல் அமையும் சமூகக்கல்வி வினாக்களை ஒத்தவை விடைகளுடன் கீழே தரப்பட்டுள்ளன. பகுதி II வினாப்பத்திரத்தின் வினாக்கள் யாவும் (i), (ii), (iii), (iv) என நான்கு பகுதிகளைக் கொண்டனவாக விளங்குகின்றன. இவற்றில் அறிவு, திறன், மனப்பாங்கு என்பனவற்றை அளவிடும் நான்கு அடிப்படைகள் மதிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.*

**பிரிவு (i)**

*சில இடங்கள். சில இயல்புகள் என்பனவற்றைப் பெயரிடுதல் போன்ற மிக இலகுவான செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது. இப்பிரிவுக்கு குறுகிய நேரத்தில் விடை அளிக்க முடியும். பாடவிடயம் தொடர்பானவையாகவே இவை அமையும். மிக இலகுவாக உரிய புள்ளிகளை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். (03 புள்ளிகள்)*

**பிரிவு (ii)**

*பாடத்தலைப்புக்களின் அமைப்பு அல்லது விடயங்கள் சிலவற்றை விளங்கி அவற்றைக் குறிப்பிடுதல் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது. விரிவான விளக்கம் எதிர்பார்க்கப்படுவதில்லை. காரணங்களை மட்டும் நீங்கள் விடைகளாக எழுதினால் போதுமானதாகும். (04 புள்ளிகள்)*

**பிரிவு (iii)**

*பாடவிடயத்தினூடாக மேலும் தகவல்கள் வழங்குதல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு வினாக்களுக்குரிய காரணங்களைத் தருவதுடன் அவற்றை விளக்குதலும், சாதகமான. பாதகமான காரணிகளை வழங்குதலும், உதாரணங்களைத்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருதலும் எதிர்பார்க்கப்படுகின்றது. அறிவு, பிரயோகம் என்பவனற்றை அளவிடுதல் எதிர்பார்க்கப்படுகின்றது. (05 புள்ளிகள்)

பிரிவு $(iv)$

பரீட்சார்த்தி வழங்கும் காரணங்களை மேலும் உறுதி செய்யும் விதத்தில் தர்க்கரீதியாகக் காரணங்க... ...வதது விடையை உறுதிப்படுத்துவதற்கும், தமது கருத்துக்களை முன்வைத்து அவற்றை நியாயப்படுத்துவதற்கும் சந்தர்ப்பமளிக்கப்படுகின்றது. பாடப் பொருள் தொடர்பாக பொதுவானதொரு கண்ணோட்டத்தில் விடயந் தொடர்பாகப் பகுத்தல், தொகுத்தல் அளவிடுதலுக்கு வழிகோலுகின்றது. (06 புள்ளிகள்)

*** கவனிக்குக:**

மேற்கூறிய முறையிலான கட்டமைப்பு வினாக்களுக்கு உரியமுறையில் விடை அளிப்பதன் மூலம் மாணவர்கள் கூடிய புள்ளிகளைப் பெற்று உயர்ந்த தரத்தை அடையலாம்.

*I, II* ஆகிய பிரிவுகளுக்குச் சரியாக விடையளித்தால் சாதாரண சித்தி அளவுக்கான புள்ளிகளைப் பெறலாம்.

*III* ஆவது பிரிவுக்கும் விடை அளிப்பதன் மூலம் திறமைச் சித்திக்கான புள்ளிகளையும்

*IV* ஆவது பிரிவுக்கும் விடை அளிப்பதன் மூலம் விசேட சித்திக்கான புள்ளிகளையும் பெறும் வாய்ப்பு உங்களுக்கு நிச்சயம் உண்டாகும்.

## வினா-விடைகள்

(1) $(i)$ இலங்கையில் சக்தி நெருக்கடியைத் தீர்ப்பதற்குப் பொருத்தமான பிற சக்திவளங்கள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

சூரியசக்தி, உயிரியல் வாயு, காற்றுச்சக்தி

$(ii)$ சூரிய சக்தியை நமதுநாடு பயன்படுத்துவதில் உள்ள சாதகமான காரணிகள் 4 தருக. (04 புள்ளிகள்)

1. மத்தியகோட்டுக்கு அண்மையில் இலங்கை அமைந்துள்ளது. இதனால் நமது நாடு ஆண்டு முழுவதும் சமமான சூரிய கதிர்ப்பைப் பெறுகின்றது.
2. இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட சிறிய தீவாகையால் இலங்கையின் எல்லாப் பகுதிகளுக்கும் சூரியசக்தி எளிதாகக் கிடைக்கின்றது.
3. கனிய எண்ணெய்க்காகச் செலவிடும் அன்னியச் செலாவணியை மீதப்படுத்தலாம்.
4. சுற்றாடலை மாசுபடுத்தும் தீயவிளைவுகள் உண்டாவதில்லை.

$(iii)$ உலகில் வளங்கள் பற்றாக்குறை ஏற்படுவதற்குரிய காரணங்கள் இரண்டினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்குக. (05 புள்ளிகள்)

1. உலக சனத்தொகை அதிகரித்துச் செல்லல்:

இன்றைய உலக சனத்தொகை (1994இல்) 5607 மில்லியனுக்கும் அதிகமாகும். இது ஆண்டுதோறும் 1.7% அதிகரித்துச் செல்கின்றது. இவ்வாறு பெருகிச் செல்லும் சனத்தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இயற்கை வளங்கள் மேலும் மேலும் பயன்படுத்தப்படுகின்றன. இதனால இன்று சுலபமாகக் கிடைக்கும் சில கனியவளங்களுக்கு வருங்காலத்தில் பெரும் தட்டுப்பாடு ஏற்படலாம்.

2. தொழில்நுட்ப விஞ்ஞான வளர்ச்சி:

இதன்மூலம் மனிதன் இயற்கையை ஆராயவும். அதனைக் கட்டுப்படுத்தவும் முறப்பட்டு வருகின்றான். 18ம் நூற்றாண்டில் ஆரம்பித்த கைத்தொழிற் புரட்சியை அடுத்துக் கனியவளங்களின் பிரயோகம் விரைவாக அதிகரித்தது. விண்வெளிப் பயணங்கள் போன்ற முயற்சிகளுக்கும் கனிய வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

(iv) வளங்களைப் பாதுகாக்காவிடின் நாட்டின் அபிவிருத்தி பாதிப்படையும் என்பதை இரண்டு காரணங்களைத் தந்து தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)

1. சூழலின் சமநிலை பாதிப்படைகின்றது:

வளங்களின் அசமநிலை ஏற்கனவே உள்ளது. மனித செயற்பாடுகளின் அதிகரிப்பால் சமநிலை பாதிப்படையலாம். உலகளாவிய சூழல் பிரச்சனைகள் தோன்றியுள்ளன. பச்சைவீட்டு விளைவும். பூமி வெப்பமாதலும். வளிமண்டல ஓசோன்படலம் குறைதல். காடழிப்பும் உயிரினங்கள் பன்மை குறைதலும் ஏற்பட்டுள்ளன.

2. அபிவிருத்தி பாதிக்கப்படுகின்றது:

உ+ம்: காட்டுவளம் அழிக்கப்படுவதால் மண். நீர்வளம். காலநிலை பாதிக்கப்படுகின்றது. பூமியின் மேற்பரப்பில் 10% ஆக இருந்த காடுகள் 6.6% ஆகக் குறைந்துள்ளது. மேலதிக நீர் விவசாயத்திற்கு உபயோகப்படுத்தியதால் யாழ்குடாநாட்டில் நிலக்கீழ் நீரில் நைத்திரேற்று பெருமளவில் சேர்ந்துள்ளது. சிக்கனமாக வளங்களைப் பயன் படுத்தாவிடின் இன்று சுலபமாகக் கிடைக்கும் வளங்களுக்கும் எதிர்காலத்தில் தட்டுப்பாடு தோன்றும்.

(2) (i) உலக சக்தி நுகர்வில் அதிகளவில் பயன்படுத்தும் எரிபொருள்கள் மூன்றினை வரிசைக் கிரமமாகத் தருக. (03 புள்ளிகள்)

அ. கனிப்பொருள் எண்ணெய் 45% ஆ. நிலக்கரி 25% இ. வாயு / சூரியசக்தி / அணு ச்சக்தி

(ii) உலகில் எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டுள்ளமைக்குரிய காரணிகள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

அ. நவீன தொழினுட்ப அபிவிருத்தி: போக்குவரத்து. கைத்தொழில் அபிவிருத்திகளுக்குப் பெற்றோலியம் முக்கிய சக்தி தோற்றுவாயாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. பெற்றோலிய வளம் வரையறுக்கப்பட்டிருத்தல்: சில நாடுகள் மாத்திரம் உற்பத்தி செய்வதால் வரையறை ஏற்பட்டுள்ளது.

இ. உலக சனத்தொகை அதிகரிப்பும் மனித தேவைகள் அதிகரிப்பும்.

ஈ. ஒபெக் நிறுவனம் பெற்றோலியத்தின் உற்பத்தியைக் கட்டுப்படுத்தலாலும். விலையை உயர்த்துவதாலும்.

*(iii)* ஒரு நாட்டிலே காணப்படும் இயற்கைவளம் அதன் அபிவிருத்தியிலே செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணியாக உள்ளது. இக்கூற்றிற்குச் சாதகமாகவும். பாதகமாகவும் காணப்படும் காரணங்களைத் தந்து விளக்குக. (05 புள்ளிகள்)

அ. ஐக்கிய அமெரிக்காவில் பஞ்சவாவிகள் காணப்படும் பிரதேசம் கைத்தொழில் பிரதேசமாக மாறியமைக்கு அச்சூழலில் காணப்படும் கனியவளங்கள் காரணமாய் அமைந்தன. மத்தியகிழக்கு நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்குக் கனிப்பொருள் எண்ணெய்வளம் முக்கிய காரணியாக உள்ளது.

இந்தியாவில் கங்கை நதிப்பள்ளத்தாக்கு விவசாயத்தில் செழிப்படைந்து காணப்படுவதற்கு நீர்வளம், செழிப்பான மண், தட்டை நிலம் காரணமாங்களாக அமைந்துள்ளன.

ஆ. இயற்கை வளப் பற்றாக்குறை ஒரு நாட்டின் அபிவிருத்தியைப் பாதிக்காத சந்தர்ப்பத்தையும் காணலாம. யப்பானில் இயற்கைவளத் தட்டுப்பாடு நிலவுகிறது. மோட்டார் வாகனங்கள். கப்பல்கட்டும் துறை. மின் உபகரணங்கள் உற்பத்தி. சீமெந்து. பருத்தி. பட்டு நெசவுத் தொழில்கள் போன்ற பல கைத்தொழில் துறைகளில் மனிதவளத்தின் அபிவிருத்தி மூலம் யப்பான் முதன்மை நாடாகத் திகழ்கின்றது. யப்பானில் ஆய்வும். அபிவிருத்தியும் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கின்றது.

*(iv)* ஒபெக் தாபனத்தின் அமைப்பு நோக்கங்களைத் தருக. (06 புள்ளிகள்)

அ. அமைப்பு:- பெற்றோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் தாபனம் ஆசியா. ஆபிரிக்கா. இலத்தீன் அமெரிக்கா ஆகிய மூன்று கண்டங்களைச் சேர்ந்த 13 நாடுகள் இத்தாபனத்தில் உள்ளன. 1960ம் ஆண்டு செப்ரெம்பர் 14ம் திகதி அமைக்கப்பட்டது. இதன் நான்கு முக்கிய பகுதிகளாவன: 1. மாநாட்டு அமைப்பு 2. ஆளுநர்சபை 3. செயலகம் 4. பொருளாதாரக்கமிஷன்

ஆ. நோக்கங்கள்:-

1. அங்கத்துவ நாடுகளின் நலன்களைப் பாதுகாத்தல். கட்டுப்பாட்டுடன் விநியோகித்தல்.

2. எண்ணெய் விலையை ஸ்திரமாக வைத்திருத்தல்.

3. எண்ணெய் கைத்தொழிலில் முதலீடு செய்வோருக்கு நியாயமான இலாபங்களைப் பெற்றுக்கொடுத்தல்.

4. சர்வதேசக் கம்பெனிகளின் ஆதிக்கத்தினை நீக்குதல்.

5. இப்பிரதேச நாடுகளின் அபிவிருத்திக்குப் பரஸ்பரம் உதவுதல். பாதிக்கப்படும் வளர்முக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளுக்கு உதவிகளை வழங்குதல்.

(3) (i) ஒரு நாட்டின் அபிவிருத்தியை அளவிடப் பயன்படுத்தப்படும் மரபுவழி வராத அளவீட்டு முறைகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

1. பௌதீக வாழ்க்கைப் பண்புச்சுட்டெண்

2. சனத்தொகையில் ஒரு மருத்துவருக்கான நோயாளிகளின் எண்ணிக்கை.

3. சனத்தொகையில் 1000 பேருக்கான தொலைபேசி. வானொலிப்பெட்டி ஆகியவற்றின் எண்ணிக்கை.

(ii) அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் இயல்புகள் 4 தருக. (04 புள்ளிகள்)

1. சனத்தொகை வளர்ச்சி வேகமும் தங்கியிருப்போர் சுமையும் காணப்படல்.

2. அடிப்படைப் பொருள்களின் ஏற்றுமதியில் தங்கியிருத்தல்.

3. விவசாயம் சார்ந்த பொருளாதார முறை காணப்படல்.

4. குறைந்தளவு தலா வருமானத்தைக் கொண்டிருத்தல்.

(iii) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பிரச்சனைகளுக்கு குடியேற்றவாதம் எவ்வளவிற்கு காரணமாகியது என்பதை இரண்டு உதாரணங்கள் மூலம் விளக்குக. (05 புள்ளிகள்)

1. குடியேற்ற நாடுகளின் வளங்களைச் சூறையாடியமை: குடியேற்ற ஆட்சிக்காலத்தில் குடியேற்றவாதத்திற்குட்பட்ட நாடுகளின் வளங்கள் தாய்நாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு. அவற்றின் செல்வச்செழிப்பிற்குக் காரணமாகியது. குடியேற்ற நாடுகளின் உற்பத்திகளைப் புறக்கணித்தனர். இதனால் குடியேற்ற நாடுகளின் உள்ளூர் கைத்தொழில்களும் வீழ்ச்சியடைந்தன. கைத்தொழில் உற்பத்திகளை இறக்குமதிசெய்யும் நிலை ஏற்பட்டது.

2. தாய்நாட்டின் உற்பத்திப் பொருள்களைக் குடியேற்ற நாட்டில் சந்தைப்படுத்தியமை. குடியேற்ற நாடுகளின் வாழ்க்கை முறைப்பாங்கினை மாற்றியதுடன் இறக்குமதிப் பொருள்களில் தங்கியிருக்கும் நிலைமையை ஏற்படுத்தியமை. குடியேற்ற நாடுகளில் தொழினுட்பக்கல்வி முறையைப் புகுத்தாமை.

(iv) சனத்தொகைப் பெருக்கம் காரணமாக ஏற்படும் விவசாய அபிவிருத்தியின் தாக்கத்தினை மூன்று உதாரணங்கள் மூலம் விளக்குக. (06 புள்ளிகள்)


1. சூழல் பிரச்சனைகளுக்கு அதிகரித்துவரும் சனத்தொகையே அடிப்படையாக உள்ளது. மெசப்பத்தேமியா நாகரிகம் அழிந்தமைக்கு மனிதன் விவசாய முயற்சிகளுக்காக மண்ணைத் துஷ்பிரயோகம் செய்தமையே காரணமாகியது. மத்திய அமெரிக்காவின் மாய நாகரிகம். கம்போடியாவில் கெமர் நாகரிகம் அழிந்தமைக்கு காணித்தட்டுப்பாடே காரணமாயிற்று.

2. சனத்தொகை அதிகரிக்கும்போது உணவு உற்பத்தியை அதிகரிக்க ஓரினப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிர்ச்செய்கை பின்பற்றப்படுகிறது. ஆனால் ஓரினப்பயிர்ச்செய்கையில் தங்கியிருக்கும் ஆபத்தை அயலாந்தில் ஏற்பட்ட உருளைக் கிழங்குப் பஞ்சம் காட்டுகின்றது. ஒருமில்லியன் மக்கள் ஐக்கிய அமெரிக்காவிற்குக் குடிபெயர்ந்தனர். விவசாய உற்பத்தியை அதிகரிக்க இரசாயன வளமாக்கிகள், பீடைகொல்லிகளை அதிகளவில் உபயோகிக்கும்போது நிலம் ... கின்றது.




**(4) (*i*)** மேலே உள்ள படத்தில் y என்ற கோட்டினால் எல்லைப்படுத்திக் காட்டப்படுவது பின்வருவனவற்றுள் எது? *(03 புள்ளிகள்)*

1. அபிவிருத்தியடைந்த நாடுகளும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும்.
2. கைத்தொழில் நாடுகளும், விவசாய நாடுகளும்.
3. முதலாளித்துவ நாடுகளும், சமதர்ம நாடுகளும்

விடை: அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும், அபிவிருத்தியடைந்த நாடுகளும்.

**(*ii*)** பௌதிக வாழ்க்கைப் பண்புச்சுட்டெண்ணிலிருந்து பெறக்கூடிய அபிவிருத்தி பற்றிய தகவல்கள் 4 தருக. *(4 புள்ளிகள்)*

1. சுகாதார வழிகள் வியாபிப்பு, தாய்சேய் சுகநிலை.
2. வாழ்க்கைத்தரம், மூலவளப்பயன்பாடு, வருமானம்.
3. கல்வி வசதிகள், பெண்கள் கல்விநிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பொதுநலச்சேவை. சமூகத் தொடர்புகள்.

*(iii)* இலங்கையின் பௌதிக வாழ்கைப் பண்புச்சுட்டெண் உயர்வாக இருப்பதற்குரிய காரணங்கள் இரண்டினை விளக்குக.

1. இலங்கையின் ஆயுள் எதிர்பார்ப்பு 72 [illegible] ஆகும். எழுத்தறிவு வீதம் 89% ஆகும். சிசுமரணவீதம் 23/1000 ஆகும். இலங்கையில் எழுத்தறிவு வீதம் அதிகரித்தமைக்கு இலவசக்கல்வி. இலவசப்பாடநூல் விநியோகம். கல்விக்கான நிதி ஒதுக்கீடு அதிகரித்தமை காரணங்களாக உள்ளன.

2. சுதந்திரத்துக்குப் பின் ஆட்சிசெய்த அரசாங்கங்கள் சமூகநலனில் அக்கறை காட்டியமை. நாட்டின் சகல பிரதேசங்களும் இவ்வாய்ப்பினைப் பெறுகின்றமை. பௌதிக வாழ்க்கைப் பண்புச்சுட்டெண் உயர்வடையக் காரணமாகியது.

*(iv)* இலங்கையில் நீர் மாசடைவதற்குரிய மூன்று முக்கிய காரணங்களை விளக்குக.

1. சுத்திகரிக்கப்படாத கைத்தொழில்கழிவுகள் மூலம் மாசுபடல்: களனிகங்கையில் பல கைத்தொழில்களிலிருந்து கழிவுநீர் பாய்ச்சப்படுகின்றது. பூகொடை புடவைக் கைத்தொழிற்சாலையும். இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமுமே கழிவு நீரைச்சுத்திகரிக்கின்றன. எம்பிலிப்பிட்டியா. வாழைச்சேனை கடதாசிக் கைத்தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் அது பாயும் நீர்த்தொகுதி யிலுள்ள விலங்கினங்களையும். தாவர இனங்களையும் அழிக்கின்றது. பேரா ஏரியிலும். கொத்மலை நீர்த்தேக்கத்திலும் அல்கா பெருக்கம் ஏற்பட்டுள்ளது.

2. மனித குடியிருப்புக்களால் நீர் மாசுறல்: வீட்டுக்கழிவுகளையும் குப்பைகளையும் நீர்த்தொகுதியில் போடுவதாலும் குளக்கரைகள் ஆற்றங்கரைகளில் மக்கள் மலம் கழிப்பதனாலும் பற்றீரியா தொற்றுகின்றது. பேரா ஏரியும். களனிகங்கையைத் தொடுக்கும் செபஸ்தியான் கால்வாயும் நல்ல உதாரணங்களாகும்.

3. எண்ணெயால் மாசுபடுதல்: சபுகஸ்கந்தையில் எண்ணெய்க்குழாய் கசிவு நிலக்கீழ் நீரைப் பாதித்தமை 1988இல் கண்டுபிடிக்கப்பட்டது. 1985 பலானை இரயில் விபத்தைத் தொடர்ந்து அப்பகுதி கிணற்று நீர்களில் எண்ணெய் வாசனை கவனிக்கப்பட்டது.

(5) *(i)* சனத்தொகைப் பெருக்கத்தினால் ஏற்படும் தாக்கங்கள் 3 தருக. (03 புள்ளிகள்)

1. விவசாய உற்பத்தி அதிகரிப்பும் விளைவுகளும்.

2. கைத்தொழில் நடவடிக்கைகளும் விளைவுகளும்.

3. உணவு. போஷாக்கு குடும்ப சுகாதாரப் பிரச்சனைகள்.

*(ii)* கைத்தொழில் நடவடிக்கைகளினால் ஏற்படும் தாக்கங்கள் 4 தருக. (04 புள்ளிகள்)

1. கைத்தொழில் வளர்ச்சியினால் இயற்கை வளங்கள் கூடியளவில் உபயோகிக்கப் பட்டமை. செயற்கைப் பதார்த்தங்கள் உற்பத்திசெய்யப்பட்டமை. இவற்றின் கழிவுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்கள் இயற்கை முறையில் அழிவடைவதில்லை. உ+ம்: பிளாஸ்டிக் பதார்த்தங்கள்.

2. மனிதன் தயாரித்த இரசாயனப் பொருள்களால் சூழல் பிரச்சனைகள் தோன்றியமை: டி. டி. ரி. பாதிப்புகள். பிளாஸ்ரிக் பொருள்கள் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் பிசிபி (PCB) யும் இலகுவில் அழியாது. குளிர்சாதனப் பெட்டிகளில் உபயோகிக்கப்படும் குளோரோ புளோரோ காப...

3. காபனீரொட்சைட் வாயு அதிகரித்துள்ளமை. சனத்தொகை அதிகரிப்பதற்கு ஏற்ப உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். நிலக்கரி. எண்ணெய் அதிகளவில் உபயோகிக்க காபனீரொட்சைட் அளவு அதிகரிக்கிறது. 1750ல் மில்லியன் பகுதிகளுக்கு 280 பகுதிகளாகயிருந்த வளிமண்டல காபனீரொட்சைட் செறிவு 1990ல் மில்லியன் பகுதிகளுக்கு 343 பகுதிகளாக உயர்ந்துள்ளது.

4. கைத்தொழில் நடவடிக்கைகளால் ஆறுகள் மாசுறுகின்றன. உ+ம்: றைன் நதி. தேம்ஸ்நதி. களனிகங்கை. ஆறுகளின் மாசுகள் கடலுக்குள்போய் அதன் அடியிலுள்ள சுண்ணாம்புப் பாறைகள். தாவரங்களை அழிக்கின்றன. இவை மீன்கள். கடல்விலங்குகள் வாழ்வதற்கு இன்றியமையாதவையாகும்.

*(iii)* சனத்தொகைப் பெருக்கம் போஷாக்கின்மை குடும்ப சுகாதாரத்தினைப் பாதிக்கும் முறையினை 2 உதாரணங்கள் மூலம் விளக்குக. (05 புள்ளிகள்)

1. உணவு விவசாய நிறுவன மதிப்பீட்டின்படி கைத்தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளில் வசிப்போர் தினமும் 3100 கிராம் கலோரியையும். 96 கிராம் புரதத்தையும் உண்கின்றனர். வளர்முக நாடுகளில் 2200 கிராம் கலோரியையும். 58 கிராம் புரதத்தையும் கொண்ட உணவை உண்கின்றனர். இவ்விதம் சராசரியே குறைவாகயிருக்கும்போது வறுமையில் உள்ளவர்கள் நிலை மிக மோசமடையும். உலகில் 600 மில்லியன் மக்கள் போஷாக்கின்மையால் கஷ்டப்படுகின்றனர். போஷாக்கின்மையால் 5 வயதுக்குக் குறைந்த சிறுவர்களும். கர்ப்பிணிகளும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

2. உலகில் ஆண்டுதோறும் ஒருகோடி இறப்புக்கள் போஷாக்கின்மையால் நிகழும் மரணங்களாகும். போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டவர்கள் தொற்றுநோய்களால் பாதிக்கப்படுவர். கழிப்பிட வசதியின்மை. நிலைமையை மோசமாக்குகின்றது. குழந்தைகள் குடலில் வாழும் புழுக்களால் தாக்கப்படுகின்றனர். வாந்திபேதி நோய்க்கு ஆளாகின்றனர்.

*(iv)* சனத்தொகைப் பெருக்கம் சூழலில் ஏற்படுத்தும் தாக்கங்கள் இரண்டினை விளக்குக. (06 புள்ளிகள்)

1. காடழிப்பு. சேனைப் பயிர்ச்செய்கை. சேரிக்குடியிருப்புகள் சூழலைப் பாதிக்கின்றன. சனத்தொகைப் பெருக்கத்தினால் நகரங்கள் பாதிக்கப்படுகின்றன. கட்டுப்பாடற்ற குடியமர்வுகளால் சேரிகள் தோன்றுகின்றன. இவற்றால் நீர்வடிகால். கழிப்பிடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சனைகள் உருவாகின்றன. நகரத்திட்டமிடல், வீடமைப்பு, போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் சீர்குலைகின்றன.

2. சனப்பெருக்கம் வறுமைக்கு வழிவகுக்கின்றது. மனிதன் வறுமையின் பொல்லாத விளைவுகளை ஓரளவிற்குக்காகவும் சமாளிக்க சூழலைச் சூறையாடுகின்றான். காடுகளுக்குள் புகுந்து விலங்குகளை வே... ...னர். சிலர் காட்டைவெட்டிச் சேனைகள் ஆக்கித் தமது காணிப்பசியைத் தீர்க்கின்றனர். மரங்களைத் தறிக்கின்றனர். விறகுவெட்டுகின்றனர். கடலில் சுண்ணாம்புப் பாறைகளைப் பிளந்தெடுத்து கடலரிப்பை ஏற்படுத்தகின்றனர்.

(6) (i) இலங்கையில் துரித மகாவலித்திட்டத்தின் முன் அமைக்கப்பட்ட நீர்மின்வலு நிலையங்கள் 3 தருக. (03 புள்ளிகள்)

1. இலக்சபானா 2. இங்கினியாகலை 3. உடவளவை

விமலசுரேந்திரா, பொல்பிட்டிய, உக்குவெல, புதிய இலக்சபான

(ii) இலங்கையில் மின்சார நெருக்கடிக்கான காரணங்கள் 4 தருக. (04 புள்ளிகள்)

1. மிகமோசமான வரண்ட காலநிலை நிலவியமை: 1980–1981, 1987, 1992, 1996 ம் ஆண்டுகளில் ஏற்பட்ட நீர்மின்வலு நெருக்கடிகளை உதாரணமாகக் கூறலாம்.

2. நிறுவப்பட்ட மின் உற்பத்தித்திறனின் பற்றாக்குறை.

3. மின்சாரத்திற்கான கேள்வி அதிகரித்து வருகின்றமை. (வருடாந்தம் 9 சதவீதமாக அதிகரித்து வருகின்றது.)

4. 1991–1996க்கும் இடைப்பட்ட காலத்தில் மின்சாரத்துக்கான கேள்வியின் அதிகரிப்புக்கு ஏற்ப மேலதிக மின் நிலையங்கள் அமைக்கப்படாமை.

(iii) இலங்கையில் வலு தொடர்பான பிரச்சனைகளுக்கான தீர்வுகள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

1. நீர்மின் உற்பத்தித்திறனை அதிகரித்தல்: நாட்டின் மொத்த வலுத்தேவையில் 94.4% நீர்மின் உற்பத்தியினால் நிறைவு செய்யப்படுகின்றது. இலங்கையின் நீர்மின்வலு உற்பத்தி ஆண்டொன்றுக்கு சுமார் 1100 மெகாவோல்ட் ஆகவுள்ளது. இதனை அபிவிருத்தி செய்து மின் ஆற்றலை அதிகரிக்கலாம். அனல் மின்நிலையம் 30 வருட ஆயுளையே கொண்டிருக்கும். அதேவேளை நீர் மின்நிலைய அணைக்கட்டு 100 வருடங்களுக்கு மேற்பட்ட ஆயுளைக் கொண்டிருக்கும். ஆகவே நீர்மின் நிலைய முதலீடு நீண்டகால அடிப்படையில் சிறந்ததாகும்.

2. புதிய வலுமூலாதாரங்களின் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து பொருத்தமானவற்றை அபிவிருத்திசெய்தல். காற்றுவலு, சூரியவலு, உயிர்வாயு, மரத்தூள், பலவகைக் கழிவுப் பொருள், உமி போன்றவை சிறிய அளவில் பயன்படுத்தப்படுகின்றது. இவற்றை அபிவிருத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல். அணு வலு, பாதுகாப்பு பந்தோபஸ்து காரணமாக நமது நாட்டிற்குப் பொருத்தமாகப் படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தற்போது பயன்படுத்தப்படும் சக்தித் தோற்றுவாய்களைப் பாதுகாத்து அவற்றிலிருந்து உச்சப் பயனைப் பெறுதல். விறகைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல். விறகு குறைவாகத் தேவைப்படும் மட்பாண்டங்களை உபயோகித்தல். காடுகளை வளர்த்தல். குறைந்தளவு மண்ணெண்ணையில் எரியக்கூடிய குப்பி விளக்குகளை அறிமுகஞ்செய்தல்.

(iv) நீர்மின் உற்பத்தியை ... ும் போது ஏற்படும் பொருளாதார. சூழல் தொடர்பான பிரச்சனைகளைத் தருக.

1. நாட்டின் வனப்போர்வையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. 1956 தொடக்கம் 1992 வரை 20 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. பாரிய நீர்மின் அபிவிருத்திச் செய்திட்டங்கள் இதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

2. மின் உற்பத்திக்கான அணைக்கட்டுக்கள் நில அதிர்வுகள் ஏற்பட வழிவகுத்துள்ளன. கொத்மலை (1982), விக்டோரியா (1984), இரந்தெனிகல (1996) ஆகிய இடங்களில் நிலத்தில் பிளவுகள் ஏற்பட்டுள்ளன.

1995 யூன் 20ல் விக்டோரியாவில் நில அதிர்வும் ஏற்பட்டுள்ளது. கொத்மலையின் இருபக்கங்களில் இருக்கும் மலைகள் நீர்த்தேக்கம் காரணமாக சரிந்து செல்வதைப் புவிச்சரிதவியலாளர் கண்டுபிடித்துள்ளனர்.

3. மண்ணரிப்பு, நீர்வற்றுதல், வெள்ள அபாயங்கள் நன்கு திட்டமிடப்படாத நீர்மின் செய்திட்டங்களால் ஏற்படுகின்றன. மேல்கொத்மலை நீர்மின்வலுத்திட்டம் அங்குள்ள நீர்வீழ்ச்சிகளின் பலவற்றினை இழப்பதற்கும் நிலச்சரிவுகளுக்கும் வழிவகுக்கும் என நம்பப்படுகின்றது.

(7) (i) ஆசியாவில் சனத்தொகை அடர்த்தி கூடிய முதல் மூன்று நாடுகளைத் தருக. (03 புள்ளிகள்)

1. வங்காளதேசம் 2. இலங்கை 3. யப்பான்

(ii) உலக சனத்தொகை அதிகரித்து வந்த முறையின் முக்கிய அம்சங்களைத் தருக. (04 புள்ளிகள்)

1. கைத்தொழில் புரட்சி ஆரம்பித்த காலம் முதல் சனத்தொகைப் பெருக்கவீதம் வேகமாக அதிகரித்தது. கி. பி. 1650ல் 500 மில்லியனாக இருந்த சனத்தொகை கி. பி. 1850ல் 1 பில்லியனாக அதிகரித்தது.

2. 1900 ஆண்டுவரை உலக சனத்தொகையில் சாதாரண பெருக்கமும் அதன்பின் துரித பெருக்கமும் ஏற்பட்டுள்ளது. 1850ல் 1 பில்லியனாக இருந்து 1930ல் 2 பில்லியனாக அதிகரித்தது. 1960ல் 3 பில்லியனாகவும், 1975ல் 4 பில்லியனாகவும், 1985ல் 5 பில்லியனாகவும் சனத்தொகை உயர்ந்துள்ளது.

1900 ஆண்டுக்குப் பின் வைத்தியத்துறையில் குறிப்பாகத் தொற்றுநோய்த் தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப் பட்டதன்பின் இறப்புவீதம் குறைய ஆரம்பித்தது.

3. வறிய நாடுகளில் இறப்பு வீதம் குறைந்துள்ள போதிலும் பிறப்பு வீதம் குறையவில்லை. இதனால் சனத்தொகை பெருக்கவீதம் உயர்வாக உள்ளது. ஐக்கிய அரபு எமிற்றேற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7.3%. அல்ஜீரியா 3.2%. மெக்ஸிக்கோ 2.7%. இந்தியா 2% ஆகக் காணப்பட்டது.

4. அபிவிருத்தியடைந்த நாடுகளில் குடிபெயர்வு காரணமாகச் சனத்தொகை வளர்ச்சிவீதம் அதிகரித்த அவுஸ்திரேலியா தவிர ஏனைய நாடுகளில் நூற்றுக்கு ஒன்றிலும் குறைவாகவே காணப்படுகின்றது. சனத்தொகை வளர்ச்சி வீதமானது யப்பானில் 0.4%. ஜேர்மனி 0.1%. பெரியபிரி[illegible]3%. அவுஸ்திரேலியா 1.4% ஆகக் காணப்பட்டது.

*(iii)* சனத்தொகைப் பெருக்கத்தினால் சூழல் தரங்குன்றும் முறையினை விளக்குக. (05 புள்ளிகள்)

உலகின் சனத்தொகை 1945 – 1988 ம் ஆண்டுகளுக்கிடையில் இரண்டு மடங்காகியது. மக்கள் தொகை அதிகரிப்பு சூழலைப் பாதித்தது. சனத்தொகை ஒரு வளம். அது குறைவாகவும் இருத்தலாகது. கூடியும் இருத்தலாகாது. சனத்தொகை குன்றின் மற்ற வளங்களை அபிவிருத்தி செய்ய போதிய ஆட்கள் இருக்கமாட்டார்கள். சனத்தொகை கூடின் முதலீடு செய்ய வேண்டிய வளம் நுகர்விற்குப் போய்விடும் . பொருளாதாரத்தில் உற்பத்தி குன்றும்.

சனத்தொகைப் பெருக்கம் விவசாயக் காணிகளுக்குத் தட்டுப்பாட்டைத் தோற்றுவிக்கும். காணிகள் துண்டாடப்படும். பயன்குறைந்த காணிகளில் விவசாயம் செய்யவேண்டிய நிலை தோன்றும். புறகாணிகள். காடுகள் அழிக்கப்பட இது வழிவகுக்கும்.

சனத்தொகைப் பெருக்கம் வேலையின்மை. காணியின்மை. போதிய வீட்டு வசதியின்மை. வருவாயின்மை. வைத்திய வசதியின்மை. சுகாதார வசதியின்மை ஆகிய பிரச்சனைகளைத் தோற்றுவிக்கும்.

சனத்தொகைப் பெருக்கத்தின் விளைவாக நகரங்களும் பாதிக்கப்படுகின்றன. கட்டுப்பாடற்ற குடியமர்வுகளால் சேரிகள் தோன்றுகின்றன. பொது வசதிகள் எதுவும் இல்லாத இச்சேரிகளால் நீர் வடிகால். கழிப்பிடப் பிரச்சனைகள் உருவாகின்றன. நகரத்திட்டமிடல். வீடமைப்பு. போக்குவரத்துத் துறைகள் யாவும் சீர்குலைந்து விடுகின்றன.

*(iv)* சூழலைப் பாதுகாப்பதற்குக் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள் மூன்றினை விளக்குக. (06 புள்ளிகள்)

பூமியின் இயற்கை வளங்களையும். சூழலையும் பாதுகாப்பதற்கு சூழல் பாதுகாப்புச் சட்டங்கள் அமுல்செய்யப்படுவது அவசியம். இவற்றை அமுல் செய்ய வறுமை முட்டுக்கட்டையாக அமையும். எனவே வறுமை ஒழிப்பும் வேலைவாய்ப்பும் உள்ளடக்கியதாக அபிவிருத்தித் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

விவசாயத் திட்டங்களில் நீரை அளவாக உபயோகித்தல். அளவுக்கதிகமான இரசாயன உரங்களின் உபயோகத்தைத் தவிர்த்தல். நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் காடுகளை அழித்து விவசாய நிலங்களை உருவாக்கும்போது இடையிடையே காடுகளை வைத்திருத்தல். சேனைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு நிரந்தரமாகக் காணிகளை ஒதுக்குதல் போன்று பயிர்ச்செய்கை முறைகள் அனைத்தும் சூழல் பாதுகாப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிமுறைகளுக்கு ஏற்றமுறையில் அமைந்திருத்தல் வேண்டும்.

வீடமைப்பில் விசேட கவனம் செலுத்தவேண்டும். கழிப்பிட வசதி. குடிநீர்வசதி. வீட்டுத்தோட்டம் ஆகியன கொண்ட சூழலுக்குகந்த வீடுகள் கட்டப்படவேண்டும். ஆறுகள். கால்வாய்கள் ஆகியனவற்றின் கரைகளில் வீடுகள் கட்டப்படுவது தவிர்க்கப்படவேண்டும்.

வளர்ச்சி குறைந்த நாடுகள் தமது சூழலைப் பாதுகாப்பதற்கு வளர்ச்சியடைந்த நாடுகள் உதவ வேண்டும். அவை உதவ வேண்டிய கடமைப்பாடுகளுடையன. குடியேற்ற காலத்தில் அவை வளர்ச்சி குன்றிய நாடுகளைச் சுரண்டியவை. இன்றும் சுரண்டிக் கொண்டே இருப்பவை. வளர்ச்சியடைந்த நாடுகள் வளர்ச்சி குன்றிய நாடுகளின் வறுமையை ஒழிப்பதற்கு அளிக்கும் உதவி சூழல் பாதுகாப்பிற்கு இன்றியமையாதது.

*(8) (i)* மனித உரிமைகளை வென்றெடுக்க உதவிய புரட்சிகள் மூன்று தருக. *(03 புள்ளிகள்)*

1. அமெரிக்கசுதந்திரப் போர் 2. பிரான்சியப் புரட்சி 3. இரசியப் புரட்சி

மனித உரிமை பற்றிய சர்வதேச ஒப்பந்தங்கள் மூன்றினையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் தருக. *(04 புள்ளிகள்)*

1. பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகள் சம்பந்தமான ஒப்பந்தம்.
2. சிவில் அரசியல் உரிமைகள் சம்பந்தமான சர்வதேச ஒப்பந்தம்.
3. சிவில் அரசியல் உரிமைகள் சம்பந்தமான. சர்வதேச ஒப்பந்தத்திற்கான கட்டாயமற்ற மூல ஆவணம்.

* ஒப்பந்தங்கள் வலுவுக்கு வந்த 1976ல் தான் மனித உரிமைப் பிரகடனம் செயல் வடிவம் பெற்றது. யதார்த்த பூர்வமானது. உரிமைகள் விரித்துரைக்கப்பட்டது.

*(ii)* மனித உரிமைக்கான புரட்சிகள். போராட்டங்கள் மூலம் வென்றெடுக்கப்பட்ட மனித உரிமைகளை விளக்குக. *(05 புள்ளிகள்)*

**மகாபட்டயம் (1215):** இதில் 63 ஷரத்துக்கள் இருந்தன. இவை முக்கியமாகப் பிரபுக்கள் உரிமைபற்றியதாக இருந்தாலும் நவீன ஜனநாயகத்திற்குரிய அடிப்படை ஷரத்துக்களும் அதில் காணப்பட்டன. அரசியல் சுதந்திரத்திற்கான மக்கள் மேற்கொண்ட போராட்டத்தின் முதல் வெற்றியைக் குறிக்கும்.

**ஸ்ருவாட் மன்னர்கள் பாராளுமன்றத் தகராறு (17ம் நூற்றாண்டு):** பாராளுமன்றம் வெற்றிபெற்று மக்கள் உரிமை பாதுகாக்கப்பட்டது.

**விண்ணப்ப உரிமைச் சாசனம் (1689):** மன்னர்களின் தன்னாதிக்க அதிகாரத்தை மட்டுப்படுத்தியது.

**ஹேபியஸ் கோப்பஸ் சட்டம் (1679):** ஏதேச்சதிகாரமாகக் கைது செய்யப்படாமை. நீதிவான் முன்னிலையில் கொண்டு செல்லாமல் தடுப்புக் காவலில் வைத்திருக்கும் முறை நீக்கப்பட்டது.

**அமெரிக்க சுதந்திரப் போர்:** முடியாட்சியிலிருந்து விடுபட்டுத் தேசிய சுதந்திரத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொள்ள. குடியாட்சி முறையை அமைக்க வழிவகுத்தது.

**பிரான்சியப் புரட்சி:** தன்னாதிக்க மன்னராட்சி உயர்வகுப்பினரின் அடக்குமுறையிலிருந்து மக்கள் புரட்சி செய்து வெற்றிபெற்றனர்.

*(iv)* 1978ம் ஆண்டு இலங்கை அரசியல் யாப்பில் அடிப்படை உரிமைகள் பாதுகாப்புகள் பற்றி விளக்கி எழுதுக. *(06 புள்ளிகள்)*

இவ் யாப்பில் மூன்றாம் அத்தியாயம் அடிப்படை உரிமைகள் பற்றியது. இதில் 10 முதல் 17 வரையான உறுப்புரைகள் மனித உரிமைப் பிரகடனம். அவற்றைப் பாதுகாத்தல் தொடர்பான சட்டமுறை உத்தரவாதத்தை உள்ளடக்கியது.

17வது ஷரத்தில் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

ஒம்புட்ஸ்மன் என்னும் பாராளுமன்ற ஆணையாளர் நியமிக்கப்பட்டமையும் முக்கியமானதொன்றாகும்.

நீதித்துறையின் சுதந்திரம், பெண்கள் குழந்தைகள் வலதுகுறைந்தோர் பாதுகாப்புகள், அவசரகால அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கு ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாடு நியதிகள் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கவுள்ள உத்தரவாதங்களாகும்.

(9) *(i)* இலங்கையில் மிகச் செல்வாக்குச் செலுத்தும் செய்தித் தொடர்புச் சாதனங்கள் மூன்று தருக. *(03 புள்ளிகள்)*

1. புதினப் பத்திரிகைகள் 2. வானொலி 3. தொலைக்காட்சிச்சேவை

*(ii)* நாட்டின் அபிவிருத்திக்குச் சிறந்த செய்தித் தொடர்பு முறையின் அவசியத்தை விளக்க நான்கு காரணிகள் தருக. *(04 புள்ளிகள்)*

1. காலநிலை அறிவித்தல்களும், நவீன விவசாயத் தகவல்களும் விவசாயம் சிறந்த முறையில் மேற்கொள்ள உதவும்.

2. காலநிலை பற்றிய முன்னறிவித்தல்கள் மீனவர்களின் பாதுகாப்பிற்கு உதவும்.

3. வானொலி, தொலைக்காட்சிச் சேவைகள் கல்வி கலாசார நிகழ்ச்சிகளையும், அவசர செய்திகளையும், பல்வேறு இன மக்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளையும் மக்களுக்கு அறிவிப்பதன் மூலம் சமூக வளர்ச்சிக்கு அபிவிருத்திக்கும் உதவுகின்றன.

4. நவீன கண்டுபிடிப்புகள் பற்றிய விஞ்ஞானத் தகவல்கள் திட்டமிடுவோருக்கு உதவியாக அமையும்.

*(iii)* வளிமண்டலத்துடன் தொடர்புடைய சூழல் பிரச்சனைகள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக. *(05 புள்ளிகள்)*

**1. பச்சை வீட்டு விளைவும். பூமி வெப்பமாகுதலும்:**

காபனீரொக்சைட்டு. நைதரசன்.. மீதேன்ஒக்சைட் ஆகிய பச்சைவீட்டு வாயுக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செறிவு வளிமண்டலத்தில் அதிகரிப்பதால் பூமி வெப்பமாகுதலும் அதிகரிக்கும்.

விஞ்ஞானிகளின் கருத்துப்படி கைத்தொழிற்புரட்சி ஆரம்பித்த 1750 ஆம் ஆண்டிலிருந்த பூமியின் சராசரி வெப்பநிலையிலும் பார்க்க 2030 ஆம் ஆண்டில் $2^{\circ}C$ உயர்ந்துவிடும் என மதிப்பிடப்பட்டுள்ளனர்.

பூமியின் வெப்பநிலை அதிகரி... ...ள்ள மண்ணு ம் எல்லாப் பொருள்களும் விரிவடையும். கடல்களிலுள்ள நா வா/வடைந்து நீரின் கனவளவு அதிரிக்கும். கடல்மட்டம் உயரும். தென்துருவத்திலும் வடதுருவத்திலும் உயர்ந்த மலை உச்சிகளிலும் படிந்துள்ள பனிக்கட்டிகள் உருக்கிக் கடல் நீருடன் சேரும். இது கடல்மட்டம் மேலும் உயர வழி வகுக்கும். கடற்கரையில் உள்ள பல நகரங்கள். துறைமுகங்கள் உபயோகிக்கமுடியாது போகலாம். மாலைதீவு முற்றாகக் கடலில் மூழ்கலாம். இலங்கையில் யாழ்குடாநாடு. தென்மாகாணம். மேல்மாகாணம், கிழக்கு மாகாணம் கடலால் விழுங்கப்படலாம்.

பூமியின் மேற்பரப்பு வெப்பமாக அதற்கு மேலே உள்ள வளியும் சூடாகும். இதனால் உலகின் காற்றோட்டக் கோலங்களும். காலநிலையும் பாதிப்படையும்.

**2. வளிமண்டல ஓசோன் குறைதல்:**

கடல் மட்டத்திலிருந்து 15–30 கிலோமீற்றர் உயரத்தில் ஓசோன் வாயுப்படை உள்ளது. ஓசோன் படையில் ஓட்டை விழத்தொடங்கியது 1987ல் அவதானிக்கப்பட்டது. பின்னர் ஓசோன் திரையின் ஓட்டைப் பெரிதாகிக் கொண்டு வருவதாகக் கணிக்கப்பட்டது.

1992ல் நடாத்திய அவதானிப்புகளில் தென்துருவப் பகுதிகளில் ஓசோன் படையின் செறிவு குறைந்து வருவது கண்டுபிடிக்கப்பட்டது.

ஓசோன் படை குறைவதற்கு 1920ல் விஞ்ஞானிகள் தயாரித்த இரசாயனப் பதார்த்தங்கள் காரணம் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த இரசாயனப் பதார்த்தங்கள் குளோரோ புளோரோ காபன்கள் எனப்படுகின்றன.

ஓசோன்படை அழிவதால் பூமியின் மீது விழும் சூரியன் ஊதா கடந்த கதிர்வீச்சின் அளவு அதிகரிக்கும். மனிதனுக்கு தோற் புற்றுநோய். கண்களில் கற்றாக்நோய். நோய் தடுப்புச் சக்திகள் உடலில் குன்றதல் ஏற்படும். தாவரங்களின் ஒளித்தொகுப்புக் குன்றுதலால் வளர்ச்சி குன்றும். கனடாவில் மொன்றியலில் நடத்தப்பட்ட சர்வதேச ஒப்பந்தத்தில் 2000ம் ஆண்டில் குளோரோ புளோரோ காபன்கள் உபயோகத்தினை நிறுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

*(iv)* காடழிப்பதனால் ஏற்படும் விளைவுகளை விளக்குக. (06 புள்ளிகள்)

மனிதஇனம் தோன்றிய காலத்திலிருந்தே மனிதன் காடுகளுக்கு தீங்கு விளைவித்து வருகின்றான். முதலில் காடுகளை எரித்து விலங்குகளை தான் கட்டிய வலைப்பக்கமாக விரட்டுவான். பின்னர் காடுகளை வெட்டி காணியாக்கி பயிர் செய்தான். சனத்தொகை பெருக காடுகளை வெட்டி சேனைப் பயிர்ச்செய்கை ஆரம்பித்தான். பிறகு விறகு. கட்டடத் தேவைகளுக்காக மரங்களைத் தறித்தான்.

இன்று மேற்கு ஐரோப்பாவிலும். ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் கிழக்குப் பகுதியிலும் காடுகள் இல்லை. ஐரோப்பாவில் ருஷியாவில் மட்டும்தான் இடைவெப்பநிலைக் காடுகளும் வடதுருவக் காடுகளும் உள்ளன. மக்கள் போகமுடியாமல் இருப்பதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை தப்பிப் பிழைத்துள்ளன. நியூஸிலாந்தில் தென்துருவக் காடுகள் பல அழிக்கப்பட்டுவிட்டன. இலங்கையைப் போன்று 3 மடங்கு பரப்புள்ள அயனமண்டலக் காடுகளும் அழிக்கப்பட்டு வருகின்றன. பசுபிக் கரை தொடக்கம் அத்திலாந்திக் கரை வரை பரந்திருந்த அயனமண்டல அமேசன் மழைக்காடுகளில் பெரும்பகுதி அழிக்கப்பட்டுவிட்டன. இதனால் காலநிலை பாதிக்கப்படுகின்றது.

காடழிப்பால் பூமியில் உள்ள 5 முதல் 10 மில்லியன் வரையிலான தாவர இனங்கள், 15 மில்லியன் விலங்கினங்கள் (இவற்றில் 8 மில்லியனுக்குமேல் பூச்சியினங்கள்) பாதிப்படையும். மழைக்காடுகள் பூமியின் நிலப்பரப்பில் 7%த்தைப் பிடித்தாலும் உலகின் உயிரினங்களில் அரைவாசிக்கு மேல் கொண்டுள்ளது. பனாமா நாட்டின் நிலப்பரப்பு சிறியதாக இருந்தாலும் அங்குள்ள மழைக்காடுகளில் ஐரோப்பாவிலுள்ள உயிரின ங்களின் தொகைக்குச் சமமான உயிரினங்களை அந்நாட்டு கொண்டுள்ளது. பனாமா நாட்டின் காடுகள் அழிக்கப்பட்டால் பெருந்தொகை உயிரினங்கள் பாதிப்படையும். காடழிப்பு உயிரினங்களின் சமநிலையையே பாதிக்கும்.

*(10) (i)* வளி மாசடைவதால் உண்டான தீய விளைவுகள் 3 தருக. (03 புள்ளிகள்)

1. பச்சை வீட்டு விளைவு 2. ஓசோன் குறைதல் 3. அமிலமழை

*(ii)* வளி மாசடந்தமையால் ஏற்பட்ட விபத்துக்களுக்கு 4 உதாரணங்கள் தருக. (04 புள்ளிகள்)

1. 1930 டிசம்பரில் பெல்ஜியத்திலுள்ள மெயூஸ் பள்ளத்தாக்கில் படிந்த புகைமண்டலத்தால் 63 பேர் இறந்தனர். 6000 பேர் நோயுற்றனர்.

2. 1948 அக்டோபரில் அமெரிக்காவில் பென்சிலேனியாவில் படிந்த புகைமண்டலம் 20 பேரை பலிவாங்கியது. 14000 பேர் நோயுற்றனர்.

3. 1952 டிசம்பரில் லண்டனில் வளி மாசடைந்து 5 நாட்களில் 4000 பேர் இறந்தனர்.

4. இந்தியாவில் போபல் பூச்சிகொல்லித் தொழிற்சாலை நளச்சு வாயுக்கள் வெளியேறியதில் ஏற்பட்ட பாதிப்புகள்.

5. சோவியத் யூனியனில் சேர்னோபில் அணு மின் உற்பத்தியில் ஏற்பட்ட கதிர்வீச்சுக் கசிவுப் பாதிப்பு.

*(iii)* மண்ணரிப்புக்கு மனித நடவடிக்கைகள் எவ்வாறு காரணமாகின்றது என்பதை விளக்குக. (05 புள்ளிகள்)

1. பயிர்ச்செய்கை 2. கனிப்பொருள்களைத் தோண்டி எடுத்தல். 3. காடழித்தல் 4. மனிதக் குடியிருப்பு ஆகிய மனித நடவடிக்கைகள் மண்ணரிப்புக்கு காரணமாகின்றன.

மண்ணு க்குப் பொருத்தமற்ற பயிர்ச்செய்கை முறைகள். மூடு தாவரங்களை வெட்டுதல். மலைச் சாரலிலுள்ள புல்லையும் தாவரங்களையும் அகற்றல் மண்ணரிப்புக்கு வழிவகுக்கும்.

சேனைப் பயிர்ச்செய்கையில் மரங்களை வெட்டி மண்ணைக் கொத்தும் போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணரிப்பு அதிகமாகும். சேனைப் பயிர்ச்செய்கை மலைச்சாரல்களில் மேற்கொள்ளப்பட்டாலும். மரங்கள் தறிக்கப்பட்டாலும் மண்ணரிப்பு அதிகமாகும். இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட மண்ணரிப்புச் சம்பவங்களுக்கு இதுவே மூலகாரணமாக அமைந்தது.

(*iv*) நீர் மாசடைதலுக்கு [illegible]விருத்தி நடவடிக்கைகள் எவ்வாறு காரணமாகின்றது என்பதை விளக்குக. (06 புள்ளிகள்)

நிலத்தின் மேற்பரப்பிலுள்ள நீர் மாசடைவதற்கு நகரத்தின் கழிவுப் பொருள் குழாய்கள் மூலம் வரும் மாசும், கைத்தொழில் கழிவு நீர் குழாய்கள் மூலம் வரும் மாசும். விவசாயக் காணிகளிலிருந்து வரும் பூச்சிகொல்லிகள் நீர் நிலைகளை அடைதல் மூலம் வரும் மாசும் உதாரணங்களாகும்.

நிலத்தின் கீழுள்ள நீர் மாசடைவதற்கு கைத்தொழில் கழிவுகளின் இரசாயனப் பதார்த்தங்கள் நிலக்கீழ் நீரில் சேருதல், மழைநீர், நீர்நிலைகளை அடைதல் மூலம் வரும் மாசும் உதாரணங்களாகும்.

நிலத்தின் கீழுள்ள நீர் மாசடைவதற்கு கைத்தொழில் கழிவுகளின் இரசாயனப் பதார்த்தங்கள் நிலக்கீழ் நீரில் சேருதல். மழைநீர். நீர்நிலைகளில் தங்கும் மாசுபட்ட நீர் நிலத்தில் சுவறுவதனால் மாசுபடும். பொதுவாக நீர் நிலைகளிலுள்ள நீர் மனிதனின் மூன்று முக்கிய நடவடிக்கைகளான கைத்தொழில் நவடிக்கை. விவசாய நடவடிக்கை நகரமயமாதல் ஆகியவற்றால் மாசுபடுகின்றது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு கல்விச்சேவை வெளியீடு

## இந்நூலாசிரியரின் ஏனைய நூல்கள்

### G. C. (O/L) பரீட்சைக்கு ஏற்ற நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| வரலாறு | ஆண்டு 11 | குறிப்புகள் | (6ம் பதிப்பு) |
| வரலாறு | ஆண்டு 10 | குறிப்புகள் | (6ம் பதிப்பு) |
| சமூகக்கல்வி | ஆண்டு 10 | குறிப்புகள் | (6ம் பதிப்பு) |
| வரலாறு | ஆண்டு 9 | குறிப்புகள் | (5ம் பதிப்பு) |
| சமூகக்கல்வி | ஆண்டு 9 | குறிப்புகள் | (5ம் பதிப்பு) |

**வரலாறும் சமூகக்கல்வியும் ஆண்டு 8**

வினா-விடைகள், குறிப்புகள் / செயற்பாடுகளுக்கு விடைகள் (4ம் பதிப்பு)

**வரலாறும் சமூகக்கல்வியும் ஆண்டு 7**

வினா-விடைகள் / செயற்பாடுகளுக்கு விடைகள் / தவணைப் பயிற்சிகள்

**வரலாறும் சமூகக்கல்வியும் ஆண்டு 6**

வினா-விடைகள் / செயற்பாடுகளுக்கு விடைகள் / தவணைப் பயிற்சிகள்

ஆக்கம் - நா. மயில்வாகனம்

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

[illegible] 195, Wolfendhal St. Col-13. Tel: 330588, 448545

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org